Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

மார். 22 - 28, 2007

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 705

## சர்வதேச மட்டத்தில் எதிரொலிக்கும் கிழக்கு அகதிகளின் அவலங்கள்!



## பயங்கரவாதத்தின் பங்காளிகளாகும் சிங்களப் புலிகள்!



பாடும் நிலாவின் சாதனைப் பயணம் -புதிய தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## ஆன்மீகம்

### பூஜையும் மத போதனையும் அவசியம்

இந்து ஆலயங்களில் இடம் பெறும் பூஜை நிகழ்வுகள் யாவும் புனிதம் நிறைந்ததாகவும், அருள் சுரக்கும்படியான "தூய மணம் கமழும், பக்தி பரவசத்தை ஏற்படுத்தும்" சம்பவங்களாகவும் பூஜையாரம்பம் முதல் முடிவுவரை நடைபெறக் காணலாம்.


நிம்மதி வேண்டி ஆலயம் செல்லும் பக்தர்கள் "உடல், உள்ளத் தூய்மையுடன்" செல்லும்போதுதான் ஆலய தரிசனத்தில் "அமைதியும் ஆனந்தமும்" கிடைக்கும்.

ஆலயப் பூசகர், அறங்காவலர்கள் எப்பொழுதும் அன்புள்ளம் கொண்டவர்களாக இருப்பதுடன், ஆசார சீலர்களாகவும் விளங்கவேண்டும். அத்தோடு அவசியம் ஆன்மீக ஞானமுள்ளவர்களாகவும் மிளிர வேண்டும்.

இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள அர்த்தமுள்ள தத்துவங்களை ஆலயங்களுக்கு வரும் பக்தர்களுக்கு வாரமொரு தடவையாவது போதனை செய்ய வேண்டிய பொறுப்பு, ஆலய நிர்வாகிகள் அல்லது ஆலயக் குருக்கள்மாருக்கு இருக்கும் பணியாக கடைப்பிடிக்க வேண்டும்.

தற்போதைய சூழலில் இந்த நடவடிக்கை அவசியமானதொன்றாகும். பூஜையுடன் மதபோதனையும் அவசியமே!

**சிவஸ்ரீ அ.அரசரெட்ணம் ஐயர், சேனையூர்.**



### இல்லத்திற்கு ஒரு நற்செய்தி!

குடும்பங்களை ஆன்மீக வளர்ச்சியில் வளர்த்துக் கொண்டு வருகின்றது எம் தாய் திருச்சபை. குடும்பம் என்பது மானிட சமூகத்தின் திருவுளப்படி நடக்க இவ்வுலகில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் என்பதை நாம் மறத்தலாகாது. சமுதாயத்தில் திருமணத்தையும், குடும்பத்தையும் தாக்குகின்ற தீய சக்திகள் பலவுள்ளன. இவ்வாறான தீய சக்திகளை எதிர்த்து, நன்னெறியில் நடந்து ஒவ்வொரு குடும்பமும் ஒளியாக, உப்பாகத் திகழ வேண்டும். ஆனால் வாழ்க்கை எப்போதும் புனித வாழ்வாக அமைவதில்லை. மாறாக புனித வாழ்வு எப்போதும் போராட்டமாகவே அமையும்.

ஒரு குடும்பம் அன்பின் சின்னம், சிகரம். அது அன்பை பாதுகாக்கின்ற, அன்பை அறிக்கையிடுகின்ற, அன்பை பகிர்ந்து கொள்ளுகின்ற பணிப்பொறுப்பைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தின் மாண்மையும், பொறுப்பையும் வரையறுத்து செயற்படுத்தல் அவசியம். இவை எப்போதும் ஆள் நிலை சார்ந்த உறவுகளால் அமைந்ததொரு சமூகமாகத் திகழவும், உயிரைப் பேணவும், சமூக வளர்ச்சியில் பங்கேற்கவும் திருச்சபையின் வாழ்விலும் பணிப்பொறுப்பிலும் பங்கேற்க வேண்டும் எனக்கூறும் எம் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் கூற்றுக்கு ஏற்ப வாழ முற்படுதல் அவசியம். இறையாசியால் ஒப்பற்ற விதத்தில் உயர்வாக, புனிதமாக போற்றிப் புகழும் குடும்பமான திருக்குடும்பத்தின் தூய ஆவியின் வரம் கேட்போம்.

**- ஜி. நீற்றா, வாழைச்சேனை.**

### மௌனம் கொள்ளுங்கள்!

மௌனமாக இருப்பது சற்றுக் கடினம்தான். ஆனால் அது இறை நேசர்களுக்குக் கைவந்த கலையாகும். அந்தக் கலையின் வலையில் நாம் வீழ்ந்து விட்டோமானால், இகபரத்தில் நாம் உயர்ந்த நிலையை அடையலாம். இந்த நாவு இருக்கிறதே, இது மிகவும் பொல்லாதது. ஆறு அங்குல நீளமுள்ள இந்த நாக்கை ஆரம்பத்திலேயே அடக்கி ஆளாவிட்டால் ஆறடி நீளமுள்ள மனிதனையும் வீழ்த்திவிடும்.

மௌனத்தின் மாண்பு பற்றி நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய சிலவற்றைப் பார்ப்போம்.

நாவின் பத்தினித்தனம் வாய்மூடி மௌனமாய் இருப்பதாகும்.

வாய்மூடி இருப்பது இஸ்லாத்தின் தலை போன்றதாகும்.

ஈமானின் பக்தர்களுக்கு இறைநேசமும் கிரீடமும் வாய்மூடி மௌனமாக இருப்பதாகும்.

ஒரு ஆலிம் மார்க்க விஷயத்தில் மௌனமாய் இருப்பது குற்றமாகும். அவர் பேசுவது சிறப்பாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் நாவைப் பிடித்துக் கொண்டு, இதை (தீயவழியில்) உபயோகிக்காமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அல்ஹதீஸ்

**-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07**

## கவிதைப் போட்டி இல.702




**பாராட்டுக்குரியது**


### யுத்தமேற்படுத்திய வடு

யுத்தமில்லாத
யுத்தத்தினால்
இடம்பெயர்ந்தவர்களில்
அன்னை, தந்தையை
ஆதரவுகளை
இழந்த அகதிச் சிறுவனின்
அழுகைத் தோற்றமிது!

*- கவிக்குயிலன், சேனையூர்.*




## கவிதைப் போட்டி இல.705



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 27.03.2007.

கவிதைப் போட்டி இல.705
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தேசாபிமானியின் ஏக்கம்

என் தேச திண்ணையிலே
யுத்த சூழலிலே
இடர்படும் பிரதேசத்தில்
பச்சிளம் பாலகன்
படும் பாட்டை பார்த்தாவது
பற்றி எரியும்
நம் நாடு
பசுமையாக மாறக்கூடாதா?

*-ஏ.எல்.எம்.ரமீஸ், ஏறாவூர் - 02.*

### வரட்சி!

குடிமகனுக்கு
குடிநீருக்குத்
தட்டுப்பாடு
காரணம்
சமாதான
பூமியில்
கடும் வரட்சி!

*- சோலைக்குயில் ஹஸனி, கல்முனை - 07.*

### சீர்மையாளர் செயல்

சிறுவர்களை
சேனையில்
சேர்த்துக்கொள்ளும்
சீர்மையாளர்கள்
ஏழை இவனை
எதிர்கொள்ளவில்லை போலும்
பார்த்திருந்தால்
பலாத்காரமாக
படையில்
சேர்த்திருப்பர்!

*- ஏ. எம். அல்அப்ஸர், ஏறாவூர்.*

### தீராத அவலம்

தீவிரவாதமெனும்
தீராத தொழுநோய்
அவனியை விட்டும்
அகலும் வரை
இத்தகையோரின்
அவலமும்
இருக்கத்தான் செய்யும்.

*- க. அல்- ஆஸாத், ஏறாவூர் - 03.*

### அழுகையும் சிரிப்பும்

பசியால் துடிக்கும்
பாலகர்கள்
கதறிக் கதறிக்
கையேந்துவர்
உள்நாட்டில்
உண்டு மகிழும்
எம் தலைமைகளோ
சிரித்துச் சிரித்துக்
கையேந்துவர்
வெளிநாட்டில்.

*-அ.சந்தியாகோ, கண்டி.*

### இறைவா...

ஊரை இழந்தேன்
உறவை இழந்தேன்
உணவை இழந்தேன்
குடிக்க நீரையும் இழந்தேன்
என்னையும் இழக்கிறேன்
இதற்கு மட்டும் கைகள் இல்லையா
இறைவா!

*- ஏ. எம். நௌபர், செங்கலடி.*

### எங்கே?

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான் எங்கே?
விடையேறி வந்து பால் ஈந்த
தோடுடைய செவியன் மனையாள் எங்கே?
தன்னலம் பாராது உழைப்பதாகக் கூறும்
தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எங்கே?
தண்ணீரைக் குடித்து, கண்ணீராய் வடிக்கும்
இவ் அகதிச் சிறுவனின் பசிபோக்க.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### எதை எண்ணி அழுகிறாய்

சிறுமியே - நீ
பிச்சை கோலத்தில்
பிறந்து நிற்பதை எண்ணி
அழுகிறாயா?
அல்லது எம்நாடு
அந்நிலையை
அண்மித்து வருவதை எண்ணி
அழுகிறாயா?

*- கோபி, நுவரெலியா.*

## உங்கள் பக்கம்

### ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு அருகில் வெளிச்சத்துக்கு வராத சங்கதிகள்

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட 'கொட்டாரோட் ஆயுர்வேத ஆஸ்பத்திரி' க்கு அருகில் நீண்டு செல்லும் பாதை 'கோதமிபுர' குடியேற்றத்திட்டத்தையும், கோதமிரோட், ஒபயசேகரபுர போன்ற ஏனைய இடங்களையும் நோக்கிச் செல்கிறது. கிட்டத்தட்ட இப்பகுதியில் ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்பாதையால் இரவு, பகல் பயணிக்கிறார்கள்.

இந்தப் பாதை 'கொட்டாரோட் ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு அருகில் ஆரம்பித்து' கோதமிபுர குடியேற்றத்திட்ட ஆரம்பித்து இடையில் சுமார் 300 யார் தூரம் வரை எந்தவித மின் விளக்குகளுமின்றி இரவு 7 மணிக்கே கும்மிருட்டாகிவிடுகிறது. இதனருகில் கழிவுக் கால்வாய் ஒன்று ஐந்தாறு மைல்களுக்கு மேல் நீண்டு ஓடிக்கொண்டிருக்கிறது. இப்பாதையில் மின்வெளிச்சமின்மையால் எத்தனையோ பேர் வேலை முடிந்து வீடு வருகையில் இக் கால்வாய்க்குள் விழுந்திருக்கிறார்கள். சிலர் விழுந்து இறந்துமிருக்கிறார்கள்.

இது மாத்திரமின்றி வெளிச்சமின்மையால் இப்பாதையின் நடுவில் இரவு நேரங்களின் விபச்சாரம் நடைபெறுகிறது. அத்துடன் காதலர்களின் களியாட்டகூடமாகவும், பிக்பொக்கட் காரர்களின் குகையாகவும் இது இரவு நேரங்களில் திகழ்கிறது. இரவு நேரங்களில் இப்பாதையைப் பயன்படுத்த சிலர் பயந்து, நீண்ட தூரம் நடந்து சென்று, ஒபய சேகரபுர ஊடாக இக்குடியிருப்புக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

எனவே தயவு செய்து மின்சாரசபையும், மாநகரசபையும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, கொழும்பின் கேந்திர ஸ்தானமாக விளங்கும் இவ்விடத்தில் இம்மாதிரியான துர்நடத்தைகள் நடைபெறுவதைத் தடுக்க, பொதுமக்களுக்கு மின் விளக்கு வசதியை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகின்றனர்.

*பொதுமக்கள் சார்பாக,*
*எஸ்.ராம்,*
*கோதமிபுர.*


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


## வாசகர் சாலை

### அமுதம் சுமந்து வரும் முரசுக்கு வாசகனின் வேண்டுதல்!

அற்புதனின் வாரிசே
அமுதம் சுமந்து வரும்
அழகிய தினமுரசே
உனக்கு என்
மனத்தில் எழுந்த
மகிழ்ச்சி ததும்பும்
தமிழ் புத்தாண்டு இனிய
முத்தான வாழ்த்துக்கள்!

கடந்த இரண்டாயிரத்தி ஆறாய்
தடைகள் பல தாண்டி
வாசகர் செஞ்சங்களில்
மகிழ்ச்சி பொங்க
தடம் பதித்து விட்டாய்
சபாஷ்! முரசே சபாஷ்!

மதியூகியாரே - உனது
யூகம் "புதுவியூகமே"
எதுவும் பொய்க்கவில்லை!
நீ அறிகின்ற
எழுத்துக்கள் ஒவ்வொன்றும்
பழுதற்றவை!

அழுத்துகின்ற கருப்பொருட்கள்
அற்புதனை நினைவூட்டுகின்றன!
மாற்றான் தோட்டத்து
மல்லிகையும் மணம் பரப்பும்
இதை மறவாது
உண்மையை உள்ளபடி
கண்ணிமைபோல் பாதுகாக்க
[illegible]!

அள்ள அள்ளக் குறையாத
அமுதபானம் தமிழ்!
இயல், இசை, நாடகம்
முத்தமிழும்
இலங்க "முரசு"
இரண்டாயிரத்தி ஏழில்
ஏற்றமுடன்
ஏறுபடி நடக்கவும்.

சுழலுகின்ற பூமியானது
உழலுகின்ற மக்களுக்கு
கலங்கமற்ற வாழ்வுக்கு
மும்மதக் கருத்துக்களை
விளக்கமாகத் தரும் பணி
மேலும் மெருகேற்றவும்.

குறுங் கவிதை, நெடுங் கவிதை
தொடர் கதைகள்
துணுக்குகள், சிறு
கதைகள் எல்லாம்
சூப்பரோ சூப்பர்!
சூடு, சுவை, சுவாரசியம்
தாங்கி வரும் முரசு ஏடே!
நீ எப்போதாகிலும்
நடுநிலைமை மாறாமல்
ஏறுபோல் நடைபோடு!

*- கவிக்குயிலன், சேனையூர் - 06*


### தினமுரசே!

தினமுரசு வாரமலரின் பிரியமான வாசகன் நான் எழுதிக் கொள்வது என்னவெனில், இலைமறை காயாக இருக்கும் எத்தனையோ உள்ளங்களின் திறமைகளை பக்கம் பக்கமாக வெளிக் கொண்டு வரும் தின முரசின் சேவை அளப்பரியதாகும். என் இனிய முரசுக்கு என் இதயம் திறந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சூடு, சுவை, சுவாரஸ்யம் எனப் பல விடயங்களைத் தாங்கி வரும் தினமுரசிற்கு வாழ்த்துக்கள்!

*- S. பங்கஜன், மட்டக்களப்பு.*

# கிழக்கில் கட்டாய மீள்குடியேற்றங்கள்; ஏட்டிக்குப் போட்டியாக வெளிவரும் கருத்துக்கள்!

திருகோணமலையிலுள்ள யுத்த வலயப் பகுதிகளிலிருந்து உயிருக்குப் பாதுகாப்புத் தேடி மட்டக்களப்பில் தஞ்சமடைந்த தமிழ் அகதிகளைப் பலவந்தமாக மீளக்குடியேற்ற முயற்சி எடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்ட அகதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருகோணமலையில் சிவில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான, ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவரின் உத்தரவின் பேரில் பல நூற்றுக்கணக்கான அகதிகள் வலுக்கட்டாயமாக பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். இந்த நடவடிக்கைக்கு திருமலையைச் சேர்ந்த சிங்களம் பேசும் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் ஒருவர் தலைமை தாங்கியதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 முகாம்களுக்குச் சென்ற திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸாரும் உள்ளூர் படையினரும் இணைந்து இந்தத் திட்டமிட்ட நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் பாதிக்கப்பட்ட அகதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மட்டக்களப்பிலுள்ள சிவில் அதிகாரிகளுக்குத் தெரியாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கை ஜெனீவாவரை எதிரொலித்திருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சவளக்கடை, ஐயன் கேணி, பாலச்சோலை, கிரிமுட்டி, கிரான் ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களுக்குக் கடந்த 15ஆம் திகதி மத்தியானமளவில் பஸ்களைக் கொண்டுசென்று அகதிகள் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றார்கள் என்று குற்றம் சாட்டப்படுகின்றது.



அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் ஜெனீவாவில் இது குறித்துக் குரல் எழுப்பியிருந்தார். அகதிகள் பலவந்தமாக மீளக்குடியமர்த்தப்படுவதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் கேட்டிருந்தது. முக்கிய அதிகாரியொருவர் அவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றதாக ஏற்றுக் கொண்டுள்ளார் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இடைத்தங்கல் முகாம் ஒன்றுக்கு சில அகதிகள் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்ததாக அத்தினசரி குறிப்பிட்டுள்ளது. இருந்தபோதிலும் முக்கிய அமைச்சர்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர.

புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்ததனாலேயே அரசாங்கப் படைகள் பதிலடி வழங்குவதாகக் கூறப்படுவதில் உண்மை இருக்கலாம். தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோம் என்று கூறி புலிகள் படையினர் மீது தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர். இதற்காக அப்பாவித் தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகவும் பயன்படுத்தி வருகின்றனர். மறுதரப்பில் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான யுத்தமென்றும் கூறப்படுகின்றது. இந்த இரு தரப்பினரும் எதனைச் சொன்னாலும் உண்மையில் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே யென்று மட்டக்களப்பு செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

யுத்த வலயப் பகுதிகளிலிருந்து தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அபயம் தேடியே அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்த மக்கள் தஞ்சமடைகின்றனர் என்பதே உண்மை. யுத்தத்தில் சம்பந்தப்படாத இந்த மக்கள், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினரையும் சாராதவர்களாவர். யுத்தத்திற்குப் பயந்தே இந்த மக்கள் மீளக் குடியேற தயங்குகின்றனர். ஆகவே அப்பாவி மக்களை வலுக்கட்டாயமாக மீளக்குடியமர்த்துவது தவறானது என்றும் அவர் சொன்னார்.

## வலது குறைந்தவர்களுக்கு உதவவென தொழில் வாய்ப்பு வங்கி

வலது குறைந்த நபர்களுக்கான தொழில் வாய்ப்பு வங்கியொன்றினை நிறுவுவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசாங்க நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகளில் வலது குறைந்தவர்களுக்கு மூன்று சதவீத நியமனங்களை ஒதுக்கித் தரும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அரச தொழில் வாய்ப்புகளைத் தேடி இதுவரை 200 விண்ணப்பங்கள் வலது குறைந்தவர்களிடமிருந்து கிடைத்துள்ளதாகவும், அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பாகவும், அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். இதற்கிடையில் அமைச்சரின் முயற்சியையடுத்து, பொது இடங்களில் வலது குறைந்தோர் பிரவேசிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தும் வருடமாக இவ்வருடம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து தபாற்கந்தோர், ரயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களில் வலது குறைந்தோருக்கான வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள 180 தபாற்கந்தோர்களில் வலது குறைந்தவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றியும், செவிப்புலனற்றவர்களுக்கு சைகை மொழிகளைப் பயன்படுத்துவது பற்றியும் அறிவுறுத்துவது தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வலது குறைந்தவர்களுக்கான மலசல கூடத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கே செவிப்புலனற்றவர்களுக்கு மொனிட்டர் இயந்திரங்களைப் பயன்படுத்தும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப் படவிருக்கின்றது. அத்துடன் பொது இடங்களில் வலது குறைந்தோர் பிரவேசிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக மத்திய மற்றும் மாகாண சபை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையில் மட்டக்களப்பு செவிப்புலன் வலுவற்றோர் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பில் அண்மையில் அமைச்சரைச் சந்தித்து தமது தேவைகள் குறித்து எடுத்துரைத்தனர். இதன் பயனாக கணனிகள், தையல் இயந்திரங்கள், குத்து விளக்குகள், அலுமாரிகள், தட்டெழுத்து இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்படவிருக்கின்றன. மட்டக்களப்பிலுள்ள தரிசனம் விழிப்புலனற்றோர் நிலையத்திற்கு ஏற்கனவே ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சுமுகமாக செயற்பட அனுமதிக்குமாறு கோரிக்கை

மூன்று மாதங்களுக்கு முன்னர் சீர்குலைக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் விளைவிக்க வேண்டாமென்று மோதல்களோடு சம்பந்தப்பட்ட தரப்பினரை மாணவர்களும் கழகப் பேராசிரியர்களும் கேட்டுள்ளார்கள். பிரதி உயர் கல்வி அமைச்சர் மயோன் முஸ்தபா தலைமையில் அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க பல்கலைக்கழகம் கடந்த 19ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது. கடந்த டிசம்பர் மாதம் 15ஆம் திகதி உபவேந்தர், பேராசிரியர் ரவிந்திரநாத் கொழும்பில் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப் பட்டதையடுத்து மாணவர்கள் அவரை விடுவிக்கக் கோரி பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஜனவரி மாதம் 29ஆம் திகதி மீண்டும் பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட போதும், இரு நாட்கள் கழித்து பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலையடுத்து மீண்டும் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. இதன் எதிரொலியாக மாணவர்கள், விரிவுரையாளர்கள் பாதுகாப்பு ஊழியர்கள் விசாரணைகளுக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் நால்வர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான குண்டுத் தாக்குதல்களை பல்கலைக்கழக அயலில் நடத்த வேண்டாம் என்று கல்விச் சமூகம் புலிகள் இயக்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## பொஸ்ரன் ஈழத் தமிழர் சங்க தலைவர் குறித்து விசாரணை

அமெரிக்காவின் பொஸ்ரன் மாநிலத்திலுள்ள ஈழத் தமிழர் சங்கத்தின் தலைவரான ஸ்ரீ தில்லையம்பலம் என்பவர் அமெரிக்க மத்திய சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்று "பொஸ்ரன் குளோப்" என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர், ஈழத் தமிழர் சங்கம் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக பொஸ்ரனில் செயற்பட்டு வருகின்ற போதும் இன்னமும் பதிவு செய்யப்படவில்லையென்று கூறப்படுகின்றது. 1980களில் புலி இயக்கத்திற்குச் சார்பாக தீவிரமாகச் செயற்பட்டவரான ஸ்ரீ தில்லையம்பலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராவார். அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாநில சபையின் தமிழீழத்துக்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு தான் பின்னணியிலிருந்து செயற்பட்டவரென்று அப்போது தில்லையம்பலம் மார்தட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கடந்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம, அமெரிக்காவில் இயங்கி வரும் தமிழர்களின் சில கலாசாரச் சங்கங்கள், புலிகள் இயக்கத்திற்கு உதவி வருகின்றன என்று குற்றம் சாட்டியிருந்தார். அமெரிக்காவில் இயங்கும் தமிழர்களின் தொண்டர் அமைப்புகள் குறித்தும் குறிப்பாக வடஅமெரிக்காவின் தமிழ் சங்க சம்மேளனம் குறித்தும் நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொண்டலீசா ரைஷை அமைச்சர் போகொல்லாகம கேட்டிருந்தார் என்று 'பொஸ்ரன் குளோப்' செய்தி வெளியிட்டிருந்தது. பொஸ்ரனிலுள்ள ஈழத் தமிழர் சங்கம், புலிகளின் முகவர் அமைப்பு அல்லவென்று அச்சங்கத்தின் உபதலைவரான பழனி நடராஜா என்பவர் தெரிவித்தார் என்றும் பொஸ்ரன் குளோப் தெரிவித்திருந்தது.

## ஆயுதக் கடத்தல்; தமிழகத்தில் முக்கிய நபர் கைது! மூன்று இலங்கைத் தமிழர்களைத் தேடி வலை விரிப்பு!


புலிகளுக்கு தமிழ் நாட்டிலிருந்து ஆயுதம் கடத்தி வந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட அருள்சீலன், ராகுலன் ஆகியோர் கொடுத்த தகவல்களையடுத்து மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ் நாடு மண்டபம் பகுதியைச் சேர்ந்த முனியாண்டி என்ற 55 வயது நபர் தமிழகக் கியூப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' என்ற ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்திருக்கின்றது. கடத்தல் படகின் உரிமையாளரான இவரே கடத்தலுக்கு முக்கிய நபரென வர்ணிக்கும் தமிழகப் பொலிஸார், இலங்கைக்கு வெடிமருந்துகளை ஏற்றிச் செல்வதற்கு இவர் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். சில தினங்களுக்கு முன்னர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நாகாச்சி என்ற இடத்தில் கைது செய்யப்பட்ட கண்ணன் என்பவர் கொடுத்த தகவலையடுத்து மேலும் பலர் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. திருச்சியிலும் பெரம்பலூரிலும் கொள்வனவு செய்யப்பட்ட வெடிபொருட்களை வன்னிக்குக் கடத்திச் செல்வதற்கு முனியாண்டியின் படகுகளே பயன்படுத்தப்பட்டனவென்றும் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நரிப்பாயூர் என்ற கடலோரக் குக்கிராமத்திலிருந்து சிறு இரும்புக் குண்டுகள், உலோகக் கட்டிகள் ஆகியவற்றைக் கடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன வென்றும் பொலிஸார் தெரிவித்தனர். குண்டுகள் தயாரிப்பதற்கான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய லேத் இயந்திரங்கள் இலங்கைக்கு கடத்தப்பட்டுள்ளனவென்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இதற்கென நான்கு தொன் பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய படகுகள் பயன்படுத்தப்பட்டனவென்றும், இதேவேளை இக்கடத்தல் நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்ட மூன்று இலங்கைத் தமிழர்கள் தலைமறைவாகி விட்டனர் என்றும் அவர்களைத் தேடி வலைவிரிக்கப்பட்டுள்ளதாகவும் கியூபிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

## வடக்கு, கிழக்கு முன்னாள் அமைச்சருக்கு ஐ.நா.வில் பதவி

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்களில் ஒருவராக பணியாற்றிய தயான் ஜெயதிலக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். தற்போது ஜெனீவாவில் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் திருமதி சரளா பெர்னாண்டோவின் இடத்திற்கு இவர் நியமிக்கப்படவுள்ளார். வரதராஜப்பெருமாள் முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் தயான் ஜெயதிலக அமைச்சராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பின்னர் இவர் தானாகவே அமைச்சுப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். பிரபல அரசியல் விமர்சகரான இவர், பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வாவின் மகனாவர்.

## இந்தோனேஷியாவிலிருந்து ஆயுதக்கடத்தல்

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் புலி இயக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் இத் தருணத்தில், இந்தோனேஷியாவில் புலிகள் தமது செயற்பாடுகளை அதிகரித்திருக்கின்றனரா வென்ற சந்தேகம் இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எழுந்துள்ளது. அண்மையில் புல்மோட்டைக் கடலுக்கு அப்பால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் ஆயுதக் கப்பல்கள் இரண்டும், இந்தோனேஷியாவிலிருந்து வந்திருக்கலாமென்று விசாரணைகள் மூலம் தெரிய வந்ததையடுத்தே இச் சந்தேகம் எழுந்துள்ளது. சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொன் இடையுள்ள ஆயுதங்கள் கடத்திவரப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புத் துறையினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



அம்பாறை அறுகம்பை கடற்பரப்பில் சுமார் 190 கடல் மைல்களுக்கு அப்பால் நடமாடிய இக்கப்பல் புலிகளது ஆயுதக்கப்பலென இனங்காணப்பட்டு, இலங்கை கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட கப்பலைப் படத்தில் காண்கிறீர்கள்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### அடிப்படை வசதிகள் அகதிகளுக்கு அவசியம்!

*அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.*

இலங்கையில் மனித உரிமைகளை மீறும் சம்பவங்கள் முன்னெப்பொழுதையும் விட மிக அதிகமான அளவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது உண்மை. இந்த சம்பவங்களை மிகைப்படுத்திக் காட்டுவதிலும், அதை அரசின் பக்கம் தள்ளிவிட்டு சுயலாப அரசியல் நடத்தவும் எத்தனிக்கும் சமூகப்பொறுப்பற்றவர்களின் செயற்பாடுகளே மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளன.

குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதமாக குற்றச்சாட்டுக்களை ஒரு பக்கமாக தள்ளிவிடும் குருட்டுத்தனமான அரசியல் சித்து விளையாட்டுக்கள் முதலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

குற்றவாளி எந்தப்பக்கமிருந்தாலும் பாரபட்சமற்ற வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு, உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அதற்கு இடையூறாக எவர் இருந்தாலும், அவர்களையும் அம்பலப்படுத்த வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. அதிகாரத்தில் இருக்கும் அரசு என்ற அடிப்படையில் தனது கடமைகளிலிருந்து அரசும் தவற முடியாது. அரசின் மீது தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், சம்பவங்களும் நீடித்துக் கொண்டே போகிறது. இது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கத்தோடு சிலர் திட்டமிட்டு மனித உரிமை மீறல்களைச் செய்யவும் அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

இவ்வாறான, சதிகளை அம்பலப்படுத்தவும், சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு சட்டத்தின் மூலம் பதில் சொல்லவும் வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே அரசு இவ்வாறான சம்பவங்களை நீடிக்க விடாது, துரித கதியில் செயலாற்றி இப் பிரச்சினைக்குத் தீர்வைக்காண வேண்டும். மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களும், கண்டனங்களும் நீடிக்குமாயின், அரசின் எந்தச் செயற்பாடும் வீண் விரையமாகவே முடியும். அர்த்தமற்றதான ஒரு தோற்றத்தையே தரும்.

இதற்கிடையே கிழக்கில் இடம் பெயர்ந்து அகதிகளாகியிருக்கும் மக்களின் தேவைகளை முதன்மைப்படுத்தி அரச இயந்திரத்தின் செயற்பாடு முடுக்கி விடப்பட வேண்டும். பல அழுத்தங்களுக்கு மத்தியில், அரசின் உதவி நடவடிக்கைகள் ஓரளவுக்கு திட்டமிடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்த போதும், கவலையீனமான அரச அதிகாரிகளின் பதில்களும், செயற்பாடுகளும், இடம் பெயர்ந்து வந்த மக்களின் மனதை வெல்லக்கூடிய வகையில் இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் அரச அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுகின்ற போதும், அகதி மக்களைப் பராமரிப்புச் செய்கின்ற முறை பற்றி தமக்கு கொடுக்கப்பட்ட விளக்கத்தை அரச அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டும். இடைத்தங்கல் முகாம்களை ஒவ்வொரு தொண்டு நிறுவனங்களின் பராமரிப்பில் விடுவதானது பிரச்சினைகளை எதிர் கொள்ள வசதியான முறைமைதான். இருந்தபோதும், முகாம்களில் இருக்கும் பிரச்சினைகளை இனங் காண்பதிலும், அவற்றைத் தீர்த்து வைப்பதிலும் புரிதலுக்குள் அடங்காத தாமதம் நிலவுவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்தக் குறைபாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

இதில் குடும்பத் தலைவனை இழந்து, விதவைகளாகப் பிள்ளைகளுடன் நின்று தவிக்கும் குடும்பங்களின் தேவைகள், பிரச்சினைகள், தேவையற்ற தாமதங்களுக்கு இடமளிக்காமல் கவனத்தில் எடுக்கப்படுவதுடன், சிறுவர்களின் உணவு, இருப்பிடம், கல்வி தொடர்பிலும் தொண்டு நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். மலசல கூட வசதிகள், குடிநீர் வசதிகள் ஓரளவுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், சுகாதாரப் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. இது தொற்று நோய்களை ஏற்படுத்தும் ஆபத்து நிறைந்தவை என்பதால், மேலும் தொண்டுப் பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவது அவசியமாகும்.


அகதி முகாமில் ஒவ்வொருவரினதும் தேவைகள் முழுமையாகத் தீர்த்து வைக்கப்பட முடியாததாகவே இருக்கும். இருந்த போதும் அடிப்படையிலான பிரச்சினைகளில் கவனம் எடுக்கப்பட வேண்டிய கட்டாயப் பொறுப்பு தொண்டுப் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு தரப்புக்கும் உண்டு என்பதை சுட்டிக்காட்டுவது தவறாகாது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# சர்வதேச மட்டத்தில் எதிரொலிக்கும் கிழக்கு அகதிகளின் அவலங்கள்!

**உண்மைகள்** இரத்த நாளங்களை உறைய வைக்கின்றன. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் நிலைமையைப் பார்த்தால், இப்படித்தான் எண்ணத் தோன்றுகின்றது. கிட்டத்தட்ட ஓர் இலட்சத்து 65 ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள், தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தஞ்சம் தேடியிருப்பதாக மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் வெளியிட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த இரண்டு வாரப் பகுதியில் மட்டும் 90 ஆயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் இடம் பெயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



கிழக்கில் இடம்பெயர்ந்து தவிக்கும் அகதிகளின் அவலங்களைக் காட்டும் படங்கள்.

யுத்தம், இதுகாலவரை நான்கு இலட்சத்து 45ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களை உள்ளூரில் அகதிகளாக இடம்பெயர வைத்துள்ளது. கடந்த வருடத்திலிருந்து இன்றுவரை, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் 2 இலட்சத்து 35ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்திருக்கிறார்கள் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் அறிவித்திருக்கின்றது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட இந்த யுத்தம், இலங்கையை அகதிகளின் பூமியாக்கியுள்ளது. இந்த அகதி மண்ணில் மட்டக்களப்பு, மனிதம் வெட்கித் தலைகுனியக் கூடிய வகையில், அகதிகளின் அவலங்களை சுமந்து நிற்கின்றது. மீன் பாடும் தேன் நாடென்று வர்ணிக்கப்படும் மண்ணில் சோகம் சுமந்த மனிதர்களையே காணக்கூடியதாக இருக்கின்றது. பாடசாலைகள், மைதானங்கள், மரநிழல்கள், வெட்ட வெளிகள் அனைத்துமே அகதிகளின் தங்குமிடங்களாகக் காணப்படுகின்றன. கொடி கட்டிப் பறக்காத கோட்டைகளாக, கூடாரங்கள் தென்படுகின்றன. அடிப்படை வசதிகள் இல்லாத அவல வாழ்வே இந்த மக்களின் சொத்துச் சுகங்களாக மாறியுள்ளன.

இந்த அவலங்களுக்கு மத்தியில் மற்றுமொரு அதிர்ச்சிச் செய்தியும் கிடைத்திருக்கின்றது. கிழக்கில் அகதிகளாக இடம் பெயர்ந்த மக்கள் வலுக்கட்டாயமாக மீள்குடியமர்த்தப்படுகின்றார்கள் என்று அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் குற்றம் சாட்டியிருக்கின்றது.

தற்போது வாகரை, மூதூர் கிழக்கு, திருகோணமலை ஆகிய இடங்களிலேயே மீள் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக மட்டக்களப்பு செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது மேலே குறிப்பிடப்பட்ட இடங்களிலிருந்து பல மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிற்கு இடம் பெயர்ந்தவர்களே தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. வாகரையில் சுமார் பத்தாயிரம் பேர் வரை மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 4,22674 தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள், நலன்புரி நிலையங்களென்று கூறப்படும், போதியளவு நலன்களே இல்லாத அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள். அண்மைய மோதல்களை அடுத்து வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, கிரான், செங்கலடி, படுவான்கரை ஆகிய புலிப் பகுதியிலிருந்து அப்பாவி மக்கள் பாதுகாப்புத் தேடி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இன்னமும் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் பெருந்தொகையானோர் சுமார் 85 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் தமது நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரின் வீடுகளில் தங்கியிருக்கின்றனர். இந்த முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு போதியளவு அடிப்படை வசதிகள் இல்லையென்பது அப்பட்டமான உண்மையாகும். போதியளவு என்று சொல்வதை விட அடிப்படை வசதிகளேயில்லாமல் இந்த மக்கள் அவஸ்தைப் படுகின்றார்கள் என்பதே உண்மையாகும். பெருந் தொகையான மக்கள் இடம் பெயர்ந்திருப்பதால், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதில் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறதென்று மட்டக்களப்பு அதிகாரிகள் கையை விரிக்கின்றனர். அரசாங்கம் மட்டுமல்ல கிழக்கில் இயங்கும் சர்வதேச, தேசிய தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் தமக்கு உரிய உதவிகளைக் செய்யவில்லையென்று அகதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்த நிலையில்தான் அகதிகள் வலுக்கட்டாயமாக மீளக் குடியமர்த்தப்படுகின்றார்கள் என்று ஜெனிவாவிலிருந்து அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியிருக்கின்றார்.

'த ஹெரால்ட்' என்ற லண்டன் பத்திரிகை இது குறித்து செய்தி வெளியிட்டிருப்பதோடு, அகதிகள் படும் அவலங்கள் பற்றியும் விளக்கியிருக்கின்றது. அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் குற்றச்சாட்டு, பரவலாக உலக மட்டங்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இதே நேரத்தில், பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஊடகத்துறைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார். அகதிகள் மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெறவில்லையென்று மறுப்புத் தெரிவித்திருக்கிறார். ஆனால், சில ஊடகங்கள், அகதிகள் பலாத்காரமாகத் தாம் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளரெனத் தெரிவித்துள்ளன.

அகதி மக்களின் விருப்பமின்றி, அவர்களை வலுக்கட்டாயமாக மீளக்குடியமர்த்துவது சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகளுக்கு முரணானதாகும். கடந்த 15ஆம் திகதி ஐந்து அகதி முகாம்களிலிருந்து பஸ்கள் மூலம் அகதிகள் வலுக்கட்டாயமாக ஏற்றிச் செல்லப்பட்டிருக்கின்றார்களென்று குற்றம் சாட்டப்படுகிறது. திருகோணமலையைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ற் ஒருவர் தலைமையில் வந்த பொலிஸார், முகாம்களுக்குச் சென்று வலுக்கட்டாயமாக ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். இதற்கென 30 பஸ்கள் முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. தற்போது திருகோணமலையில் பொறுப்பான பதவியொன்றினை வகிக்கும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவரின் உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை மதிய வேளையில் ஐந்து முகாம்களுக்குச் சென்ற பொலிஸார், அகதிகளின் விருப்பத்துக்கு விரோதமாக அவர்களைப் பலவந்தமாக ஏற்றிச் சென்றிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. சிங்களம் பேசும் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டற் ஒருவர் இந்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கியதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

சவளக்கடை, ஐயங்கேணி, பாலச்சேனை, கிரிமுட்டி, கிரான் ஆகிய அகதி முகாம்களிலிருந்த மக்கள் பலரே பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டனர் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. இந்த முகாம்கள் செங்கலடி மற்றும் கிரான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளன. கிட்டத்தட்ட ஆயிரம் பேர் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு மீளக்குடியமர்த்தப்படுவதற்காக அழைத்துக் செல்லப்பட்டுள்ளனர் என்று தன்னார்வத் தொண்டர் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது குறித்து மட்டக்களப்பிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதுவுமே தெரியாது என்றும் அந்தத் தொண்டர் நிறுவன அதிகாரி கூறினார். மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கோ அல்லது செயலக அதிகாரிகளுக்கோ இதுபற்றி எதுவும் தெரியாதென்றும் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு முகாம்களுக்கும் வெளியே ஆறு பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. திருகோணமலையிலிருந்து வந்த பொலிஸாரும் மட்டக்களப்பில் இப்பணிக்கென அமர்த்தப்பட்ட பாதுகாப்புப் படையினரும் திடீரென முகாம்களை முற்றுகையிட்டு ஆட்களைப் பலவந்தமாக கடத்த முனைந்தனரென்றும் சொல்லப்படுகின்றது. இளைஞர்கள் பலர் இவர்களின் பிடியில் சிக்காமல் தப்பியோடி விட்டனரென்றும் வயோதிபர்களே சிக்கிக் கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

தமது தட்டு முட்டுப் பொருட்களையும் உடைமைகளையும் எடுத்து வருமாறு மக்கள் கோரப்பட்டனராம். ஒரு பஸ்ஸில் அகதிகளின் பொருட்கள் ஏற்றப்பட்டிருக்கின்றன. இம்முகாம்கள் முற்றுகையிடப்பட்டபோது பல குடும்பங்கள் சமைத்துக் கொண்டிருந்தனவாம். சமையலைக் கைவிட்டுவிட்டு பஸ்களுக்குள் ஏற, பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். பாடசாலைகளுக்கும் வேறு அலுவல்களாகவும் வெளியே சென்ற பிள்ளைகளை சில குடும்பத்தவர்கள் விட்டுப் பிரிய நேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது. ஒவ்வொரு பஸ்களுக்குள்ளும் 25இலிருந்து 35 பேர் வரையில் ஏற்றப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு பலவந்தமாக ஏற்றப்பட்டவர்கள் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று கிராமங்களைச் சேர்ந்தவர்களாவர். அதாவது திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த மல்லிகைத்தீவு, பெரியவெளி, பட்டித்திடல், கிளிவெட்டி, பாரதிபுரம், மீன்காமம், சங்குவெளி, இருதயபுரம், பாலடிச்சேனை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே பலவந்தமாக ஏற்றிச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். இவர்களே முதலில் கிளிவெட்டி யிலுள்ள இடைத் தங்கல் முகாமொன்றிற்கு அழைத்துச் செல்லப் பட்டிருக்கின்றார்கள். காலக்கிரமத்தில் இவர்களது சொந்தக் கிராமங்களில் மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரியவருகின்றது.

சம்பந்தப்பட்ட அகதி முகாம்களுக்குச் சென்ற எமது பத்திரிகை நிருபர்கள் குழுவொன்று மக்களிடம் நடத்திய விசாரணையிலிருந்து, இவை உண்மையென்று தெரிய வருகின்றது. ஆனால், அழைத்துச் செல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 300 இலிருந்து 500 வரையிலிருக்கலாமென்று அவர்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு வாவிக்கு அப்பால் வவுணத்தீவிலிருந்து வெபர் அரங்கை நோக்கி புலிகள் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களையடுத்தே, மட்டக்களப்பில் மோதல்கள் உக்கிரமடைந்ததாக தப்பி வந்து தஞ்சம் தேடிய அகதிகள் பலர் தெரிவித்தனர். மக்கள் மீளக் குடியேறத் தயங்குவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. ஏட்டிக்கு போட்டியான எறிகணை, ஷெல் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காகவே மக்கள் தஞ்சம் தேடி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்திருக்கின்றனர். புலிகளின் பகுதிகளில், அப்பாவிப் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி, படையினர் மீது தாக்குதல் நடத்திய புலிகள், பதிலடி தொடங்கியதும் அப்பாவி மக்களைக் கைவிட்டுவிட்டு தலைதெறிக்கத் தப்பியோடி விட்டனர். யுத்த வலயப் பகுதிகளில் தங்கியிருக்கப் பயந்தே, மக்கள் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்திருக்கின்றார்கள்.

உயிருக்குப் பயந்து வெளியேறியதால்தான், தமது பிள்ளை குட்டிகளுடன் மரநிழல்களிலும், மைதானங்களிலும் அவலங்களைச் சுமந்து கொண்டு வாழ்கின்றார்கள். புலிகளும் படையினரும் நடத்தும் இந்த யுத்தத்திற்கு, அப்பாவி மக்களே அதிக விலை கொடுக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரேயொரு மாவட்டம், மட்டக்களப்பு மட்டுமே. இந்த மாவட்டத்தின் மொத்தத் தமிழ் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அகதிகளாக இடம்பெயர்ந்திருக்கின்றனர். கடந்த காலங்களில் அரசாங்க உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், திருகோணமலை, அம்பாறை போன்ற ஏனைய கிழக்கு மாவட்டங்களில் தமிழ் மக்களின் சனத்தொகையை கணிசமாகக் குறைத்து விட்டன. தூரதிருஷ்டியற்ற, தற்கொலைக்கொப்பான புலிகளின் துணிச்சல்வாத நடவடிக்கைகளே, தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்குக் காரணம்.

அகதிகளின் பிரச்சினையை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். ஒரு சில துரைத்தன அதிகாரிகளின் நடவடிக்கைகள், தமிழ் மக்களைப் பாதிப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. இவ்வாறான நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்டால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவை குந்தகமாக அமையும் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். மேற்கு வங்காளத்தில் சிறப்பு வர்த்தக மண்டலம் அமைக்க முனைந்த மாநில அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த, ஏழை விவசாயிகளை சுட்டுக் கொன்ற பொலிஸார் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். 14 பேர் கொல்லப்பட்டதோடு 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸார், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட அனுமதிக்கக்கூடாது. இது எமது நாட்டுக்கும் முன்னோடி உதாரணமாகத் திகழ வேண்டும்.

நரன்

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

### ஊரிலிருந்து....



*எரிகிற வீட்டில பிடுங்கிறவரை லாபம் எண்டு இயங்குகிற சில பிரகிருதிகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதிலும் ஒருபடி மேலே சென்று பிடுங்கி எடுத்துவிட்டு, மக்களின் அவலத்தில் குளிர்காய சிலர் வெளிக்கிட்டிருக்கினம்.*

*மட்டக்களப்பில் இடம்பெயர்ந்த மக்களுக்காக நிதி சேகரிக்கிறம் எண்டு குடாநாட்டில் சிலர் கிளம்பியிருக்கினமாம். எங்கேயோ பொறிதட்டுது எண்டு பார்த்தால் அவை வேற யாருமில்லை. முந்தி பகிஷ்கரிப்பு, ஹர்த்தால் எண்டு திரைக்குப் பின்னால் திரிஞ்சவைதான். இப்ப அரசியல் பணி, வருவாய்த்துறை எண்டது ஊரில இல்லாதபடியால் காய்ஞ்சுபோய் ஒரு அறிக்கை நோட்டீஸ் விடுகிறதுக்கு கூட ஏலாமல் மட்டக்களப்பு மக்களின்ட அவலத்தில வசூல் நடாத்த வெளிக்கிட்டிருக்கினம். ஆனா பாருங்கோ சனம் வலு அலேட்டாக இருக்குது....*

# பயங்கரவாதத்தின் பங்காளிகளாகும்

# சிங்களப் புலிகள்!

**புலிகளின்** ஊடுருவல் செயற்பாட்டின் ஒரு வெற்றி என்று கூறக்கூடியது, இராணுவ உயர் அதிகாரிகளையும், சிங்கள ஊடகவியலாளர்களையும் பணத்தைக் காட்டி இழுத்துக் கொண்டதைக் குறிப்பிடலாம்.

ஒட்டுமொத்த சிங்களவர்களையும், தமிழ் இனத்தின் எதிரிகளாக தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து கொண்டு, தமது புலனாய்வு மற்றும் ஊடுருவல் முயற்சிகளுக்காக தாம் சிங்களத் தரப்போடு விருந்து உண்ணவும், அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் செலுத்துவதுமாக இருக்கின்றனர்.

இராணுவத்தின் கீழ் மட்டச் சிப்பாய்களைப் பணத்துக்காக வாங்குவது மிகச் சுலபமாக இருந்த போதும், அவ்வாறு செய்யாமல் மேஜர் தர அதிகாரிகளையே தமது பணவலைக்குள் வீழ்த்துவதில் புலிகள் கவனம் செலுத்தியுள்ளனர். அவர்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கையில் தனியே பணம் மட்டுமல்ல, பெண்களையும் ஈடுபடுத்தியதாக கைதாகி இருக்கும் இராணுவ அதிகாரிகள் கூறியிருக்கும் தகவல்கள் அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது.

வெலிக்கந்தையில் கைது செய்யப்பட்ட இராணுவ மேஜர் தர அதிகாரி, தான் புலிகளின் வலையில் வீழுந்ததை விபரிக்கின்றபோது தன்னை தமிழ் யுவதிகள் இருவர் அடிக்கடி வந்து சந்தித்ததாகவும், அவர்கள் தனக்கு பணம் தந்ததாகவும், சுகமும் தந்ததாகவும், அந்த வேளைகளிலேயே இராணுவத்தினரின் நடவடிக்கைகள், திட்டங்கள் தொடர்பாகக் கேட்டு அறிந்து கொண்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இதே போன்றதொரு அதிர்ச்சி தரக்கூடிய வாக்குமூலத்தை தம்புள்ளயில் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரியும் அவரது சகாக்களும் தெரிவித்துள்ளனர்.

பண்பாடு, ஒழுக்கம் என்பதையெல்லாம் தமது உயிரிலும் மேலாக மதிக்கும் கலாசாரம் கொண்ட தமிழர்களின் கௌரவத்தைக் கேள்விக்குறியாக்கியிருக்கும் இத்தகைய செய்திகள் விடுதலையின் பெயரால் புலிகள் செய்து வரும் இனத்தின் துரோகமாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

புலிகள் இயக்கத்தில் பெண்களும் ஆயுதம் ஏந்தியிருக்கிறார்கள் என்பதை உணர்ச்சி மிக்கதாக காட்டும் புலிகள், பெண்களின் பலவீனத்தை தவறாகப் பயன்படுத்துவது வேதனையானது. தற்கொலை செய்யுமளவுக்கு அவர்களை தயார் பண்ணும் புலிகளுக்கு புலனாய்வு, ஊடுருவல் என்பவற்றின் பெயரால் தவறுக்கு இட்டுச்செல்வது முடியாத காரியமல்ல. ஆனால் பெண்களைப் போற்றுகின்ற, பெண்களின் உரிமைக்காக குரல் கொடுக்கின்ற,

> இராணுவத்தின் கீழ் மட்டச் சிப்பாய்களைப் பணத்துக்காக வாங்குவது மிகச் சுலபமாக இருந்த போதும், அவ்வாறு செய்யாமல் மேஜர் தர அதிகாரிகளையே தமது பணவலைக்குள் வீழ்த்துவதில் புலிகள் கவனம் செலுத்தியுள்ளனர். அவர்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கையில் தனியே பணம் மட்டுமல்ல, பெண்களையும் ஈடுபடுத்தியதாக கைதாகி இருக்கும் இராணுவ அதிகாரிகள் கூறியிருக்கும் தகவல்கள் அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது.

பெண்களின் வெற்றியைக் கொண்டாடுகின்ற இந்த நாகரீகமான காலகட்டத்தில் போராட்டத்தின் பெயரால் புலிகள் நடத்தும் பெண் அடிமைத்தனமும், கொடுமையும், அருவருக்கத்தக்கதாகவே கருதப்படுகிறது.

இது தவிர, பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆயுதங்களையும், பணத்தையும் வழங்கி வருகின்ற புலிகளின் செயற்பாடுகள், பாதாளக் குழுக்களைப் பயன்படுத்தி எதிரிகளை படுகொலை செய்யவும், பாதாளக் குழுக்களுக்கு உதவும் சில அரசியல் பிரமுகர்களைக் கவர்வதும் இலகுவான செயற்பாடாக இருக்கிறது.

அவ்வாறு ஈர்க்கப்படும் அரசியல் பிரமுகர்களுக்குப் பெரும் தொகையான பணத்தை வாரி இறைத்து, அவர்களை நம்பவைத்து அவர்களின் வாகனங்களில் வெடிபொருட்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டும் செல்கின்றனர். இதேபோல் பாதுகாப்பு நெருக்கடி மிகுந்த நேரங்களின் தமது உறுப்பினர்களையும் இடம் மாற்றுகின்ற வேலையையும் செய்துள்ளனர்.

இந்த அரசியல் பிரமுகர்களுடனான சந்திப்புகளின் போதே அவர்களுக்கு நெருக்கமான சிங்கள ஊடகவியலாளர்கள் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் வளைத்துப் போட்டுக் கொண்டுள்ளனர் என்ற தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. சில அரசியல்வாதிகளுக்கு தமது உள் பாவனைக்காக ஆயுதங்களையும் புலிகள் வழங்கியுள்ளனர். எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச்சாட்டுகளின் கீழ் சில அரசியல்வாதிகள் கைதுசெய்யப்படலாமென்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

புலிகளின் ஊடுருவலானது இரண்டு கட்டமாக வகுக்கப்பட்டுள்ளது. முடி திருத்தம் செய்பவர்களாகவும், இயந்திரக்கோளாறுகளை திருத்துபவர்களாகவும், சிறிய கடை உதவியாளர்களாகவும் சிலரை அனுப்பியுள்ளனர். இவ்வாறானவர்களின் அதிகரிப்பை 2002ஆம் ஆண்டுக்குப் பின்னரான கணக்கெடுப்புகள் தெளிவுபடுத்துகின்றன. எதிர்காலத்தில் இத்தகையவர்கள் தொடர்பாகவும், பாதுகாப்புத் தொடர்பான கவனம் எடுக்கப்படலாம். இதுதவிர அரசியல் பிரமுகர்களிடமும் வசதி படைத்தவர்களுடனும் தொடர்பில் இருந்து கொண்டு, உயர்தர விடுதிகளில் தங்கி இருந்து உல்லாசமாக இருக்கும் புலிகளும் இருக்கிறார்கள். புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனும் குற்றச்சாட்டில் கைதாகி இருக்கும் சிங்களவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் மேலும் பலர் கைது செய்யப்பட வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.

இதைவிடவும் ஏ-ஒன்பது வீதி திறந்து போக்குவரத்து நடைபெற்ற போதும், அப்பாதையால் பயணிகள் போக்குவரத்துக்காகவும், பொருட்களைக் கொண்டு செல்வதற்காகவும் சென்ற சிங்களவர்களை அணுகிய புலிகள் அவர்களின் முகவரிகள், தொடர்புகள் என்பவற்றைப் பெற்றுக் கொண்டனர். பின்னர் அவர்கள் ஊடாக பொருட்களை தென் இலங்கைக்குக் கொண்டு செல்வதற்கும், தென் இலங்கையிலிருந்து வன்னிக்குக் கொண்டு போகவும் அவர்களைப் பயன்படுத்தியுள்ளனர். இதற்காக உதவும் சிங்களவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் பெரும் தொகையான பணத்தை வழங்கியதோடு மட்டுமல்லாமல், சிலருக்கு காணியும் வீடுகளும் சிலருக்கு வாகனங்களையும் கூட வாங்கிக் கொடுத்துள்ளனர்.

பாதுகாப்புத் தரப்பினரின் விசாரணைகளுக்கு இடையூறாக அமையக்கூடாது என்பதால் சிலரின் விபரங்களைத் தெரிவிக்க முடியவில்லை. ஆனால் புலிகளின் செயற்பாடுகளின் விளைவைத் தெரிந்து கொண்டும் அதற்குத் துணைபோன படை அதிகாரிகளையும், மற்றவர்களையும் இலங்கைத் தேசத்தின் துரோகிகளாகவே பெரும்பான்மைச் சமூகம் பார்ப்பதை அவதானிக்க முடிகிறது.

இத்தகையவர்களுக்குத் திறந்த வெளியில் எவ்வித தயவு தாட்சணியமும் பாராமல் பகிரங்கமானதும், கடுமையானதுமான தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமென அநேகமான சிங்கள மக்கள் கூறுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

புலிகளின் பணத்துக்காக சோரம் போனவர்கள் ஊடகவியலாளர்களாகவோ, படையினராகவோ, அரசியல் பிரமுகர்களாகவோ எவராக இருந்தாலும் தமது பதவியைப் பயன்படுத்தி தப்பித்து விடக்கூடாது என்பதை மக்கள் வெளிப்படையாகவே கூறுகின்றதை அவதானிக்கமுடிகிறது. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த அதிகாரியொருவர், தம்மால் கைது செய்யப்பட்டிருக்கும் சிங்களப் புலிகள் எந்தப் பதவியை வகித்தவர் என்பதைத் தாம் பார்க்கவில்லை.

அவர்கள் பெரும் நாசகாரச்செயல்களுக்கு துணை போயிருக்கிறார்கள் என்பதன் அடிப்படையிலேயே விசாரணை களுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் ஆகவே யார் கைது செய்யப்பட்டார்கள் என்பதை மட்டும் பார்ப்பதும் கருத்துக் கூறுவதும் சரியாக இருக்காது. பதவியையும், தொழில் ரீதியான பாதுகாப்பையும் வைத்துக்கொண்டு எவரும் பயங்கரவாதச் செயற்பாடுகளில்

அலசுவது

**- மதியூகி -**

ஈடுபடுவதை கைகட்டிப்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்படுவார்கள். குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனை வழங்கப்படும் என்றும் கூறினார்.

புலிகளுக்கு உதவிய சிங்களப் புலிகளான படையினர் 35 பேருக்கு மேலானவர்களும் ஏனையவர்கள் 12 பேருமாக 47 பேர் பயங்கரவாதத்துக்குத் துணைபோனதன் குற்றச்சாட்டில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், விசாரணைகளிலிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் மேலும் பல சிங்களப் புலிகள் கைதுசெய்யப்படலாம் என்று தெரியவருகிறது.

## அதிரடி அய்யாத்துரை



**மீன்பாடும்** நாட்டில் மக்கள் அகதிகளாக வந்து அல்லோல கல்லோலப்படுகினமெண்டது உண்மையுங்கோ. அவையை இதுவரை கூத்தமைப்பு எம்.பி.மார் யாரும் போய் நேரடியாகப் பார்க்காமல் இருக்கினமே எண்டு விசாரிச்சால், சில மீன்பாடும் நாட்டு எம்.பி.மார் நம்மட பக்கம் சேர்ந்து கொண்டு கோல் அடிக்கி னமுங்கோ. எப்புடித் தெரி-யிமோ.

உதுபாருங்கோ, வடக்கில பிரச்சினை சனம் அவலப்படுகினம் எண்டால் துடியாய் துடிக்கிறது போலையும், நாங்கள் எல்லாம் பரபரப்பாகக் காட்டவேணும் எண்டும் சொல்லிற ரெண்டெழுத்தார் கிழக்கில மக்கள் அவலப் படேக்க கணக்கில எடுக்காமல் இருக்கினம், தூதுவர்களைச் சந்திச்சு யுத்தத்தை நிறுத்தச் சொல்லுங்கோ எண்டு மட்டும் சொல்லினம். நாங்கள் இங்க தூதுவர்களைச் சந்திச்சுக் கொண்டு இருக்கேக்கயே ஒண்டரை லட்சம் பேர் இடம்பெயர்ந்து வந்திட்டினம். இதுக்கு மேல யுத்தத்தை நிறுத்திறதாலையோ, தொடர்கிறதாலையோ மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லையுங்கோ. உவைதான் எம்.பி.பதவி தந்திச்சினம் எண்டது சரிதான். ஆனால் இந்தப் பதவியைக் கொண்டு ஒரு முடியையும் புடுங்க ஏலாதவையளாத்தான் இருக்கிறம். உதிலை தலைநகரில இருக்கிறவையின்ர பொருட்களை சேகரிச்சுக் குடுக்கச் சொல்லியிருக்கினம் எண்டிராருங்கோ. அவரின்ர பிரச்சினை இருக்கட்டும். கூத்தமைப்பு எம்.பி. மாருக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தில இருந்து ஒரு ரூபாயையும் ஒதுக்கயில்லையே ஏன் எண்டதுக்கும், சேகரிக்கிற பொருட்கள் எல்லாம் சனத்திட்டை போய் சேருமோ எண்டதுக்கும் உவை என்ன பதில் சொல்லுவினமோ எண்டதுதான் என்ரை கேள்வியுங்கோ...

**காத்து** மழையாக இருந்தாலும், காரிருளாக இருந்தாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது எண்டுவினம். அதுபோலைப் பச்சைக்கட்சிக்காரரும் மக்கள் அகதியாயிருக்கினமாம், ஒரு பக்கம் ரெண்டெழுத்தாருக்கும் படையினருக்கும் சண்டை நடக்குதாம் எண்டதாலை உந்த அதிகாரத்தில இருக்கிறவையை அப்புறப்படுத்திப் போட்டு தாங்கள் புதிய அதிகாரத்தைக் கொண்டு வரப் போகினமாம் எண்டு சொல்லிக் கொண்டு திரியினம். நான் தெரியாமல்தான் கேட்கிறன், உவை ஆட்சி செய்த காலத்தில நாட்டில என்ன தேனும் பாலுமே பெருக்கெடுத்துப் பாஞ்சுது எண்டு. ஒருவகையில பார்த்தால் நாடு உப்பிடி சேதாரமாகிப் போனதுக்கு உவைதான் பிரதானமான காரணமானவை எண்டதை எப்புடி வசதியாக மறந்து போட்டுப் பேசுகினம் எண்டு நினைச்சுப் பார்க்கேக்கை சிரிப்பாக இருக்குதுங்கோ.

ரெண்டெழுத்தாருக்கும் அதிகாரமான வருக்கும் ஏதோ எலக்ஷன் காலத்தில ஒப்பந்தம் நடந்ததெண்டு சிரிக்கிறபதி ஒரு கதையை அவுட்டு விட்டவர். பச்சைக் கட்சிக்காரரும் அதைப் புடிச்சுக் கொண்டு அது என்ன ஒப்பந்தம், அதை வெளியாலை சொல்லி விளக்கம் தரவேணும் எண்டிச்சினம். உவை உப்பிடிச் சொல்லுறது பொலிரிக்ஸுக்காகத்தான் எண்டு சனம் சொல்லிச்சினம். கடைசியாக இளமையான திரையன், உந்த ஒப்பந்தத்தைப் பொய் எண்டும், உது உவையின்ர பொலிரிக்ஸ் விளையாட்டு எண்டும் ஓபினாச் சொன்னாப் பிறகு, உன்ர முகத்தில என்ர முகத்தில எண்டு கரிபட்ட இடங்களை தேடித் தேடித் துடைச்சுக் கொண்டு இருக்கினமாம். ரெண்டெழுத்தாரை நம்பி ஆட்சி அமைச்சாலோ, அதிகாரத்துக்கு வந்தாலோ, அந்த நிமிஷத்தில இருந்து சறுக்கி விழுறதுக்கும் தயாராக இருக்க வேணும் எண்டது தெரிஞ்சிருந்தும் பேராசை விடாமல் அடிக்கடி சறுக்கிக் கொண்டிருக்கினமுங்கோ...

**தலைநகரில** இருக்கிற வர்த்தகர்கள் அகதி மக்களுக்கு உதவ வேணுமெண்டு கேட்டவை, நேரில போய் உதவிகளைப் பெற பயந்து கொண்டு இருக்கினமாம். வர்த்தகர்கள் நாங்கள் உதவுறம் வாங்கோ எண்டு கூப்பிட்டாலும், எங்களுக்கு பாதுகாப்பு இல்லை எண்டு கூத்தமைப்பு எம்.பி.மார் போகினமில்லையாம். மானா கணேசன் மட்டும்தான் பொருட்கள் சேகரிப்பில நேரடியாகப் போய் பங்களிப்புச் செய்கிறாராம். கூத்தமைப்புக் காரர் டெலிபோனிலை தொடர்பு கொண்டு உதவி கோருகினமாம். உதிலையும் வெளிநாடுகளில இருக்கிற எங்கட உறவுகள் டொலராகவோ, பவுணாகவோ அனுப்பினால் நல்லதெண்டு சொல்லிக் கொண்டிருக்கினமாம். உதெல்லாம் போன் டு போனில நடந்து கொண்டிருக்கேக்க, எங்கட சம்பந்தமானவர் ஏதோ உதில அவருக்கும் உதுக்கும் சம்பந்தம் இல்லை எண்டமாதிரி ஒதுங்கிப் போயிருக்கிறாரே. ஏன் எண்டதுதான் தெரியுதில்லை எண்டு குருவி தலையைப் போட்டு பிச்சுக் கொண்டு இருக்குது.

அவர் எந்த மண்ணின் மைந்தனோ, அங்கேயே போக ஏலாமலும், அகதிகளின்ர மீள் குடியேற்றம் தொடர்பாக வரக்கூடிய முறைப்பாடுகள் தொடர்பாக என்ன ஏது எண்டு கேட்க முடியாமலும் இருக்கிற சம்பந்தமானவர், உதவி செய்யுங்கோ எண்டு கேட்டால் மட்டும் சரியாகவே இருக்கும். உண்மையைச் சொல்ல வேணுமெண்டால் உதவிகோர வேணுமெண்டு எடுத்த தீர்மானத்தைக் கூட சம்பந்தமானவரோடை கலந்து பேசியே எடுத்தவை. இல்லையே, அவை இரண்டு மூண்டு பேர் முடிவு செய்து நடத்திக் கொண்டிருக்கினம். சரியாக ஒழுங்கமைக்காமல் எழுந்தமானமாகவும், கணேசன் எம்.பி.யின்ர தலையீட்டிலையும் நடந்து கொண்டிருக்குது. உதில பொருளாகக் கிடைக்கிறது ஒருவேளை மக்களைச் சென்றடைந்தாலும், பணமாகக் கிடைக்கிறது வன்னி வங்கியிலதான் பிக்சட் டிப்பொசிட்டில போடப்படும். உது தன்னைக் கேளாமல் நடப்பதே உத்தமமானது எண்டுதான் சம்பந்தமானவர் உதில தலையிடாமல் தனக்கு சம்பந்தமில்லை எண்டு ஒதுங்கி இருக்கிறாராம்.

**வன்னியை** நோக்கி எறிகணைத் தாக்குதல் தொடருது எண்டால், சண்டை உக்கிரமடையும் எண்டு சனம் அஞ்சுகினம் எண்டது சரி. ஒருபக்கம் என்னடாவெண்டால், ரெண்டெழுத்தாரின்ர பிடியில இருந்து தங்களை விடுவியுங்கோ எண்டு சனம் சொல்லுதுகளாம். ஓமந்தை வீதி உடைச்சு வன்னிப்பாதை திறக்கப்பட்டுதெண்டால், வன்னிக்குள்ள அகப்பட்டுக் கிடக்கிற எங்கட சனம் விடுபட்டு வந்து போடுங்கள் எண்டு வவுனியாவில இருக்கிற சனம் சொல்லினம். அவை சொல்லுறதுகளைப் பார்த்தால் விரைவில அகதிப்படலம் ஒண்டு வவுனியாவை சூழ்ந்து கொள்ளும்போலை தெரியுது. கிழக்கு மாகாணத்தில ஏற்பட்டிருக்கிற அகதி நெருக்கடி வவுனியாவிலயும் வரும் எண்டாலும், சனம் சமாளிச்சுக் கொள்ளும் எண்டு வாத்தியார் சொல்லுறார்.

அண்மையில வவுனியாவுக்குப் போன வாத்தியார் உங்க இருக்கிற நிலைமைகளைப் பற்றிச் சொல்லேக்க, ஊடரங்குச் சட்டம் இல்லாமலே ஊர் அஞ்சு அஞ்சரை மணிக்குப் பிறகு நடமாட்டம் குறைஞ்சு போய் ஓய்ஞ்சு போயிடுதாம். சனத்தின்ர முகத்தில ஏதோ ஒரு இனம் புரியாத பயம் படர்ந்துபோய் இருக்குதாம். சனம் மனசு விட்டுப் பேச பயப்படுகினமாம். சனம் மனிசர் அண்டாதவை மாதிரித் திரியினமாம். வீட்டில இருந்து வெளிக்கிட்டவர் வீட்டுக்கு வருவாரோ எண்டு நிச்சயம் இல்லாமல்தான் இருக்கினமாம். உப்பிடியெல்லாம் வாத்தியார் சொல்லிக் கொண்டு போறதைப் பார்த்தால் விடுதலை எண்ட சொல் திரிபட்டு கண்ட இடத்தில காணுறவையின்ர தலையில "சுடுதலை" எண்ட கணக்கில தான் ஆகியிருக்குதுங்கோ. வாத்தியாரின்ர தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் எண்டு வந்து சேர்ந்திருக்காருங்கோ...

# நம்பிக்கை




**நம்** வாழ்க்கையின் ஆதார சுருதியே நம்பிக்கையினால்தான் கட்டப்பட்டுள்ளது. பிறவி எய்தும் போதே மரணம் சர்வ நிச்சயம் என்பது தெரிந்தும் இடைப்பட்ட வாழ்க்கையை வாழ விரும்புவது நம்பிக்கையின் அடிப்படையில்தான். நம்பிக்கை எங்கே இருந்து ஆரம்பிக்கிறது என்று சிந்தித்துப் பார்ப்பேன்.

என் பிறப்பிலேயே நம்பிக்கை ஆரம்பிக்கிறது. அம்மா பிரசவித்த பிள்ளை நான் தான் என்பது தாதிகள்

> **இன்று நித்திரைக்குப் போகும் நாம், நாளைக் காலையில் உயிருடன் எழுந்து விடுவோம் என்பது ஒரு நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை இல்லாவிடில் யாரும் தூக்கத்துக்கே போக முடியாது.**

கூறுவதிலிருந்து உறுதி செய்யப்படுகிறது. இன்னொரு தாயின் பிள்ளையை, என் அம்மாவின் அருகில் கிடத்தி இதுதான் உங்கள் பிள்ளை என்றால் தாயானவள் நம்பித்தானாக வேண்டும். ஒரே நேரத்தில் இரண்டு தாய்மாருக்கு பிள்ளைப் பேறு நடந்தால், அதில் ஆண்பிள்ளையை பெண்பிள்ளை பெற்ற தாயிடமும், பெண் பிள்ளை பெற்ற தாயிடம் ஆண் பிள்ளையையும் கொடுத்தால் நம்பித்தானாக வேண்டும். இன்றைய நவீன யுகத்தில் இந்த சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள (டி.என்.ஏ.) பரிசோதனைகள் உதவலாம். சில சமயம் விஞ்ஞானம் கூட ஏமாற்றி விடுகிறது. சாதாரண நெஞ்சுவலிக்காக வைத்தியரிடம் போனவருக்கு ஏற்கனவே எடுக்கப்பட்ட புற்று நோயாளியின் ஆய்வு முடிவுகளை வைத்துக் கொண்டு வைத்தியம் பார்க்கப்பட்ட சம்பவமுமுண்டு. அப்படியெல்லாம் நடக்காது, வைத்தியர் நல்லவர் கவனமாக இருப்பார், உயிரைக் காப்பார் என்ற நம்பிக்கை தான் நம்மை கட்டிப்போடுகிறது. இதில் தெய்வ நம்பிக்கைதான் பெரிய நம்பிக்கை.

எனக்கு பன்னிரெண்டு வயது இருக்கும். எங்கள் ஊரில் இருந்த ஒரு முதியவரிடம் கேட்டேன் இந்துக் கடவுள்கள் இப்படித்தான் உருவ அமைப்புக் கொண்டவர்கள் என்பது யாருக்குத் தெரியும். அவர்களின் புகைப்படங்கள் இருந்தனவா, அந்தக்காலத்தில் புகைப்பட வசதிகள் இருந்தனவா என்று கேட்பேன். முதலில் அவர் சொன்னார் புகைப்பட வசதி இல்லை. ஆனால் ஓவியங்கள், சிற்பங்கள் வாயிலாக ஒருவரை ஞாபகமாக வைத்துக் கொள்வதற்காக வரைந்தோ, சிற்பமாகவோ வைத்துக் கொள்வார்கள் என்று. ஆனால் கடவுள்கள் வாழ்ந்த காலம் என்று இல்லையே என்று கேட்டால், அன்பும் கருணையும் கொண்டு வாழும் ஒவ்வொருவரும் கடவுள் தான் என்று சொல்வார்.

என்னை நம்பும்படியாக கட்டாயப்படுத்தாத போதும், அவர் நம்புகிறார், என் நம்பிக்கையை யாராவது ஒரு கடவுள் நேரில் வந்து தீர்த்தால்தான் உண்டு. ஆனால் நமது நம்பிக்கை அபரிதமானது. கண்காணுகின்ற விஷயங்களை விடவும் காணாத விஷயங்களையும், உருவங்களையும் நம்பி விடுகிறோம். இப்படிச் சொல்வதால் நான் நாஸ்தீகனா ஆஸ்தீகனா என்று யோசித்து உங்கள் நேரத்தை வீணடித்துவிட வேண்டாம். என் கேள்விகள் இதற்கு அப்பாட்பட்டது. நம்பிக்கையை மிக எளிமையாகத்தான் நாம் பற்றிக் கொண்டிருக்கிறோம். இன்று நித்திரைக்குப் போகும் நாம், நாளைக் காலையில் உயிருடன் எழுந்து விடுவோம் என்பது ஒரு நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை இல்லாவிடில் யாரும் தூக்கத்துக்கே போக முடியாது.

நாளைய விடியலில் சூரியன் தோன்றாமல் இருக்கும் என்று நினைக்கமுடியுமா? வரும் என்பது நம்பிக்கை. பூமி சுழன்று கொண்டிருக்கிறது, சுழலாமல் இருந்தும் விடலாம். எப்படி சுழற்சியை தொடரச் செய்யவும், நிறுத்தவும் நம்மால் முடியும். தொடர்ந்து சுழலும் என்பது நம்பிக்கை. எல்லாப் பெற்றோருமே தங்கள் பிள்ளை வளர்ந்து பெரிய ஆளாகி தமது இயலாத காலத்தில் தம்மை பராமரிப்பார்கள் என்று நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையை எத்தனை பிள்ளைகள் செய்து முடிக்கிறார்கள்.

அது ஒரு வகையில் நம்பிக்கைத் துரோகம் தான்.





நம்பிக்கையின் மகத்துவத்தை கேள்விக்குள்ளாக்க இரண்டு விதிகள். ஒன்று சந்தேகத்தை முதன்மைப்படுத்துவது, இன்னொன்று துரோகம் செய்வது. தன் கணவன் தனக்கு துரோகம் செய்யமாட்டான் என்று மனைவியும், மனைவி தனக்குத் துரோகம் செய்ய மாட்டாள் என்று கணவனும் நம்பித்தான் சேர்ந்து வாழ வேண்டியிருக்கிறது. ஒருவர் மேல் ஒருவருக்கு நம்பிக்கை இல்லையென்றால் அந்த இல்லறம் இனிக்காது. அங்கே சந்தோசம் செத்துப்போய் விடும், அவ்வாறானதொரு இல்லறம் அவர்களுக்கு வாழ்நாளில் வாய்த்த நரகம் என்பதை விட எப்படிச் சொல்ல முடியும். காதலில் தோல்வி கண்டவரெல்லாம் தற்கொலை செய்து தங்களை மாய்த்துக் கொள்வது தான் ஒரே முடிவு என்றால், அதுவரை வாழ்ந்ததன் அர்த்தம் என்ன? தோல்வியே வந்தாலும் அவமானமே நேர்ந்தாலும், அதை சகித்துக் கொண்டு நம்மை தோல்வியடையச் செய்தவரை தோற்கடிக்க வேண்டும் என்றும், நம்மை அவமானப் படுத்தியவரை அவமானப்படுத்த வேண்டுமென்றும். நமக்கு நேர்ந்த வலி அவர்களுக்கும் வரச் செய்ய வேண்டும் என்று புதிய துணிச்சலுடன், வாழவேண்டும், வாழ்க்கை மீது நம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும். அப்படி நம்பிக்கையோடு வாழக்கையை வாழ்ந்து பார்க்க துணிந்தவர்கள் தான் ஜெயித்து வாழ்ந்திருக்கிறார்கள். இன்னொருவர் செய்ததை திருப்பி அவருக்கு செய்தல் என்பது ஒரு வன்முறையான அணுகுமுறையாகவும் இருந்துவிடக்கூடாது. நம்பிக்கையின் அடித்தளத்திலிருந்து விளைவது வன்முறை என்றால் அது ஏற்புடையதல்ல. நம்பிக்கைத் துரோகம் செய்தவருக்கு முன்னால் நீங்கள் வெற்றியின் அடையாளமாக வாழ்தலே அந்த வலியை, ஏமாற்றத்தை அவர்களுக்கு கொடுக்கும் பிரதானமான பதில் செயற்பாடாகும். எப்போதும் நம்பிக்கைக்குரியவர்களால் தரப்படும் ஏமாற்றமும், அவமானமும் தாங்க முடியாத வலிகளையே ஏற்படுத்தும். அதையும் தாங்கி வெற்றியடைந்தால், பின்னர் வரக்கூடிய வலிகளும், நம்மைத் தாக்கப்போவதில்லை. வாழ்க்கையில் எத்தனையோ பேரைச் சந்திக்கின்றோம், அவர்கள் நல்லவர்களா நம்பிக்கையானவர்களா, கெட்டவர்களா என்று முதலில் தெரிவதில்லை. எல்லோரிடம் நம்பிக்கையோடுதான் பழகிவிடுகின்றோம். அவர்களில் மிகக்குறைந்த அளவினரே நம்பிக்கைக்குரியவர்களாக, கூடவே நம்முடன் துன்பத்திலும், இன்பத்திலும் பங்கெடுத்துக்கொள்கின்றார்கள். அத்தகைய நம்பிக்கைக்குரியவர்களை எப்படி அடையாளம் காண்பது? விடை தெரிய முடியாமல், விடப்படுகின்ற கேள்விகளில் இதுவும் ஒன்று.

நம்பிக்கையானவரை சந்தேகப்படக் கூடாது. சந்தேகத்துக்குரியவரை நம்பக்கூடாது என்று. தேடல் நிறைந்த மனித வாழ்வில் நம்பிக்கைக்குரியவர்களைத் தேடுவதும் ஒரு தேடல்தான். இந்தத் தேடலில் நம்பிக்கைக்குரியவர்களைத் தேடி வரும் இன்னொருவர் நம்மைக் கடந்து தேடலுடன் சென்றுவிடாதபடி நாமும் வாழ்தலே பெருமதிமிக்கதாகும். தேடல் நிறைந்தவர்கள் நம்மைக் கடந்து போவார்களானால் நமது தேடலில் அர்த்தமில்லை. அதுகால விரயமாகும்.


## நிருபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி
### அதிசயம் ஆனால் உண்மை







**46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம்** www.drpksamy .com

**குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே**

**வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.**

**ஜெர்மனி அன்பரின் மடல்** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்** பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்** பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி** தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது** மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி** அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி** வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்** அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம்** மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை** மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-

# வடக்கு- கிழக்கு முஸ்லிம்களுக்கு

## தனியான சுயாட்சி அலகு தேவை



காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுதுகொண்டிருந்த முஸ்லிங்கள், புலிகள் இயக்கத்தினரால் மிருகத் தனமாக வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி அப்பாவி முஸ்லிங்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் கொல்லப்பட்டனர். 25இற்கு மேற்பட்டவர்கள் சிறுவர்கள் ஆவர். இதே போன்று ஏறாவூர் பள்ளிவாசலிலும் 100க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். காத்தான்குடி பள்ளிவாசலில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களைப் படம் காட்டுகின்றது.

**'தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு'**

**சிங்களக் கடும்போக்காளர்களின் புனைகதைகளையும் கட்டுக்கதைகளையும் அம்பலப்படுத்தும் விதத்தில், முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பி., எஸ்.தவராஜா சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் சமர்ப்பித்த ஆய்வறிக்கையின் இறுதிப் பகுதி, இவ்வாரம் பிரசுரமாகின்றது. இந்த நாட்டுத் தமிழர்களை வந்தேறு குடிகளாக மட்டும் கொச்சைப்படுத்தி, வரலாற்றைத் திரிவுபடுத்திய மகாவம்சக் காலம் தொட்டுத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த உந்தப்பட்ட காலம் வரையிலான அரசியல், சமூக, பொருளாதார பின்புலங்களை திரு.தவராஜாவின் ஆய்வறிக்கை அம்பலப்படுத்தியிருந்தது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் திரு.தவராஜா சமர்ப்பித்த ஆய்வறிக்கை தொடர்பான கருத்துக்கள், விமர்சனங்கள் வாசக நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. "தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு" என்ற தலைப்பில் ஜனவரி மாதம் பதினெட்டாம் திகதி தொடக்கம் வாராவாரம் இந்த ஆய்வறிக்கை பிரசுரமாகி வந்தமை குறிப்பிடத்தக்கது.**

### (சென்ற வாரத் தொடர்ச்சி)

**தலைவர்** அவர்களே, இதுவரை நான் தெரிவித்த கருத்துக்களில், தமிழர்களின் வரலாற்றும் பரிமாணத்திலிருந்து, வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு வழிவகுத்த தமிழ் அரசியல் உணர்வின் பரிணாமம் பற்றியும், வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்குத் தமிழர்கள் அளித்த ஆணை பற்றியும், குறிப்பிட்டிருந்தேன். எனது தொகுப்புரையில் நான் தமிழர்களென்று நான் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம், வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களைத் தவிர்த்துக் குறிப்பிடவில்லை. தனித்துவமான சமய, கலாசார அடையாளங்களைக் கொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள், இந்த நாட்டுத் தமிழர்களின் வரலாற்றிலும் அரசியல் சமூகத்திலும் அங்கம் பெற்றவர்களாவர். இதுகாலவரை, வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம் - இந்து அல்லது முஸ்லிம் - தமிழ் மோதல்கள் பிணக்குகள் பற்றி நான் கேள்விப்பட்டதேயில்லை.

தமிழர்கள் பாரம்பரியமாகவும் நிலத்தொடர்புடனும் வாழும் பகுதிகளில், தமது அரசியல் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கான மாற்று வழியாக, மாகாண சுயாட்சியை தமிழ் அரசியல் சமூகம் தேர்ந்தெடுத்த காலம் முதல், வடக்கு - கிழக்கு முஸ்லிம்களும் கூட இந்த எண்ணக் கருத்துடன் உறுதியாக நின்றிருக்கிறார்கள். தமிழ் அரசியல் சமூகத்தை உருவாக்குவதில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் தலைவர்கள் பெருமளவிற்கு பங்களித்திருக்கிறார்கள். இது தொடர்பாக எம்.எம்.முஸ்தபா, ஏ.சி.அகமட், மசூர் மௌலானா ஆகிய ஒருசிலரைக் குறிப்பிடலாம். 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட தினத்தன்று, காலிமுகத்திடலில் எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் மசூர் மௌலானாவும் ஒருவர் என்றும் அப்போது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயலில் பாதிக்கப்பட்டவர் அவரென்றும் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

மற்றொரு முக்கியத்துவம் மிக்க ஒருவர் ஜனாப் அஸ்ரப் ஆவார். இலங்கை தமிழரசுக் கட்சியின் கூட்ட மேடைகளில் ஆர்வத்தோடு உரையாற்றிவர்களில் அவரும் ஒருவர் என்பதோடு, வட்டுக்கோட்டை மாநாட்டில் பங்குபற்றியவர்களில் அவரும் ஒருவராவார். அவரின் முன்முயற்சியின் பேரிலேயே வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஆணை கோரும் ஒரே மேடையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தின் கீழ், 1977ஆம் ஆண்டுத் தேர்தல்களில் முஸ்லிம் ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் போட்டியிட்டனர். திரு.அமிர்தலிங்கம் ஈழ இலட்சியத்தைக் கைவிட்டால் கூட அதற்காகத் தான் தொடர்ந்தும் போராடுவேன் என்று அப்போது பகிரங்கமாகவே ஜனாப் அஷ்ரப் கூறியிருந்தாரென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

தலைவர் அவர்களே, 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் முன்வைக்கப்படும்வரை, வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, புறம்பான ஒழுங்கு முறையொன்றினைக் கோரியதாக நான் காணவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே இவை அனைத்தையும் குறிப்பிடுகின்றேன்.

இந்த நிலைமைக்கு மாறாக, 1980களின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை இடம்பெற்று வரும் நிகழ்ச்சிகள், தாம் வாழும் பகுதிகளில் பாதுகாப்பு, பந்தோபஸ்து மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழியாக சுயாட்சிப் பிராந்தியம் ஒன்றைக் கோருவதற்கு முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இக் காலகட்டத்தில் பெரும் துயரங்களை அவர்கள் அனுபவித்திருக்கின்றனர். அவர்கள் அனுபவித்த இத்தகைய கொடுமைகளுக்கு மத்தியிலும், தமது பாதுகாப்பைப் பேணுவதற்கான வழிவகையாக இன்றுவரை வன்செயலை நாடவில்லை. அவர்களின் சகிப்புத் தன்மை, பாராட்டப்பட வேண்டியதாகும்.

தமிழர்களின் சுயாட்சி உரிமைக்கான கோரிக்கை, வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்கள், புறம்பான 'சுயாட்சி பிராந்தியம்' ஒன்றினைக் கோரியதற்குமிடையிலான வளர்ச்சிப் போக்கில் ஒரு சமாந்தரத் தன்மை காணப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலையை நோக்கி இரு தரப்பினருமே தள்ளப்பட்டுள்ளனர். முஸ்லிம் மாணவர்களும் புத்திஜீவிகளும் முன்வைத்த 2003ஆம் ஆண்டு ஜனவரி ஒலுவில் பிரகடனத்தைப் பார்த்தால், அது ஒரு வித்தியாசமான முறையில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஒத்திருப்பதைக் காணலாம். நிர்ப்பந்தங்கள் காரணமாகவே இந்த இரு பிரகடனங்களும் எழுந்தன.

ஆனால், தலைவர் அவர்களே, இவற்றில் ஓர் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. தமிழர்கள் இத்தகைய நிர்ப்பந்தத்திற்கு ஜனநாயக ஆளுகையின் கீழ் தள்ளப்பட்டார்கள். இதேவேளை, முஸ்லிம்களின் அனுபவம் தீவிரவாதத்தின் நெருக்குதலின் கீழ் ஏற்பட்டது. தீவிரவாதத்தின் வளர்ச்சி 1977ஆம் ஆண்டு முதல், வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தை விழுங்கி விட்டது. வரதராஜப்பெருமாளின் மாகாண சபை நிர்வாகத்தின் கீழான அந்த குறுகிய காலத்தையும் ஜனநாயகத்திற்கான இடைவேளை என்று கருத முடியாது. இந்தக் காலகட்டத்தில்தான் தீவிரவாதம், அதிகாரத்துடன் சட்டபூர்வமாக்கப்பட்டது என்று நான் கருதுகின்றேன்.

ஜனநாயகத் தமிழ் அரசியல் சமூகம், முஸ்லிம்களின் அபிலாஷைக்கு இடமளிப்பதை அல்லது வடக்குக் கிழக்கு சிறுபான்மையினருக்கு இடமளிப்பதை எவ்வாறு தூரதிருஷ்டியுடன் பார்த்து ஏற்பாடுகளை மேற்கொண்டது என்பதைக் காட்டுவதற்காக வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலிருந்து மேற்கோள்காட்ட விரும்புகின்றேன்.

***"தமிழீழத்தின் எந்தவொரு சமய அல்லது பிரதேச சமூகமும் வேறெந்தவொரு பிரிவினாலும் ஆதிக்கம் செலுத்தப்படாமல் இருப்பதை பேணுவதற்காக, தமிழீழத்தின் அரசியலமைப்பு ஜனநாயக அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்."***

தமிழீழம் பற்றி நான் இங்கு பேசுகின்றேனென்று தயவு செய்து தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். அந்தத் தீர்மானத்தில் பொதிந்துள்ள எண்ணக்கருவை மட்டுமே நான் சுட்டிக் காட்டுகிறேன்.

எனவே, தலைவர் அவர்களே, வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் ஆதிக்கம் செலுத்தாத கொள்கை மற்றும் அனைத்து சமூகங்களினதும் பாதுகாப்பு, பந்தோபஸ்து, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணக் கூடியவர்களென்பதை நிரூபிக்க புத்துணர்வு பெற்ற தமிழ் ஜனநாயக அரசியல் சமூகத்துக்குச் சந்தர்ப்பம் ஒன்றினை முஸ்லிம்கள் வழங்க வேண்டுமென்பதே எனது ஒரேயொரு கோரிக்கையாகும். இத்துடன் நான் எனது தொகுப்புரையை முடித்துக் கொள்கின்றேன்.

### அரச உதவியுடனான குடியேற்றங்கள்

சுதந்திரத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க உதவியுடனான குடியேற்றத் திட்டங்கள், தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்திய பீதி பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். கிட்டத்தட்ட 50 வருடங்களாக தமிழ் பேசும் மக்களுக்கு இது மனக்கவலையை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. இன்றும் கூட அதுவே தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட கல்லோயா, கந்தளாய் போன்ற திட்டங்களுக்கு மேலதிகமாக, மகாவலித் திட்டத்தின் கீழான குடியேற்றங்களும் இருக்கின்றன. இத்திட்டங்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இனத் தொகையை மாற்றும் நோக்குடனேயே இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவே பீதி நிலவியது.

இதன் இறுதி விளைவு, தமிழ் பேசும் மக்களின் பாராளுமன்ற அதிகாரத்தைத் திட்டமிட்டு குறைப்பதாகவே அமையும்.

இனப் பரம்பல் தொகையின் மாற்றம் குறித்து முதலில் நான் கவனம் செலுத்த விரும்புகின்றேன். 1946ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி, கிழக்கு மாகாணத்தின் மொத்தச் சனத்தொகை 279.112 ஆகும். இவற்றில் சிங்களவர்களின் சனத்தொகை 27.556 ஆகும். அதாவது, இவர்களின் சனத்தொகை, மொத்த சனத்தொகையில் 9.87 சதவீதமாகும். ஆனால், 1981ஆம் ஆண்டு சிங்கள மக்களின் சனத்தொகை 24.98 சதவீதமாக மாறியதோடு, ஏனையவர்களின் எண்ணிக்கை மொத்தமாக 75.02 சதவீதமாக இருந்தது. நான் ஏற்கனவே சமர்ப்பித்த எனது சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கைக்கு மேலதிகமாக, எனது கூற்றுக்கு வலுச் சேர்ப்பதற்காக, "அரச உதவியுடனான குடியேற்றங்கள் - உண்மைகளும் புனைகதைகளும்" என்ற தலைப்பில் விவசாயத் திணைகளத்தின் ஓய்வுபெற்ற பிரதிப் பணிப்பாளரும் மகாவலி அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளருமான கேணல்.டி.தா்மசேன சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகின்றேன்.

***"கிழக்கு மாகாணத்தில், மாகாண சிங்கள மக்களின் சனத்தொகை 4.5 சதவீதத்திலிருந்து (1921)24.9 சதவீதத்திற்கும் பெருமளவிற்கு அதிகரித்துக் காணப்பட்டது. திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குப் பெருமளவு காரணமாகும்."***

புள்ளி விபரத் தகவல்களின் மூலம் எனது கருத்துகளுக்கு வலுச் சேர்ப்பதற்காக மட்டுமே நான் இதனைக் குறிப்பிடுகின்றேன்.

கந்தளாய், கல்லோயா போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களாலேயே இனப் பரம்பல் தொகையில், முக்கியமாக இந்த மாற்றம் ஏற்பட்டது. வர்த்தக நடவடிக்கைகளுக்கான இயற்கையான இடம்பெயர்வு, திருகோணமலையில் கடற்படைத் தளமும் துறைமுகமும் விஸ்தரிக்கப்பட்டமை ஆகியவையும் இதற்கான ஏனைய காரணங்களாக கூறப்படுகின்றன.

இது எவ்வாறு அரசியல் அதிகாரத்தினை பாதித்தது என்பதை நான் இப்போது சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து 1947ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டு வரையிலான பொதுத் தேர்தல் முடிவுகளைப் பார்த்தால் இந்த மாகாணங்களிலிருந்து ஒரு சிங்கள எம்.பி. கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதைக் காண முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து எம்.பி.க்களுமே நூறு சதவீதம் தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக சிங்கள எம்.பி. ஒருவர் 1960ஆம் ஆண்டு அம்பாறையிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் பலர் கிழக்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் கூட தெரிவு செய்யப்பட்டனர். உண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இன ரீதியாக 1946ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை இனரீதியாக வெளியிட விரும்புகிறேன். அதனைக் காலக்கிரமத்தில் நான் சமர்ப்பிக்க இருக்கின்றேன். அரச உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்களின் விளைவே இதுவென்பது தமிழ் மக்களின் கருத்தாகும். மகாவலித் திட்டமும் இதே விதமான பீதியையே ஏற்படுத்தியிருக்கிறது.

முழு மகாவலித் திட்டமும், திட்டமிட்டவாறு பூரணப்படுத்தப்பட்டிருந்தால், அதாவது A. பிரிவு (திருமலை - மட்டக்களப்பு), B. பிரிவு (வலது கரை - மட்டக்களப்பு), D2 (திருமலை), I (வவுனியாவில் ஒரு பகுதி), J (மன்னார் - முல்லைத்தீவு), K,L மற்றும் M(வவுனியா - முல்லைதீவு) ஆகியவை வடக்குக் கிழக்கின் இனச் சனத்தொகையை பெருமளவிற்கு மாற்றியிருக்கின்றது. உதாரணத்திற்கு வெலிஓயா குடியேற்றத் திட்டம் என்று பிரபல்யமாக அழைக்கப்படும் L பிரிவிற்கான குடியேற்றவாசிகள் தெரிந்தெடுக்கப்பட்ட விதத்தைக் குறிப்பிடலாம். குடியேற்றத் திட்டங்களில் விரைந்து மேற்கொள்ளப்பட்ட ஒரேயொரு திட்டம் இதுவாகும். தமிழர்கள் மத்தியில் இன்னமும் கவலையை ஏற்படுத்துவதாக நான் குறிப்பிட்ட குடியேற்றத் திட்டங்களில், இந்த வெலிஓயா திட்டமும் ஒன்றாகும். வவுனியா, முல்லைதீவு மாவட்டங்களில் முழுமையாக இருக்கும் இக் குடியேற்றத் திட்டத்திற்கு 3,364 விவசாயக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன. (இதில் 1376 குடும்பங்கள் மட்டும் பின்னர் குடியேற்றப்பட்டன.) எந்தவொரு தமிழ் அல்லது முஸ்லிம் குடும்பத்திற்கு அங்கு காணி வழங்கப்படவில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட ஏனைய குடியேற்றத் திட்டங்களைப் பார்ப்போம். அதாவது, B பிரிவு (இடது கரை), C,G, H, மற்றும் உடவளவை ஆகிய அனைத்துத் திட்டங்களுமே வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ளன. 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மகாவலி புள்ளி விபரக் கைநூலின் படி, 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, இந்தக் குடியேற்றத் திட்டங்களில் மொத்தம் 85.773 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இவற்றில் 1121 தமிழ் குடும்பங்கள் 2703 முஸ்லிம் குடும்பங்கள் அதாவது மொத்தக் குடியேற்றவாசிகளில் இவர்கள் 4.45 சதவீதத்தினர் மட்டும் தான்.

2004ஆம் ஆண்டு வரை மொத்தம் 87,208 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதால், இனங்களின் சனத்தொகையில் கணிசமான சதவீத மாற்றம் எதுவும் இன்றுவரை ஏற்பட்டிருக்க முடியாது.

பொருளாதார விடிவிற்காக எந்தவொரு சமூகமும் எங்கும் குடியேற முடியுமென்று வாதிடப்படுவதால், நான் இவற்றை எடுத்துக் காட்டுகின்றேன். இந்த வகையில் தமிழ் பேசும் மக்கள் இத்திட்டங்களில் போதியளவிற்கு குடியேற்றப்பட்டிருக்க வேண்டும்.

தலைவர் அவர்களே, தமிழ் பேசும் மக்கள் ஐம்பதுகளின் மத்தியில், மத்திய அரசாங்கத்தில் நீதியான அதிகாரப்பகிர்வு, ஒழுங்குமுறை என்ற தமது நிலைப்பாட்டிலிருந்து, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் மாகாண சுயாட்சி கோரும் நிலைக்கு மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதாவது தாம் வாழும் பகுதிகளில் பெரும்பான்மை ஆட்சியை நடைமுறைப்படுத்துவதே அவர்களின் கோரிக்கையாகும். இந்தப் பெருமளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களில், அப்போது இருக்கக் கூடிய சனத்தொகைக்கு ஏற்ப விகிதாசார ரீதியில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையை கடைப்பிடிக்கத் தவறினால், அதுகாலவரை பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதிகளில் கூட சிறுபான்மையினர் என்ற மட்டத்திற்குத் தாம் குறைக்கப்பட்டு விடுவோம் என்ற பயம் தமிழர்கள் மத்தியில் நிலவியது. இதனால் தான் தமிழ் தலைமைத்துவம் ஒவ்வொரு பேச்சுவார்த்தைகளிலும் பிரகடனங்களிலும் காணிக் குடியேற்றத்தை முக்கிய பிரச்சினையாக முன்வைத்து வந்திருக்கின்றது. **(முற்றும்)**




**அந்த** உறவும் ஒரு புறம் இருந்து வந்தது. அதை விட சூரியமூர்த்திக்கும் ஆனந்தசங்கரி அவர்களுக்கும் இடையில் பழைய கிளிநொச்சி உறவும் நேரடியாக இருந்தது.

அந்த இறுக்கமான உறவு யாழ். தேர்தல்களத்திலும் இருவரையும் சேர்த்து வைத்திருந்தது.

தேர்தல் காலத்தில் ஈ.பி.டி.பி. ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி என பலதரப்புக்கும் இடையில் இணைப்பாளராக சூரியமூர்த்தியே சங்கரி சார்பில் நின்று செயலாற்றி இருந்தவர்.

சூரியமூர்த்தி திருமலையில் வைத்து புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இவரது கொலைக்கு காரணமானவர்கள் புலிகளே என்பது சம்பவ இடத்தில் நின்றிருந்த பலருக்குத் தெரிந்த விடயம்.

சூரியமூர்த்தி சுடப்பட்டு சில நாட்களின் பின்பே அவர் இறந்திருந்தார். உயிருடன் இருக்கும்போது தனது வாக்குமூலத்திலும் சூரியமூர்த்தி தன்னை புலிகளே சுட்டதாக தெரிவித்திருந்தார்.

ஆனந்தசங்கரியின் கைகளை உடைப்பதே சூரியமூர்த்தி அவர்களை புலிகள் கொல்வதற்கான பிரதான நோக்கமாக இருந்தது.

இதை சூரியமூர்த்தியின் நெருங்கிய அரசியல் தலைவரான ஆனந்தசங்கரி அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றார். புலிகள்தான் அவரை கொன்றிருக்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தியிருந்தார்.

திருமலையில் தமிழ் பிரதேசம் ஒன்றில் புத்தர் சிலையை நிறுவிய போது ஏற்பட்ட அமளிதுமளிக்குள் புலிகள் சூரியமூர்த்தியை போடத்திட்டமிட்டிருந்தது கொலைப்பழியில் இருந்து தாங்கள் தப்புவதற்காகவே.

உண்மையான கொலையாளிகள் தாமாக தப்புவதற்கு வழி தேடுவது ஒரு புறம் இருக்க உண்மையான கொலையாளிகளை காப்பாற்றும் விதத்தில் சில நிறுவனங்களும் துணை போன சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அப்போது அதற்கு ஆதாரமாக சூரியமூர்த்தியின் கொலை தொடர்பாக திடுக்கிடும் தகவல் ஒன்று வெளியாகியிருந்தது. ஆனால் அது ஒரு பொய்யான தகவல்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்ற யு.ரீ.எச்.ஆர். வெளியிட்ட அறிக்கையில் சூரிய மூர்த்தியை புலிகள் அல்லாத வேறொரு இயக்கம்தான் சுட்டுக்கொன்றது என தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

உண்மையில் புலிகளுக்கு மாற்றான அமைப்புகளுக்கும் புலிகள் மீது வெறுப்புணர்வு கொண்டவர்களுக்கும் யு. ரீ. எச். ஆர் மீது நிறைய நம்பிக்கை இருந்தது. புலிகள் குறித்த மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்வதில் யு.ரீ.எச்.ஆர் நிறைய பங்களிப்பை செலுத்தியிருந்தது.

சூரியமூர்த்தி குறித்த அறிக்கையோடு புலிகளுக்கு மாற்றீடான ஜனநாயக சக்திகளுக்கு இருந்த யு.ரீ.எச்.ஆர். மீதான நம்பிக்கை உடைந்து போயிருந்தது.

உள்ளிருந்து வந்த தகவல் என்று யாரோ கொடுத்த தகவலை யு.ரீ.எச்.ஆர். ஆதாரமின்றி பிரசுரித்திருந்தது. பின்பு தமக்கு கிடைத்தது தவறான தகவல் என்பதை யு.ரீ.எச்.ஆர் அமைப்பினர் ஏற்றுக்கொண்டதாக ஒரு தகவலும் உண்டு.

மனித உரிமை அமைப்புகள் தகவல்களை எடுப்பதில் அவசரத்தை காட்டும் அளவிற்கு கிடைத்த தகவல் உண்மைதானா என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இது ஒரு பாராபட்சமான செயற்பாடாகும்.

குறிப்பிட்ட மனித உரிமை அமைப்புகளுக்கு தகவல்களை வழங்கிக்கொண்டிருக்கும் வதிவிடப்பிரதிநிதிகளே இந்த பொய்யான அறிக்கைகளின் சூத்திரதாரிகள். தங்களது அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை கொட்டித் தீர்ப்பதற்கு அவர்களுக்கு தளமாக இருப்பது ஒரு மனித உரிமைகள் அமைப்பு.

இது மனித உரிமைகள் குறித்து அவர்கள் கொண்டிருக்கும் நிலைப்பாடு எது என்பதைத் தெளிவு படுத்துகின்றது. ஒரு யுத்த சூழலில் பொய்யான ஒரு தகவலை வழங்குவதே மனித உரிமை மீறலாக கருதப்படுகின்றது.




ஆகவே மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத சக்திகளை வதிவிடப்பிரதிநிதிகளாக கொண்டிருப்பது குறித்து சம்பந்தப்பட்ட மனித உரிமை அமைப்பு மீளாய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

மனித உரிமை அமைப்புகள் தமக்கு கிடைக்கும் தகவல்களை அடிப்டையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறலுக்குரிய அமைப்புகளோடு தொடர்பு கொண்டு கதைப்பதே வழமை.

ஆனால் சூரியமூர்த்தியின் விடயத்தில் தமது பதிவு குறித்து யு.ரீ.ஏச்.ஆர். சம்பந்தப்பட்டதாக கருதிய எந்த தரப்போடும் தொடர்பு கொண்டதாக தெரியவில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. அதனால் உண்மையான மனித உரிமை மீறலுக்குரியவர்களை காப்பாற்றும் கைங்கரியத்தில் சம்பந்தப்பட்ட அமைப்பு ஈடுபட்டிருக்கின்றது.

இத்தொடரில் இந்த விடயத்தை பதிவு செய்தமைக்கான காரணம் உண்டு. முக்கியமான சில மனித உரிமை மீறல்கள் குறித்தும் இத்தொடரில் இடம்பெற உள்ளது. அதற்கு இந்த பதிவும் உதவும் என்பதே எதிர்பார்ப்பு.

இனி இன்றுள்ள சிலர் அன்று அரசியலில் எந்த முகத்தை காட்டி நின்றிருந்தார்கள் என்பது குறித்து பார்க்கலாம்.

86 ஆம் ஆண்டு புலிகள் அமைப்பால் சகல இயக்கங்களும் தடை

**தேடனார்**

செய்யப்பட்ட பின்பு பிறந்த இளவயதினர்தான் இன்று இயக்கங்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் தெரிந்து கொள்வதற்கு இது உதவும்

86 இல் அரசியல் அரங்கில் விஜிதரன் என்றொரு பெயர் பிரபல்யம் பெற்றிருந்தது. யார் இந்த விஜிதரன்?... யாழ். பல்கலைக்கழக மாணவன்!... மட்டக்களப்பு சொந்த இடம்.

யாழ். பல்கலைக்கழ கத்திற்குள் மிக தீவிரமான செயற்பாடுகளை கொண்டிருந் தவர். (சாட்சிகள் தொடரும்)

---

**நியூயோர்க்** சென்ற பிடல் தம்பதியினர் அங்கு தங்கியிருந்த காலப் பகுதியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடர்பாகவும், பொருளாதார வளர்ச்சி பற்றியும் எப்படி ஏனைய நாட்டின் வளங்களை அமெரிக்கா சுரண்டுகிறது என்பது பற்றியும் பிடல் மிகுந்த தேடலுடன் தெரிந்து கொண்டார். சில சமயங்களில் மிர்தா, பிடலுடன் கோபித்துக் கொள்வார் தேனிலவுக்காக வந்த இடத்திலும், பிடல் அமெரிக்காவைப் பற்றித் தெரிந்து கொள்வதிலேயே முழுக்கவனத்தையும் செலவு செய்கிறாரே என்று. சில சமயங்களில் பிடலின் கியூபா மீதான நேசிப்புத்தான், எதிரிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை அதிகப்படுத்தியிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு பிடலைப்பார்த்து சிரித்து விட்டு இருந்து விடுவாராம். நியூயோர்க் நகரில் இருந்தபோது மார்க்ஸின் புத்தகங்களை அதிகமாக வேண்டி பிடல் வாசித்தார். அதேபோல் டாஸ் காபிட்டல் என்ற நூலையும் இங்குதான் வாங்கினார். இரவு முழுக்க புத்தகங்கள் வாசிப்பதிலேயே பிடல் தனது முழுக்கவனத்தையும் செலுத்தியதாக மிர்தா பிற் காலத்தில் சொல்லிச் சிரிப்பாராம்.

ஒரு மாதம் தேனிலவுக்காக செலவழிந்து விட்டதால் மீண்டும் நாடு திரும்ப பிடல் யோசித்தபோது, முன்னர் போல் கியூபாவுக்குச் சென்று தனித்தனியாக இருக்க முடியாது. மிர்தாவுடன் வேறாக குடும்பமாக இருக்க வேண்டும், எங்கே இருப்பது என்று யோசித்தார்.

மிர்தாவின் குடும்பத்தாரும் - பிடலின் குடும்பத்தவர்களும் உதவுவதற்குத்தயாராக இருந்த போதும் குடும்பத்தை நடத்த யாருடைய தயவையும் நம்பியிருக்க விரும்பாத பிடல் கியூபா திரும்பியதும், வீடுதி ஒன்றில் தனியாக அறை ஒன்றை எடுத்துக் கொண்டு இருப்பது என்ற தன் முடிவை மிர்தாவிடம் கூறினார். பிடலின் புரட்சியான முடிவுகளில் இதுவும் ஒன்று என்று ஏற்றுக் கொண்ட மிர்தா, கல்யாணத்திற்கு முன்னர்வரை வாழ்ந்த சுகபோகமான வாழ்க்கையை கைவிட்டு பிடலுடன் வாழ்வதற்குத் தயாரானார். அதே போல் இருவரும் கியூபா திரும்பியதும் தனி அறை எடுத்துத் தங்கினார்கள்.

பிடல் புதிய வாழ்க்கையை வாழத் தொடங்கினார். இல்லற வாழ்க்கை பிடலின் புரட்சியை கெடுத்துவிடும் என்று பலரும் கூறினர். ஒரு வகையில் பிடலின் திருமணமே ஒரு




புரட்சிகரமானதுதான். 1948ஆம் ஆண்டு பிடலுக்குத் திருமணம் நடக்கும்போது 22 வயது, மிர்தாவுக்கு 21 வயது. இவ்வளவு இள வயதில் திருமணம் செய்யும் வழக்கம் கியூபாவில் அறியப்படாததாகும். இதற்குக் காரணம் பிடலின் துணிச்சலான முடிவுதான். அதேபோல் வசதியான குடும்பத்தில் பிறந்த மிர்தா அவை எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு பிடலுடன் ஒரு தனி அறையில்

**தருவது**
**எம். கேஷிகன்**

வாழ விரும்பியதும் புரட்சிகரமான துணிச்சல்தான். ஆகவே புரட்சிக்கும் - பிடலின் இல்லற வாழ்வுக்கும் இடைவெளி என்று இல்லை. இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்திருந்தது எனலாம். பிடல் தனியாகக் குடித்தனம் நடத்தினாலும் சம்பளம் பெறக் கூடிய வேலை எதையும் செய்யவில்லை என்பதால் பிடலின் படிப்புச் செலவுக்காக பணம் அனுப்பியதைப் போல் பிடலின் தந்தை தொடர்ந்தும் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார். அந்தப் பணம் அறை வாடகைக்கும் உணவுச் செலவுக்குமே போதுமானதாக இருந்தது. இதைவிடவும் அதிகமான தொகைப் பணத்தை மிர்தா தனது பெற்றோரிடமிருந்து பெறமுடியும் என்ற போதும் பிடலின் கௌரவத்துக்கு இழுக்காக இருந்து விடும் என்பதால் மிர்தா அதைச் செய்யவில்லை.

கியூபா திரும்பிய பிடல் பழையபடி நண்பர்களுடன் இணைந்து கொண்டு தெருவில் போராட்டங்கள் நடத்துவது, கட்சிப் பணி செய்வது என்று தனது போராட்டப் பாதையில் இறங்கிச் செயல்பட்டார். நேரம் காலம் தெரியாமல் பிடலின் போராட்டங்கள் தொடர்ந்தது. சில சமயங்களில் சாப்பாட்டுக்காகக்கூட அறைக்கு வருவதை பிடல் மறந்து விடுவார். அதேபோல் மிர்தா தனிமையில் இருப்பது மறந்து இரவு நேரம் கடந்து அறைக்கு வருவார். இதையெல்லாம் மிர்தா தாங்கிக் கொண்டதும், தனிமையை ஏற்றுக் கொண்டதும் பிடலின் மீது கொண்டிருந்த காதலால் மட்டுமேயன்றி, வேறொன்றுமில்லை. காதல் முதன்மையிடத்தில் இருக்கின்றபோது, விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை என்பன தானாகவே வந்து விடுகிறது என்பதை மிர்தாவின் வாழ்க்கை தெளிவு படுத்துகிறது.

இவ்வாறாக இரண்டு ஆண்டுகள் கடந்து ஓடின. பிடல் கல்லூரிக்கு ஒழுங்காகப் போக முடியாமல் போராட்டங்களில் கவனம் செலுத்தியதால் ஒரே தேர்வில் அவரால் பட்டம் பெற முடியவில்லை. சட்டத் தேர்விலும், தொழில் தகராறு சட்டத்திலும், அரசியல் சட்டத்திலும் மிக உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றது பிடலுக்கு மிக ஆறுதலாக இருந்தது. மறுமுறையும் தேர்வு எழுதுவது என்ற நோக்கத்தோடு பிடல் மீண்டும் படிப்பைத் தொடர்ந்தார். இறுதியாண்டில் மாணவர் தலைவராகவும் தெரிவானார். இந்த காலகட்டத்தில் பேருந்து நிறுவனம் கட்டண உயர்வை அறிவித்தது. மாணவர்கள் இதை எதிர்க்க வேண்டும் என முடிவு செய்தனர். மாணவர்களுடன் தொழிற்சங்கங்களும் கூடி எதிர்த்தது. இந்தப் போராட்டத்தைத் தடுப்பதற்காக கல்லூரிக்குள் நுழைந்த பொலிஸார் வானை நோக்கிச் சுட்டனர். பொலிஸாரை நோக்கி மாணவர்கள் கற்களாலும், தக்காளிப் பழத்தாலும் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் பொலிஸார் மாணவர்களை நோக்கியும் சுட்டனர். இதில் 10இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயமடைந்தனர். மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் பரவியது. மக்கள் கொந்தளித்தனர். வீதியில் இறங்கிப் போராடினர். கலவரம் வெடித்தது. அரச சொத்துக்கள் தீவைத்து எரிக்கப்பட்டது. மக்களின் கிளர்ச்சியை மேலும் தீவிரப்படுத்தும் எண்ணத்தில் பிடல் தலைமையிலான மாணவர்கள் பெருந் தொகையான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்தனர். வானொலியில் பிடல் பேசும்போது, மாணவர்களையும், தொழிலாளர்களையும் ஒடுக்குவதற்காகவே அரசு இவ்வாறு செய்கிறது என்று கூறினார்.

இந்தப் போராட்டங்கள் ஓய்வு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது காரணம் கூறாமலே பேருந்துக் கட்டண உயர்வை அரசு இரத்துச் செய்ததாக அறிவித்தது.

எந்தப் போராட்டமானாலும் அதைப்பற்றிய விரிவான பிரசாரம் அவசியம் என்பது பிடலின் கருத்து. பத்திரிகைகளையும், வானொலியையும் பிரசாரத்துக்காக பிடல் மிகச் சாதுரியமாகப் பயன்படுத்தினார்.



இதே காலகட்டத்தில் மிர்தா கர்ப்பமாக இருக்கிறார் என்ற செய்தி பரவியது. பிடலின் மகிழ்ச்சி எல்லை கடந்து வெளிப்பட்டது. முன்னரைப் போல் நேரம் பாராமல் வீட்டுக்கு வருவதையும் மிர்தாவை கவனித்துக் கொள்வதையும் தனக்கிருக்கும் வேலைகளின் ஒரு பகுதியாகச் செய்தார். பிடலின் மாற்றம் கண்டு மிர்தா மகிழ்ச்சியடைந்தார். புரட்சிக்காரனாக மட்டும் இருந்தால் மட்டும்போதாது நல்ல குடும்பஸ்தனாகவும் தனக்கிருக்கும் பணியைச் சரியாகச் செய்ய வேண்டியதன் அவசியத்தை பிடல் உணர்ந்தார். மிர்தாவுடன் அதிக நேரம் இருக்கக் கிடைத்தபோது மிர்தாவின் தனிமையான நேரங்கள் எத்தனை கொடுமையானதாக இருந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு தவறிப் போன சந்தர்ப்பங்களுக்காக மிர்தாவிடம் பிடல் மன்னிப்புக் கேட்டுக் கொள்வார். அப்போதெல்லாம் தனக்கு உதவி செய்து தன்னைக் கவனித்துக் கொள்ளும் கணவனாக பிடலைப் பார்ப்பதை விடவும், சுறுசுறுப்புக் குறையாமல் புரட்சியும், போராட்டமுமாக இருக்கும் பிடலையேதான் மிக அதிகமாக ரசித்ததாகச் சொல்வார்.

1949ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குழந்தைப் பேறுக்காக பிடல் மிர்தாவை மருத்துவ மனையில் சேர்த்தார். இந்தச் செய்தி கேட்டு மிர்தாவின் குடும்பத்தாரும் பிடலின் குடும்பத்தாரும் வருகை தந்திருந்தார்கள். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த மிர்தாவை உறவினர்கள் கவனித்துக் கொண்டதால் பிடல் கட்சி வேலைகளில் ஈடுபட வசதியாக இருந்தது.

1949ஆம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதி பிடலின் காரியாலயத்திற்கு வந்த செய்தி கேட்டு பிடல் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அந்தச் செய்தியானது, மிர்தாவுக்கு பிரசவமாகி ஓர் அழகான ஆண்பிள்ளை பிறந்திருக்கிறது என்பதுதான்.

(அசத்தல் தொடரும்)


# பாடம் புகட்டிய வியட்நாம்



**தேடுதல்** நடவடிக்கை என்றால் இனி கேட்கவும் வேண்டுமா? அப்பாவி பொதுமக்களைப் போட்டு சித்திரவதை செய்து அவர்களை வியட்கொங் இராணுவத்தினர் என்று பிடித்து சிறையில் அடைந்தார்கள். அவர்களில் சிலரை அமெரிக்கப்படைகள் சித்திரவதைக்கும் உள்ளாக்கினார்கள். ஆனாலும் அவர்களை ஜனாதிபதி திரும்பிச் சென்றவுடன் விடுதலை செய்யுமாறு அனைவருக்கும் கட்டளையிட்டிருந்தார்.

ஜனாதிபதி ஒவ்வொரு முகாமாக விஜயம் மேற்கொண்டு தங்கள் படையினரின் முன்னேற்றத்தைக் கண்டு வியந்தார். மிகவும் நல்ல முறையில் படைகளை ரிக் நடத்திக் கொண்டு செல்கிறான் என்ற நல்லெண்ணம் ஜனாதிபதி மனத்தில் தோன்றியது. இவ்வெண்ணத்தால் ரிக் கேட்கும் அனைத்தையும் அவனுக்குக் கொடுத்து விடலாம் என்று முடிவுக்கு வந்தார். அத்துடன் ரிக்கினை பிரிகேடியர் நிலைக்குப் பதவியை உயர்த்தவும் யோசித்து வைத்தார்.





ரிக்கின் முன்னேற்றம் ஜனாதிபதிக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனாலும் உடனடியாக ஜனாதிபதியால் உடனடி முடிவுக்கு வந்துவிடமுடியவில்லை.

முகாம்களின் நிலை மிகவும் திருப்திகரமாக இருந்ததால் ஜனாதிபதி பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேலோட்டமாகப் பார்த்தார். அவையும் திருப்திகரமாக அமைந்ததால் மேலும் முன்னேறி முன்னரங்க காவல் நிலைகளையும் ஜனாதிபதி பார்வையிட விரும்பினார். இந்த யோசனையை ரிக்கிடம் முன்வைத்தார் ஆயினும், ரிக் உடனடியாக செல்வதற்கு தடைவிதித்திருப்பதாக கூறினான். ஆயினும் ஜனாதிபதி அவ்விடத்தையெல்லாம் பார்த்துவிட வேண்டும் என்று மிகவும் விரும்பினார். அத்துடன் இராணுவத்தினருக்கும் உற்சாகமூட்டலாம் என்று ஜனாதிபதி கூறினார். நீண்ட வாக்குவாதத்தின் பின் கடைசியில் ஜனாதிபதியை அழைத்துச் செல்ல முடிவு செய்தான் ரிக். ஆனால், உடனடியாக இல்லாமல் சில மணி நேர தாமத்தின் பின் அழைத்துச் செல்வதாக கூறினான். ஜனாதிபதியும் அதற்கு உடன்பட்டார்.

ஜனாதிபதி வருவதால் முன்னரங்க காவல் நிலைகளில் இராணுவ வீரர்கள் அளவுக்கு அதிகமாக குவிக்கப்பட்டார்கள். விமானப்படையினரின் உளவு விமானங்கள் வான் வழியாக நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன. சின்ன ஒரு அசைவைக் கண்டவுடனே சுட்டுத் தள்ளும் படி கட்டளையிட்டிருந்தான் ரிக். அத்துடன் ஊடறுத்து செல்லும் படைப்பிரிவினரும் தங்கள் பங்கிற்கு வியட்நாமின் சில பகுதிகளுக்கு ஊடறுத்துச் சென்றிருந்தார்கள். அவர்களின் பணி மகத்தானதாகவே இருந்தது. அவர்கள் மக்களோடு மக்களாக கலந்து, வியட்கொங் இராணுவத்தினரின் திட்டங்களை அறிந்து கொள்வதற்காக பெரிதும் பாடுபட்டார்கள். ஆனாலும் வியட்கொங் இராணுவத்தினர் எந்த விதத் தாக்குதல் முன்னெடுப்புகளையும் எடுக்கவில்லை என்று அறிந்து கொண்டார்கள். இத் தகவலை அவர்கள் ரிக்கிற்கு அனுப்பினார்கள். அதன் பின்னே ரிக் ஜனாதிபதியை அழைத்து வந்தான் முன்னரங்க காவல் நிலைகளுக்கு. அவ்விடத்தை அடைந்த ஜனாதிபதி, அங்கிருந்த இராணுவத்தினருடன் மிகவும் மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினார். அவர்களிடம் என்ன குறை இருக்கிறது என்றும் பகிரங்கமாகக் கேட்டார். எல்லோரிடமும் வெகுவாக கதைத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில் ஜனாதிபதி முன்னரங்க காவல் நிலைகளுக்கு வருவதை வியட்கொங் இராணுவத்தினர் அறிந்து கொண்டார்கள். எப்படியாவது தாக்குதல் ஒன்றை நடத்திக் காட்டிவிட வேண்டும் என்று வியட்கொங் இராணுவத்தினரின் தாங்கிகளின் குழல்கள் முன்னரங்க காவல் நிலைகளை நோக்கித் திருப்பட்டன. அவை மூலம் எறிகணைகள் சிலவற்றை வீசுவதே அவர்களின் நோக்காக இருந்தன. அதன்படி இராணுவத் தாங்கிகள் நெருப்புப் புகையைக் கக்குவது போல் எறிகணைகளை வீசின. புகை எழும்புவதை வான் வழியாக நோட்டம் விட்டுக் கொண்டிருந்த விமானப் படையினர் நேரடியாக ரிக்கிற்கு அறிவித்தனர். அதே வேளை ஊடறுத்துச் சென்ற படையினரும் பலமான எறிகணை சத்தங்கள் கேட்பதாக தகவல் அனுப்பினார்கள். எப்படியும் அவர்கள் தாக்குவார்கள் என்று முன்னரே எண்ணியிருந்த ரிக், உடனடியாக ஜனாதிபதியை பாதுகாப்பிற்காக நிலத்திற்கடியில் அமைக்கப்பட்டிருந்த அறை ஒன்றிற்குள் இழுத்துச் சென்றான். அறையை அடைய முன்னரே ஒரு எறிகணை முகாமிற்கு மிக அண்மையில் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தது. காதை அடைத்து விடும் அச்சத்தத்தினை கேட்ட ஜனாதிபதி சிறிது பயப்பட்டார். ஆனாலும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் நிலத்தடி அறைக்குள் புகுந்து கொண்டார். தனக்கு மிக அண்மையில் எறிகணைகள் விழுவது போன்ற சத்தங்களை அவர் கேட்டுக் கொண்டிருந்தார். ரிக் பயப்படாமல் வெளியேறிச் சென்று தன் படையினரை எங்கிருந்து எறிகணை வருகிறது என்று கண்டு பிடித்து திரும்பத் தாக்குமாறு கட்டளையிட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் விமானப்படையினரையும் உடனே தாக்குமாறு கட்டளையிட்டான். விமானப்படையினரின் போர் விமானங்கள் பல வானிற்கு ஏவப்பட்டன.


(தொடரும்)

# எய்ட்ஸ் பரவலைத் தடுக்கப் புதிய வழி!

**தமிழ்** நாட்டில் பெண் பாலியல் தொழிலாளர்களுக்குப் பெண்ணுறையை விநியோகிக்கும் மிகப் பெரிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையமும், வேறு சில தொண்டு நிறுவனங்களும் இணைந்தே இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கின்றன.

குறிப்பாக, அவர்களிடம் வரும் ஆண் வாடிக்கையாளர்கள் ஆணுறையை அணிய மறுக்கும் சூழல்களில், இந்தப் பெண்ணுறை அவர்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்புக் கவசமாக இருக்கும் என்ற கருத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளாலும், தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களாலும் முன் வைக்கப்படுகின்றது.



இதன்படி, மாநிலத்தில் இருக்கும் சுமார் மூவாயிரம் பெண் பாலியல் தொழிலாளர்களுக்கு, எதிர்வரும் நான்கு மாத காலத்தில் அறுபதாயிரம் பெண்ணுறைகள் மிகக் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட இருக்கின்றன.

பெண் பாலியல் தொழிலாளர்கள் மூலம் எச்.ஐ.வி. நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இத் திட்டம் பரீட்சார்த்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும், பெண்ணுறை என்பது பாலியல் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல், சராசரி பெண்களுக்குக்கூட பால்வினை நோய்களிலிருந்தும், தேவையற்ற கருத்தரிப்பிலிருந்தும் பாதுகாப்பளிக்கும் என்கிற கருத்தும் இவர்களால் முன் வைக்கப்படுகின்றன.

பெண்களின் பாலியல் சுதந்திரம் மற்றும் உடல் ஆரோக்கியத்திலும் இந்தப் பெண்ணுறை ஆக்கபூர்வமாகப் பங்காற்றக்கூடிய சாதனமாக உருவெடுக்கும் என்கிற எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

# எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## உடல் எண் - 9, உயிர் எண் - 5

9, 18, 27 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் இவர்கள் செவ்வாய், புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

மிகுந்த சுறுசுறுப்பான இவர்கள், பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும், மன திடமும், உடல் பலமும் கொண்டவர்களாக இருப்பர். தன்னை நம்பி இருப்பவர்களுக்கு உண்மையானவர்களாகவும், தன்னை எதிர்ப்பவர்களுக்குப் பலமான எதிரியாகவும் இருப்பர். பலர் மதிக்கும் மனிதராக வாழும் இவர்கள் முன்னேற்றத்தைப் பெற ஓடோடி உழைப்பர். எக்காரியத்தில் இறங்கினாலும், துரிதமாகச் செய்து முடிக்க எண்ணுவர். இவர்களைப் போன்று மற்றவர்களும் வேகமாகச் செயல்பட வேண்டும் என்று விரும்புவர்.

சோம்பேறிகளைக் கண்டாலே இவர்களுக்குப் பிடிக்காது. சோம்பேறிதான் நாட்டின் எதிரி என்று கூறுவர். மெதுவாகச் செயல்படும் ஒவ்வொரு மனிதனும் தன் வெற்றியை இழந்து விடுவான் என்று கூறுவர். எக்காரியத்தில் இறங்கினாலும் தனக்குச் சரியான வருவாயைத் தேடிக் கொள்ளுவர். தனது நேரத்தை வீணடிக்காது பயனுள்ளதாகப் பயன்படுத்த நினைப்பர். வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகளைத் தகர்த்தெறிந்து முன்னேறிக் கொண்டே செல்லுவர்.

இவர்கள் பெயர் பொருத்தமான நல்ல எண்ணில் அமைந்து விட்டால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர். ஆனால் பெயர் ஒழுங்காக அமையாவிட்டால் இடையிடையே பொருள் இழப்புக்களும், குடும்பப் பிரச்சினைகளும் வந்து சேரும். இவர்கள் மனம், சட்டம், சமயம், சங்கீதம், மருத்துவம், இரசாயனம் போன்றவற்றை ஆராயும்.

பல விபத்துக்களையும் கடந்து வந்தால் இவர்கள் மனம் திடமானதாகவும், சூழ்ச்சியிலிருந்து தப்பிக்கும் திறமையானதாகவும் மாறிவிடுகிறது. இவர்களைச் சுற்றி ஏமாற்றுக்காரர்களும், நல்ல மனிதர்களும், படித்தவர்களும், தொழில் அதிபர்களும், வியாபாரிகளும் சூழ்ந்திருப்பர். இவர்களுக்கும் பெயர் நன்றாக அமைந்து விட்டால் நாளுக்கு நாள் முன்னேற்றம், ஆரோக்கியம், நல்ல செல்வம், நல்ல குழந்தைகளைப் பெற்று செல்வச் சீமானாக வாழ்வர்.

ஆனால் பெயர் பொருத்தமற்று இருக்குமேயானால் இவர்கள் திறமையெல்லாம் வீணாகிப் பல பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு அலைந்து திரிவர். இவர்கள் மனம் தொழிற்சாலை, வினோதமான எலக்ட்ரானிக் பொருள், மலைப்பாங்கான இடங்கள், பலவகை மிருகங்கள் ஆகியவற்றைக் கண்டு அமைதி கொள்ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் டாக்டராகவும், இஞ்சினியராகவும், வக்கீலாகவும், தொழில் அதிபர்களாகவும், வியாபாரிகளாகவும், முக்கியமான அரசாங்க ஊழியர்களாகவும், ஆசிரியர்களாகவும் வாழ்கின்றனர்.

ஆனால் பெயர் ஒழுங்காக அமையப் பெறாதவர்கள் ஆண்களாக இருந்தால் பெண்களாலும், பெண்களாக இருந்தால் ஆண்களாலும், குழப்ப நிலைக்கு ஆளாகின்றனர். இன்னும் சிலர் பொருளாதாரத் துறையிலோ உடல் நலக் குறைவாலோ வேதனை அடைகின்றனர். இதனால் பெயரை நல்ல எண்ணில் மாற்றி அமைத்துக் கொண்டு சிறப்படையக் கேட்டுக் கொள்கிறேன்.

**தொழில்:** காண்ட்ராக்ட், கமிஷன், ஏஜென்சீஸ், கட்டிடத் தொழில், பொருளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புதல், வாகனம், விவசாயம் சம்பந்தமான தொழில் மெட்டல் சம்பந்தமான தொழில் போன்றவற்றால் உயர்வடைவர்.


**நோய்:** இவர்களுக்குத் தோல் சம்பந்தமான வியாதி, வயிற்றுக் கோளாறு, மூட்டுவலி, பித்த சம்பந்மான வியாதி, சளிப் பிடித்தல், இரத்த அழுத்தம், இருதய வலி, வாயுக் கோளாறு போன்றவைகள் வந்து நீங்கலாம்.

**பெயர் அமைக்கும் முறை:** இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு செவ்வாய், புதன் போன்ற ஆதிக்கமான 27, 36, 45; 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை : -**

யோகமான எண் - 9, 5
யோகமான திகதிகள் - 9, 18, 27; 5, 14, 23; 6, 15, 24
யோகமான மோதிரக்கல் - பவளம், வைரம், நவரத்தினம்
யோகமான நிறம் - வெளிர் நீலம், சிவப்பு, சாம்பல் நிறம்
ஆகாத திகதி - 2, 11, 20, 29; 7, 16, 25
ஆகாத நிறம் - பச்சை






> மாதவன் சக்தியினைச் – செய்ய
> மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
> போதுமிவ் வறமையெலாம் – எந்தப்
> போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே.
>
> – சுப்பிரமணிய பாரதியார்

# மரண தண்டனை!

**முன்னொரு** காலத்தில் நிடதபுரி என்ற நாட்டை நிரஞ்சன் என்ற அரசன் ஆண்டு வந்தான். நல்லவனான அவன், தன் அமைச்சனுடன் புத்த மதத்தைத் தழுவினான். இதை அறிந்த அந்நாட்டு மக்கள் பலரும் அந்த மதத்தில் சேர்ந்தனர்.

சிலர் அந்த மதத்தில் சேரவில்லை. அது மட்டும் அல்ல, புதிய மதத்தை வெறுத்த அவர்கள் அதைப் பற்றி குறை சொல்லத் தொடங்கினர். அவர்களில் அமைச்சனின் மகனும் இருந்தான். தன் ஒரே மகன் புத்த சமயத்தில் சேரவில்லை என்று வருந்தினான் அமைச்சன். அவனுக்கு எவ்வளவோ அறிவுரைகள் சொல்லிப் பார்த்தான் ஏதும் பயன் இல்லை.

"தந்தையே! நீங்கள் ஒரு மதத்தைப் பின்பற்றுகிறீர்கள். நான் வேறு மதத்தைப் பின்பற்றுகிறேன். நாம் சேர்ந்து வாழ இயலாது. நான் உங்களைப் பிரிந்து செல்லப் போகிறேன்" என்று உறுதியுடன் சொன்னான் அவன்.



இதைக் கேட்ட அமைச்சன் நேராக அரசனிடம் சென்றான். நடந்ததை எல்லாம் சொன்ன அவன், என் ஒரே மகன் என்னை விட்டு போகிறான். என் கதி என்ன ஆகும்? நீங்களே சொல்லுங்கள், என்று சொல்லி வருந்தினான்.

அதற்கு அரசன், உன் மகனை என் பொறுப்பில் விட்டுவிடு. அவனுக்கு ஒளி கிடைக்க ஏற்பாடு செய்கிறேன், என்றான். தன் வீரர்களைப் பார்த்து, நீங்கள் உடனே சென்று இந்த அமைச்சனின் மகனைக் கைது செய்யுங்கள். அவனைத் தூக்கில் போட அரசர் ஆணை இட்டதாகச் சொல்லி அவனை இங்கே இழுத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான் அவன்.

தனக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு இருக்கிறது என்பதைக் கேள்விப்பட்ட அமைச்சனின் மகன் அதிர்ச்சி அடைந்தான். அரசனின் கால்களில் விழுந்த அவன் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

அரசர் சொன்ன ஒளி என்பதன் அர்த்தம் தன் மகனின் உயிரை எடுப்பதா? என்று கலங்கினான் அமைச்சன்.

அமைச்சனே! உன் மகனை வீட்டிற்கு அழைத்துச் செல். ஒரு மாத தவணை தருகிறேன். அதற்குள் அவன் திருந்த வேண்டும். இல்லாவிட்டால் தூக்கு தான் என்று கடுகடுத்த குரலில் சொன்னன் அரசன்.

**சுட்டி மயூரன் சிறுகதை**


தந்தையும், மகனும் சோகத்துடன் வீடு வந்து சேர்ந்தனர்.

நீதி நெறி தவறாதவர் ஆயிற்றே அரசர், என்ன தவறு செய்தேன்? ஏன் எனக்கு தூக்குத் தண்டனை விதித்தார் என்று கலங்கினான் அவன். இதே கவலையால் அவன் நன்கு சாப்பிடவில்லை; தூங்கவில்லை. ஒரு மாதம் சென்றது. அரசனிடம் வந்தான் அவன்.

அரசே! நான் என்ன தவறு செய்தேன்? எதற்காகத் தூக்குத் தண்டனை விதித்தீர்கள். சாகப் போகிறோம் என்ற அச்சத்தில் இந்த ஒரு மாதம் நான் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தேன். சாப்பிடவில்லை; தூங்கவில்லை, என்று அழுதான் அவன்.

சாவைப் பற்றிய அச்சத்தை நீ இப்பொழுது தெரிந்து கொண்டிருப்பாய். அந்த அச்சத்தால் நீ சிந்தனை செய்வதையே இழந்து இருப்பாய். அதனால்தான் அச்சத்தை நம்மிடமிருந்து நீக்குகின்ற புத்தமதத்தில் பலர் சேர்ந்தனர். உன் தந்தையும் சேர்ந்தார். சாவைப் பற்றிய அச்சம் எவ்வளவு கொடியது என்று உனக்குத் தெரிந்திருக்கும். உன் தந்தையாரை எதற்காக குறை சொன்னாய்? என்று கேட்டான் அரசன். அரசனின் சொற்கள் அவனுடைய உள்ளத்தில் தைத்தன. உண்மையை உணர்ந்த அவன் புத்த மதத்தில் சேர்ந்தான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.03.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 687**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 685

**பரிசுக்குரியவர்:**
M.R.M. றசீல்,
இல.40, 5ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| லோ.கிஸான்<br>60/12, பாரதி லேன், மட்டக்களப்பு. | J.மயூரன் 4B<br>தூய தோமாவின் கல்லூரி, பண்டாரவளை. |
| M.H.F.ஷபியா<br>280/16, தர்ஹா டவுன் பிரதான வீதி | திலுக்சியா சரவணபவன்<br>255/9D, லேன் 02(12)T<br>மன்னார் வீதி, புத்தளம். |
| K.பிராசந்தி<br>89, பாபாபதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம் கொட்டகலை. | டி.ஆர்.ஹெவின்ஸ்ரன்<br>மே/பா டேவிட் ரவிக்குமார்<br>82, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13 |
| K.ஹரினி<br>19, பன்சல வீதி, இராகலை, ஆள்கரனோயா | எஸ்.விக்னேஸ்வரி<br>22, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13 |

# ஆத்திசூடி

## தையல் சொல் கேளேல்

**நீ பெண்கள் பேதமையோடு கூறும் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடக்க முற்படாதே.**

–ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# கல்வியின் பெருமை



என்னருமை பிள்ளைகளே
இனிய நல்ல முல்லைகளே!
கண்ணருமை கரும்புகளே
கல்விப் பெருமை அறிந்திடுவீர்1

பிள்ளைகள் பலராய் இருந்தாலும்
கற்றவர் தன்னையே மதித்திடுவர்!
எள்ளி உலகம் நகைத்திடுமே
கல்வி கல்லா ஒருவனையே!

கற்ற கல்வி வேகாது
மற்றவர்க் களித்தால் குறையாது!
மற்றவை யாவும் மாய்ந்திடுமே
மதிப்புற கல்வி நிலைத்திடுமே!

ஒருமையில் கற்ற அருங்கல்வி
எழுமையும் நிலையாய் நிலைத்திடுமே!
பெருமைக்குரிய பேருவகை
பெற்ற கல்வி தந்திடுமே!

# உலக அதிசயம்


## குளிர் காற்று

**குளிர்** காலத்தின்போது காற்று மிகுந்த குளிராக இருப்பதை நாம் உணர்கிறோம். குளிர் பிரதேசத்திலிருந்து குளிர்ந்த காற்றாக வரும் குளிர்காற்று, வெப்பமான கடல் மீது வீசுகிறது. இதனால் கடல் வெப்பக் காற்றும் குளிர்ந்து பூமியின் நிலப்பரப்பை நோக்கி தள்ளப்படுகிறது. இதனால் தான் அதிக அளவிலான குளிர் காற்று குளிர் காலங்களில் வீசுகிறது.



## காற்றாடி


**பட்டம்** காற்றில் பறக்க காரணமே காற்றுதான். காற்று பட்டத்தின் மீது படும்போது அதை பறக்கச் செய்கின்றது. அதிக வேகத்தோடு காற்று தொடர்ந்து வீசும்போதுதான் பட்டம் தளர்வின்றி பறக்கிறது. மாறாக காற்றில் தொய்வு ஏற்பட்டால் பட்டம் பறக்காமல் கீழேதான் விழும். ஆகவே காற்றின் அழுத்தத்தில்தான் பட்டம் சீராக காற்றில் பறக்கிறது.



**வானிலையில்** அதிகம் பாதிக்கப்படும் நாடு எது தெரியுமா? ஏதாவது ஒரு ஆசிய நாடாக இருக்கும் என்பீர்கள். அது தான் இல்லை. அமெரிக்காதான். பருவநிலை மிக மோசமடையும் காலங்களில் வருடத்திற்கு 5 ஆயிரம் தடவை வெள்ளப் பெருக்கும், 10 ஆயிரம் தடவை இடி மின்னலும் அமெரிக்காவைத் தாக்குகின்றன. தவிர 1,200க்கும் மேற்பட்ட புயல்கள் உருவாகி சேதப்படுத்துகின்றன.



**உலகில்** எத்தனையோ மலைகள் இருக்கின்றன. எனினும் இமயமலை போன்று வேகமாக வளரும் மலை வேறெதுவும் கிடையாது. இது, ஒரு ஆண்டுக்கு 1 அடி உயரம் வரை வளர்கிறது. இந்த வளர்ச்சிக்குக் காரணம், யூரேசிய கண்டத் திட்டும், இந்தோ - அவுஸ்திரேலிய கண்டத்திட்டும் ஒன்றையொன்று மோதிக்கொள்வதன் காரணமாக ஏற்படும் அழுத்தத்தால் இமயமலை வேகமாக வளர்கிறது.



**1960களில்** பிரபல டென்னிஸ் வீரராகத் திகழ்ந்த மைக்கேல் சாங்ஸ்டர் என்னும் வீரர் போட்ட ஒரு சர்வீஸின் வேகம் எவ்வளவு தெரியுமா? மணிக்கு 154 மைல்கள். இது 245 கி.மீ.க்கு சமமாகும்.



**கலிலியோ** இறப்பதற்கு முன்பாக அவரது கண் பார்வை முற்றிலுமாக பறி போய் விட்டது. இதற்குக் காரணம் அவர் சூரியனை டெலஸ்கோப் மூலம் தன் ஆயுட்காலமெல் லாம் பார்த்துக் கொண்டே இருந்தது தான். (அவர் பயன்படுத்திய டெலஸ்கோப் தற்போது உள்ளன போன்று நவீனமானவை அல்ல.)



**1467ஆம்** ஆண்டு இங்கிலாந்தில் கோல்ப் விளையாட்டிற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. காரணம், வில்வித்தை விளையாட்டின் கவனத்தை திசை திருப்பும் வகையில் கோல்ப் இருப்பதாக புகார் வந்ததைத் தொடர்ந்து அது தடை செய்யப்பட்டது.



# சில விடுகதைகள்

1. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?
2. அனலில் பிறப்பான் ஆகாயத்தில் மறைவான் அவன் யார்?
3. அந்தரத்தில் தொங்குவது அரக்கனின் தலை அது என்ன?
4. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் சிறு தூசி கிளம்பாது அவர்கள் யார்?
5. மரத்தைச் சுமந்தபடி காட்டுக்குள் ஓடுகிறான் அவன் யார்?
6. இருட்டுக் காட்டிலே குருட்டுப் பன்றி மேயுது அது என்ன?
7. இறக்கை உண்டு ஆனாலும் பறக்க முடியாதவன் அவன் யார்?
8. உயிர் இல்லை ஊரைச் சுமப்பான் பேச்சு இல்லை பெருமூச்சு விடுவான் அவன் யார்?
9. உறங்காமல் ஓலமிடுபவன் ஊருக்குள் வந்தால் அபாயம் அவன் யார்?
10. கிணற்றைச் சுற்றி பளிங்குக் கற்கள் அது என்ன?


**விடைகள்**

1. வளையல்
2. புகை
3. திருஷ்டி பொம்மை
4. எறும்புக்கூட்டம்
5. மான்
6. தலைமுடி - பேன்கள்
7. மின்விசிறி
8. ரெயில்
9. கடல் அலை
10. வாய் - பற்கள்.




**பிரிட்டனிலுள்ள** லிவர்பூல் பல்கலைக் கழகம் உயிரியல் மருத்துவ அல்ற்றா நுண்ணியல் ஆராய்ச் சித்துறையில் சாதனை படைத்துள்ளது. புதிய எலக்ரோன் நுண் ணியல் பிரிவு ஆரம் பிக்கப்பட்டமையே இதற்குக் காரண மாகும். அலை கடத்தி எலக்ரோன் நுண் தொலைகாட்டிக் கருவியொன்று இதற்கெனப் பொருத்தப்பட்டிருந்தது. மனித உடற் கலத்தின் பத்து இலட்சத்திற்கு ஒரு மில்லி மீற்றர் அளவிலான நுண்ணிய அளவைக் கூட கண்டு பிடிக்கக் கூடிய அளவிற்கு சக்தி வாய்ந்தது இந்தக் கருவி. ஒரு கலத்தில் புரோட்டீன்கள் எங்கே உள்ளன என்பதை இக் கருவிகள் கண்டு பிடித்து விடும். நுண்ணியல் தங்கத்துகளிலிருந்து பல தசைகள் வரை இதனைக் கொண்டு ஆராய முடியும். புற்று நோய் ஆராய்ச்சிக்கும் நுண்ணிய வைரசுகளைக் கண்டு பிடிப்பதற்கும் இக் கருவியைப் பயன்படுத்த முடியும்.





**இராட்சத** ஆமைகள் இருக்கின்றனவே, அவையின் சராசரி ஆயுள் காலம் 150 வருடங்கள். அழியக்கூடிய ஆபத்தை எதிர் நோக்கியிருக்கும் இந்த இராட்சத ஆமைகளைப் பாதுகாப்பதற்கு பகீரத முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆண் ஆமை நான்கு அடி நீளமாகவும், 500இல் இருந்து 600 இறாத்தல்கள் வரை எடை கொண்டதாகவும் இருக்கும். பெண் ஆமைகள் 300 அல்லது 350 இறாத்தல்கள் எடை கொண்டவையாக இருக்கும். இந்த ஆமைகள் பெரும் சோம்பேறிகள். மணிக்கணக்காக வெய்யில் காய்வதே இவற்றின் வேலை. தமது சூழலில் ஏதாவது புதிய பொருட்கள் தென்பட்டால் அவை பற்றி ஆராய முற்பட்டு விடும். உணவோ நீரோ இல்லாமல் 18 மாதங்கள் வரை பட்டினி கிடக்கக் கூடிய் தன்மை இவற்றிற்கு உண்டு. பெண் ஆமைகளிலிருந்து வெளி வரும் வாசனையைக் காற்றில் முகர்ந்து பார்க்கும் ஆண் ஆமைகள், அவற்றைத் தேடிப்பிடித்து விரட்டிச் சென்று தாம்பத்திய உறவில் ஈடுபடும். பெரும்பாலும் பெண் ஆமைகளை மிரட்டியே உறவில் ஈடுபடுகின்றன. 2இல் இருந்து 17 வரையிலான முட்டைகளைப் பெண் ஆமைகள் இடுகின்றன. 5 மணித்தியாலங்களுக்கு நிலத்தைத் தோண்டியே முட்டைகள் இடப்படுகின்றன. பெண் ஆமைகள் முட்டைகளை இட்ட பின்னர் 6 அங்குல தடிப்பு வரை சேற்றினால் மூடி விடுகின்றன. சூரியனின் வெப்பத்தினால் முட்டைகள் பழுதடைந்து போகாமல் தடுப்பதற்காகவே இவ்வாறு செய்கின்றன. இம் முட்டைகள் பொரித்து ஆமைக் குட்டிகள் வெளி வருவதற்கு 3இல் இருந்து எட்டு மாதங்கள் வரை செல்லும். ஈரலிப்பான காலநிலையைப் பொறுத்தே முட்டைகள் பொரிப்பதற்கான காலங்கள் செல்கின்றன.

**அமிலியா டெய்லர்** என்ற பெண் குழந்தை பிறந்தபோது அதன் எடை 10 அவுன்ஸ்கள் மட்டும் தான். தாய் கருத்தரித்து 21 வாரங்கள் 6 நாட்களில் இக் குழந்தை பிறந்தது. 23 வாரங்களுக்குக் குறைவான கால எல்லையில் பிறந்த எந்தக் குழந்தையுமே இதுகாலவரை உயிர் வாழ்ந்ததில்லை. அமிலியா பிறந்த போதே அழுதாள், சுவாசித்தாள். மிகக் குறைந்த மாதத்தில் பிறந்து உயிர் வாழ்ந்த குழந்தையென இக் குழந்தை பற்றிய தகவல் உலக சாதனை புத்தகமான கின்னஸின் 2006 ஆண்டுக்கான பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி இந்தக் குழந்தை பிறந்தது.




**தனது** உயரத்தை விட இரட்டிப்பு மடங்கிற்கு அதிகமான நீளத்திற்கு மீசையை வளர்ந்து சாதனை படைத்திருக்கிறார் இந்தியர் ஒருவர். 22 வருடங்களாக மீசையை மளிக்காத இந்த மனிதர், இந்தியாவின் அஹமதாபாத் பகுதியைச் சேர்நதவர். படாம் சிங் யுவான் சிங் குர்ஜார் என்ற பெயர் கொண்ட மனிதர் வளர்த்து வரும் மீசையின் இப்போதைய நீளம் பற்றி சரிவரத் தெரியவில்லை. 2004ஆம் ஆண்டில் இவரது மீசையின் நீளம் 12 1/2 அடி. உலகிலேயே மிக நீளமான மீசையைக் கொண்டவர் என்ற சாதனையைப் புரிந்தவர் இவர்தான். அது சரி இந்த மனிதனின் மீசையால் மனைவிக்குப் பிரச்சினை இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை.




**மிக் – 27** யுத்த விமானங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இலங்கையின் யுத்த தேவைக்கு விமானப்படையினரால் இந்த விமானங்கள் அவ்வப்போது பயன்படுத்தப்படுவதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. முன்னாள் சோவியத் யூனியனில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த விமானங்கள் முதன்முதலாக 1980 களின் மத்திய பகுதியில் பயன்படுத்தப்பட்டது. இறக்கைகளைப் பல பாகைகளில் மாற்றக் கூடிய வசதிகளும் இந்த விமானத்தில் இருக்கின்றன. 16 அல்லது 45 அல்லது 72 பாகைகளில் இந்த இறக்கைகளை மாற்றிக் கொள்ள முடியும். பறந்து கொண்டிருக்கும் பொழுதோ அல்லது தரையிலிருக்கும் பொழுதோ இந்த இறக்கைகள் நிலை கொண்டிருக்கக் கூடிய பாகைகளை மாற்ற முடியும். இந்த விமானத்தின் இறக்கைகள் பூரணமாக விரிக்கப்பட்டால் விரைவாகத் தரையிறங்கவும், தரையிலிருந்து விரைவாக புறப்படவும் முடியும். யுத்தத்தில் பல்முனையில் பங்களிக்கக்கூடிய இந்த விமானம் 55 அடி நீளமும் 14.8 அடி உயரமும் கொண்டது. இறக்கைகளின் பரப்பு 293 சதுர அடிகளாகும். 36 ஆயிரம் அடி உயரத்தில் மணித்தியாலத்திற்கு 1,054 மைல் வேகத்தில் பறக்கக் கூடியவை. இந்த விமானம் பறக்கக் கூடிய அதிக பட்ச உயரம் 49,860 அடிகளாகும்.



ஹரிக்குமார் - பிரியங்கா
திருத்தம்

## தனுஷ் படத்தில் பிரசன்னா

'மஞ்சள் வெயில்' படத்தில் ஹீரோவாக நடிக்கும் பிரசன்னா. தனுஷ் நடிக்கும் புதிய படமொன்றில் அவருடன் இணைந்து நடிக்கிறார்.

செல்வராகவன் இயக்கும் தெலுங்குப் படம் "ஆடவாரி மாட்டலாக்கு அர்த்தமே வேறுலே." படத்தின் பெயரைப் போல படத்தில் நடிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாம். அதில் முக்கியமான கேரக்டர்கள் மூன்று. வெங்கடேஷ், த்ரிஷா, ஸ்ரீகாந்த் ஆகியோர் அந்த மூன்று வேடங்களில் நடிக்கிறார்கள்.

இந்த பெயர் நீள படம் தமிழில் ரீ-மேக்கா கிறது. செல்வராகவன் கதை, திரைக்கதையில் தமிழ் படத்தை இயக்குகிறார் ஜவஹர். இவர் செல்வ ராகவனின் உதவியாளர்.

தமிழ் ரீ-மேக்கில் வெங்கடேஷ் நடிக்கும் கதாபாத்திரத்தில் தனுஷ் நடிக்கிறார். த்ரிஷா வேடத்துக்கு பூமிகா, ஸ்ரேயா என பலரை முயற்சி செய்து. இறுதியில் நயன்தாராவை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

ஸ்ரீகாந்த் நடிக்கவிருக்கும் வேடத்தில் பிரசன்னாவை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

கஸ்தூரிராஜாவின் சொந்தப் பட நிறுவனமான ஆர்.கே.புரொடெக்ஷன்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது.

விரைவில் பூஜையுடன் படப்பிடிப்புத் தொடங்க இருக்கிறது.




பிரித்திவிராஜ் - ஜோதிகா
மொழி

---

மல்லிகா ஷெராவத்தின் அலட்சியத்தால் தசாவதாரம் படத் தயாரிப்பாளருக்கு இரண்டு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

---

ரஜினியின் சிவாஜி, தசாவதாரம்...இந்த இரண்டு படங்களில் ரிலீஸ் திகதி எது என தெரியாமல் தடுமாறுகிறது விக்ரமின் பீமா!

---

# சி னி வி சி ட்

## கார்த்தியை கட்டிப்பிடித்து வாழ்த்திய கமல்!

பாராட்டுக்களைச் சிக்கனமாகச் செலவழிப்பவர் கமல். அவரையே அதிகப்படியாக செலவழிக்க வைத்திருக்கிறது பருத்தி வீரன்.

வி.ஐ.பி.களுக்கு தொடர்ந்து பருத்திவீரன் ஸ்பெஷலாகத் திரையிட்டு வருகிறார்கள். இந்த வரிசையில் முதலாவதாக வருகிறவர் முதல்வர் கருணாநிதி. படம் பார்த்து விட்டு மூணுநாள் தூக்கமில்லாமல் பண்ணிட்டிங்களே என கிளைமாக்ஸை குறிப்பிட்டுப் பாராட்டினார்.

அடுத்த பெரிய பாராட்டு கிடைத்தது ரஜினியிடமிருந்து. இவ்வளவு நாள் எங்கே போயிருந்தீங்க என அமீரை பாராட்டியவர், இது மட்டுமல்ல காவியம் என்று கூறி நெகிழ வைத்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கமலுக்கு பருத்தி வீரன் பிரத்தியேகமாகத் திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த கமல் கார்த்தியை கட்டிப்பிடித்து தனது பாராட்டைத் தெரிவித்தார். அத்துடன் அமீர், சரவணன், ப்ரியாமணி ஆகியோருக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்தார் கமல்.



மாதவன் - பாவனா
ஆர்யா

---

அஜித்தை வைத்து அடுத்தடுத்து 5 படங்கள்; மொத்தமாய் முப்பது கோடி ரூபாய் என ஹோலிவுட்டில் கால் பதிக்கிறது ரிலையன்ஸ் நிறுவனம்.

---

விஜய்யின் அழகிய தமிழ்மகன் படத்தைத் தொடர்ந்து அஜித் நடிக்கும் புதிய படமொன்றில் நமிதா நடிப்பதாக ஒரு நம்பத்தகுந்த தகவல் உலவுகிறது.

---

**முகப்பில் -பிரசன்னா - பாவனா**

## மீண்டும் மாதவன் - பாவனா ஜோடி!

நீண்ட நாள் கிடப்பில் இருந்த 'ஆரியா' ஒரு வழியாக திரைக்கு வருகிறது. சமீபத்தில் நடந்த படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவை மிளகாய் கடித்த எபெக்டில் காரசாரமாக்கினர் கே.ஆர்.ஜி.யும், எஸ்.ஏ.சந்திரசேகரனும்.

ஆரியாவில் அடாவடி பெண்ணாக அடித்து தூள் கிளப்பியிருக்கிறாராம் பாவனா. மாதவனும் அப்படியே! இந்த இருவரின் காம்பினேஷன் படம் பார்த்த விநியோகஸ்தர்களுக்கு ரொம்பவே பிடித்து விட்டது.

இந்த ஜோடி மேலுமொரு படத்தில் ஒன்றிணைய இருப்பதால் மகிழ்ச்சியில் உள்ளனர் விநியோகஸ்தர்கள்.

'தம்பி' படத்துக்குப் பிறகு சீமான் இயக்கத்தில் இரண்டு படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டிருந்தார் மாதவன். ஒரு படத்துக்கு மகிழ்ச்சி என்றும் இன்னொரு படத்துக்கு பகலவன் என்றும் பெயர் வைத்தார் சீமான்.

மகிழ்ச்சி என்ற பெயர் ஏற்கனவே சேம்பரில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் இந்த தலைப்பை வாழ்த்துக்கள் என்று மாற்றினார் சீமான். உகந்ததாக இல்லை.

களங்கம் இல்லாத குழந்தை முகம் வேண்டும் என்பது சீமானின் விருப்பமாம்.

## 'கொன்றுவிடுவேன்' நக்மாவை மிரட்டிய மர்ம மனிதன்

எவனோ விடுத்த கொலை மிரட்டல்களால் நக்மாவின் நிலைவரம் இப்போது கலவரமாகியுள்ளது. காதலன், மேட்டுக்குடி, பாட்ஷா உள்ளிட்ட தமிழ் படங்களில் நடித்த நக்மா சில வருடங்களாக மும்பையிலேயே நிரந்தரமாக வசித்து வருகிறார். மும்பை தாதா தாவூத் இப்ராகிமுடன் நக்மாவுக்கு தொடர்பு இருப்பதாகப் புகார் எழுந்து பரபரப்புக்கு உள்ளாகிய நிலையில், இன்னொரு பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளார் நக்மா.

இரண்டு நாட்களாக நக்மாவின் செல்போனுக்கு பெயர் குறிப்பிடாத எஸ்.எம்.எஸ்கள் வந்து கொண்டிருந்ததாம். நக்மா பற்றிய நல விசாரிப்புகளோ வர்ணிப்புகளோ இருந்தால் பரவாயில்லை. அனுப்பிய அத்தனை எஸ்.எம்.எஸ்.களிலும் ஆபாச வார்த்தைகள் வண்டிவண்டியாய் குவிக்கப்பட்டிருந்ததாம்.

இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருந்த நக்மாவுக்கு கடைசியாக வந்த எஸ்.எம்.எஸ்:தான் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதில், உன் முகத்தில் அசிட்டை ஊற்றி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாம்.

பயத்தில் நடுநடுங்கிப்போன நக்மா,பாந்த்ரா காவல் நிலையம் சென்று பொலிஸில் புகார் அளித்தார். எஸ்.எம்.எஸ்.யை பார்த்து மிரண்ட பொலிஸாரும் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர். விசாரணையில் அதன் பின்னணியில் தீவிரவாதிகள் இல்லை என்பது மட்டும் உறுதியான நிலையில் கொலை மிரட்டல் விடுத்த மர்மமனிதனைப் பிடிக்க பொலிஸார் மும்பை முழுவதும் சல்லடை போட்டுள்ளனராம்.



சுந்தர். சி - கோபிகா
வீராப்பு



சுந்தர். சி - கோபிகா
வீராப்பு

---

## வெற்றி யாருக்கும் சொந்தமல்ல : த்ரிஷா தத்துவம்

முனிவர்களை தடுமாறவைக்கும் அழகு பெண்கள் கூட சமயத்தில் முனிவர்களைப் போல தத்துவம் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். வெற்றி தோல்வி குறித்து த்ரிஷா கக்கிய தத்துவம் என்ன தெரியுமா...

சினிமாவை பொறுத்தவரை திறமை, அதிர்ஷ்டம் இரண்டுமே வேண்டும். மாட்டுவண்டியில் பூட்டிய இரட்டைமாடுகள் போலதான் இதுவும். நல்ல கதையுடன் படத்தில் கஷ்டப்பட்டு நடித்திருப்போம், ஆனால் படம் சரியாக ஓடாது. அப்போது ராசியில்லாத நடிகை என்று முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்படும் நிலை ஏற்படும்.

அதுவே ஒரு வெற்றிபெற்ற படத்தில் நடித்துவிட்டால் நம்மிடம் பேசுவதை பெருமையாக நினைப்பார்கள். எத்தனை ஹிட் படங்களை கொடுத்தாலும் ஒரு தோல்விப்படம் வந்துவிட்டால் மார்க்கெட் சரிந்து மதிப்புகள் கப்பலேறும். இதுதான் சினிமா.

அம்மணி சொல்லும் அத்தனையும் சத்யமுங்கோ.



## 'சிவாஜி'யில் ஏ.ஆர்.ரகுமான் பாடிய டூயட் பாட்டு

தமிழிலிருந்து இந்திக்குப் போய் தற்போது இந்தியிலிருந்து சர்வதேச ரேஞ்சுக்கு போய்க் கொண்டிருக்கும் ஏ.ஆர்.ரகுமான் சிவாஜியில் ரஜினிக்காக தனது கொள்கையை தளர்த்தி டூயட் பாட்டு ஒன்றை பாடியிருக்கிறார்.

அது என்ன கொள்கை இந்த பேட்டியில் தெரிவிக்கிறார்.

"என்னுடைய ஆரம்ப கட்டங்களில் பகலில் பிறருக்காக வேலை செய்து விட்டு இரவில் என்னுடைய சொந்த வேலையான விளம்பர ஜிங்கிங்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுவேன். அதுவே என் படைப்பு நேரம். இதையே நான் தொடர்ந்து செய்து வந்ததால், இரவு நேரங்களில் இசை படைப்புகளை உருவாக்கும் பணியில் ஈடுபடுவது தற்போது வரையும் தொடர்கிறது."

'வந்தே மாதரம்' ஆல்பம் வெளிவந்த பிறகு இனி ஆன்மீக மற்றும் நாட்டுப்பற்று பாடல்களைத் தவிர வேறு எந்த பாடல்களையும் பாடுவதில்லை என்று முடிவெடுத்திருந்தேன். ஆனால் குரு, சிவாஜி படங்களுக்காக அந்த கொள்கையை கொஞ்சம் தளர்த்தியிருக்கிறேன். குருவில் 'டேராபினா' பாடலும் சிவாஜியில் ரஜினிக்காக டூயட் பாடலும் பாடியிருக்கிறேன்.

ஏ.ஆர்.ரெஹானாவும், ஜி.வி.பிரகாஷும் இசை சம்பந்தமாக ஆலோசனைகளை என்னிடம் கேட்பதில்லை. ஒருவேளை அவர்கள் என்னை அணுகுவதற்கு தயங்கலாம். தயக்கத்தை விட்டு அவர்கள் வந்து தாராளமாக ஆலோசனை கேட்கலாம். இருவரும் சிறப்பாகவே இசையமைத்து வருகிறார்கள் என்றார் ஏ.ஆர். ரஹ்மான்.




## இனி நடிப்புத்தான்

'பருத்தி வீரன்' படத்தில் பிரியாமணி தந்தையாக கழுவத்தேவன் கேரக்டரில் நடித்து பேசப்பட்டவர் பொன்வண்ணன் கருத்தம்மாவுக்கு பிறகு டெலிவிஷன் தொடர்களில் கலக்கி வந்த இவர் பருத்திவீரன் மூலம் சினிமாவில் மறுபிரவேசம் எடுத்துள்ளார்.

ஒட்டிவெட்டிய தலைமுடி கடாமீசையுடன் பாத்திரமாகவே வாழ்ந்தார். நிறைய தலைமுடி தாடி வளர்த்திருந்ததை பார்த்த இயக்குநர் அமீர் பருத்திவீரனில் வாய்ப்பு கொடுத்தாராம். இயக்குநர் கனவோடு வந்து நடிகனாகிவிட்டேன்.

இனி தொடர்ந்து நடிப்பேன் என்றார். நிறைய வாய்ப்புகள் வருகிறதாம். நடிப்பில் நிறைய சாதிக்க ஆசை இருக்கிறது என்றார் பொன்வண்ணன்.

## வீடு இல்லாத அமீர்

ராம், பருத்தி வீரன் வெற்றிப்படங்களை கொடுத்த இயக்குநர் அமீருக்கு சொந்தவீடு இல்லை. குடும்பத்தினருடன் வாடகை வீட்டில் வசிக்கிறார்.

படம் ரிலீஸின்போது ஏற்பட்ட குளறுபடிகள் அவரை இன்னும் கஷ்டத்தில் வைத்துள்ளது. பருத்திவீரனுக்கு பிறகு பெரிய கம்பெனிகள் படம் பண்ணித்தர மொய்க்கின்றன. இனிமேல் சொந்த வீட்டுக்கு யோகம் வரும் என்ற நம்பிக்கையில் உள்ளார்.

## விஜய் சொந்தப் படம்

அழகிய தமிழ்மகன் படத்துக்குப் பிறகு விஜய் சொந்தப் படம் தயாரிக்கிறார். அப்படத்தில் அவரே கதாநாயகனாக நடிக்கிறார். இயக்குபவர்கள் பட்டியலில் தரணி, லிங்குசாமி பெயர்கள் அடிபடுகின்றன.

## சேரன் மரியாதை

சேரன் நடித்து இயக்கும் 'மாயக்கண்ணாடி' படகேசட் வெளியீட்டு விழாவுக்கு திரையுலகின் பிதாமகர்கள் அழைக்கப்பட்டு இருந்தனர். பாலச்சந்தர், பாரதிராஜா, பார்த்திபன், இளையராஜா, கே. எஸ். ரவிக்குமார், பாலு மகேந்திரா என ஒவ்வொருவருக்கும் பொன்னாடை போர்த்திய சேரன் அவர்கள் காலை தொட்டு வணங்கி மெய்சிலிர்க்க வைத்தார்.




சேரன் - நவ்யாநாயர்
மாயக்கண்ணாடி

## இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு லிம்கா சாதனையாளர் விருது!

2007ஆம் ஆண்டுக்கான லிம்கா சாதனை புத்தகத்தின் 18ஆவது பதிப்பு வெளியீட்டு விழா, டெல்லியில் நடைபெற்றது. பல்வேறு துறைகளில் இந்த ஆண்டில் சாதனை படைத்தவர்களுக்கான விருது, இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், டென்னிஸ் வீரர் மகேஷ்பூபதி, ஜார்ஜ் ஆபிரகாம், எம்.சி. மேரிகோம், டாக்டர் தேவி பிரசாத் ஷெட்டி ஆகிய 5 பேருக்கு கிடைத்துள்ளது.

ஜார்ஜ் ஆபிரகாம், பார்வையற்றவர் நலனுக்காக பாடுபட்டவர். மேரிகோம், குத்துச்சண்டை போட்டியில் சர்வதேச அளவில் 3 பட்டங்களை வென்ற முதல் வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் தேவி பிரசாத் ஷெட்டி, பிரபல இதய நோய் சிகிச்சை நிபுணர் ஆவார். கொக்கோ கோலா இந்திய நிறுவனத் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அதுல்சிங் அவர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அதுல்சிங், லிம்கா சாதனை புத்தகம் ஆண்டு தோறும் 50 ஆயிரம் பிரதிகள் வெளியாகி வருகின்றன. தற்போது ஆங்கிலத்தில் மட்டும் வெளியாகும் இந்த புத்தகம், அடுத்த ஆண்டு முதல் இந்தியிலும் வெளியிடப்படும். விரைவில் மற்ற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படும் என்று தெரிவித்தார்.

---

தமிழ் பீல்டை தற்காலிகமாக ஒதுக்கி வைத்திருந்த நயன் நடிகை சென்னைக்கு திடீர் விசிட் செய்து ஒல்லி பிச்சான் நடிகருடன் படுகிளாமராக போட்டோ செஷனுக்கு போஸ் கொடுத்து மீண்டும் ஹைதராபாத் சென்றுள்ளார். ஏன் கிளாமர்? விரல் வித்தையை கடுப்பேற்றத்தான்!

---

சிம்புவும், திமிரு இயக்குநர் தருண்கோபியும் இணையும் படத்தில் நடிக்க, அசினை வற்புறுத்தினார் சிம்பு. ஆனால் நாசுக்காக ஒதுங்கிக் கொண்டார் அசின். இதையடுத்து நயன்தாராவையே நடிக்க வைக்க மீண்டும் முயல்கிறார் சிம்பு. செல்லுபடியாகுமா பார்ப்போம்!



## விநியோகஸ்தராக மாறிய ஆர்யா!

**ஆட்டோ** இதுவரை டிரைவர்களை தான் உருவாக்கியிருக்கிறது. முதன் முறையாக விநியோகஸ்தர் ஒருவரை உருவாக்கியுள்ளது ஒரு கோடம்பாக்க ஆட்டோ.

புஷ்கர் - காயத்ரி தம்பதியினர் இயக்கிருக்கும் படம் ஆட்டோ. ஆட்டோ என்பது ஆங்கிலம் என்பதால் படத்தின் பெயரை ஓரம்போ என்று மாற்றியுள்ளனர். (இந்த புதுப்பெயரை ஆர்யா கேட்டுக்கொண்டதற்கு இணங்க தேர்வு செய்து கொடுத்தவர் கலாபக் காதலன் இயக்குநர் இகோர்.)

முழுக்க ஆட்டோவை பின்னணியாகக் கொண்ட இந்த கதையில் ஆர்யாவுடன் பூஜா நடித்திருக்கிறார். பூஜாவுக்கு இதில் ரோட்டோரம் பிரியாணி விற்கும் கேரக்டர். ஆர்யா அடிதடியான ஆட்டோ டிரைவர்.

கொஞ்சம் வித்தியாசமான கதை என்பதால் விநியோகஸ்தர்களுக்கு பயம். சில ஏரியாக்கள் விலை போகவில்லை. ஆர்யாவுக்கு சம்பள பாக்கி!

இதனால் சென்னை, செங்கல்பட்டு ஏரியாக்களின் விநியோக உரிமையை ஆர்யாவுக்கு கொடுத்துள்ளனர். மேலும் சில ஏரியாக்களை இவர் வாங்கியிருப்பதாக கேள்வி.

படத்தின் முக்கியமான காட்சியொன்று, ஆட்டோக்களின் ரேஸ். இதில் ஆர்யா வெற்றி பெறுவதாக அமைத்துள்ளனர்.

விநியோகஸ்தராகவும் ஆர்யா வெற்றி பெற வாழ்த்துக்கள்!

## சிம்புவின் புதிய படம் 'காள'

அடுத்து இயக்குவதாக இருந்த 'அகராதி' படத்தை தற்காலிகமாக தலைமுழுகிவிட்டு புதிய ப்ராஜக்டை கையிலெடுத்துள்ளார் திமிரு இயக்குனரான தருண்கோபி.

நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி தயாரிப்பில் தருண்கோபி இயக்கும் புதிய படம் ஏறக்குறைய முடிவாகிவிட்டது. படத்துக்கு 'காள' என்று பெயரிட்டுள்ளார்கள். காள என்றதும் ஏதோ ஜந்து என்று குழம்ப வேண்டாம். காளையின் கலோக்கியல் பெயரே காள.

இப்படத்தில் படத்தின் பெயருக்கு பொருத்தமாக சிம்புவை கதாநாயகனாக்கியுள்ளனர். ஒளிப்பதிவாளர் சரவணன் இயக்கும் 'சிலம்பாட்டம்' படமும் காளயும் ஏறக்குறைய ஒரே நேரத்தில் தொடங்கப்படலாம் என்பது கோடம்பாக்க டாக்.


காளயில் சிம்பு ஜோடியாக நடிக்க த்ரிஷாவிடம் கால்ஷீட் கேட்டுள்ளனர். த்ரிஷா - சிம்புவின் நெருங்கிய தோழி. ஏற்கனவே அலையில் இருவரும் இணைந்து நடித்துள்ளனர். படம் கலெக்ஷனில் அலையடிக்கவில்லை என்றாலும் த்ரிஷா - சிம்பு காம்பினேஷன் அனலடித்தது.

சிம்புவின் தோழி என்பதால் கண்டிப்பாக கால்ஷீட் கிடைக்கும் என காத்திருக்கிறார்கள்.

காள பெயர் குழப்பம் வரக்கூடாது என்பதற்காக பெயருக்கருகில் காளை ஒன்றின் படம் இடம்பெறும் வகையில் டைட்டிலை டிசைன் செய்திருக்கிறார்கள். இதற்கு பேசாமல் காளை என்றே பெயர் வைத்திருக்கலாம்.

---

வருடங்கள் கூட கூட வயசு குறைந்துகொண்டே போகிறது இரண்டு பேருக்கு. வடக்கே ஐஸ்வர்யாராய், தெற்கே சரத்குமார்! ஒரு விழாவில் கவிஞர் பா.விஜய் இப்படி பேச புளகாங்கிதம் அடைந்தார் சரத்.





# தேன் கிண்ணம்

## வலையில் வெண் புறாக்கள்!

சர்வதேசப் பார்வையில்
சாட்டாங்கம் பண்ணப்பட்ட
சமாதான உடன்பாட்டு
சாசன அறிக்கையோ...கிடப்பில்!

கா்வங் கொண்டு
கதாயுதத்தில் உருவேற்றி
களத்தில் ஆடுகின்ற
கண்ணியவான்களின்
கயமைத் தனமோ நடப்பில்!

யுத்த பூமியிலே,
உடன்பாட்டு
அத்துமீறலை அவ்வப்போது
அவதானித்து;
அறிக்கை விடும் கண்காணிப்பாளர்களோ...

தீர்வு எதுவும் கூற முடியாத
திக்கு மூக்காட்டத்தில்,
இலங்கைத் தீவெங்கும் அங்குமிங்கும்
திருகி எறியப்பட்ட
தலை முண்டங்களை பொறுக்கிக்
கணிப்பதிலும் கணக்கெடுப்பதிலுமே
காலத்தைக் கடத்துகின்றனர்!

சமாதானத்தை
சதா உச்சாடனம் பண்ணும்
சர்வதேச வெண்புறாக்களோ...
வேட்டுவன் விரித்த
வலையில்
வீணாகத் தலையை மாட்டிக் கொண்ட
விதியை நொந்து...
"ஆர் குத்தியும்
அரிசி ஆனாற் சரி" என்ற
அலுப்பான மனநிலையில்!

-அனலக்தர்,
ஏறாவூர் - 03.

## தாவணிக் கனவுகள்...

நரம்புகள்
தேனுண்டு
இருதயங்கள்
இரகசியங்கள்
கசியும்
டெப்லட் கனவுகளோடு...!

ஆகாரம் மறுக்கும்
அந்திப் பொழுதில் - நீ
விழிகளுக்குள்
விஷம் பூசி
என்
மரணத்திற்கு
அடிக்கல் நாட்டுகிறாய்...!

வெள்ளி நிலவு
வேர்த்துக் கொட்டி
நட்சத்திரங்கள் சில
நனைந்து போய்
அவள் பார்வையால்
சுட்டெரித்து விட்டுப்போன
இரக்கமில்லாத
இரவுகளில்...!

காத்திருப்பு தொடரும்...
மா்மம் நிறைந்த
மாலை வேளையில்
புன்னகை நகத்தால்
வராண்டி விடு...!

நீ
அழகான முள்
இனிப்பான விஷம்
கசப்பான நிலவு...!

மொழி உடையும்
முகூர்த்தத்தில்
உன்னை வரையும்
குருட்டு ஓவியனின்
இத்துப் போன
இதயத்துடன்...!

-நஸீம்ருமி.

## சமாதானம் மலர வேண்டும்

சமாதானம் மலர வேண்டும்
சகலருக்கும் இதுவே வேண்டும்
நாமிதனை உணர வேண்டும்
நாளுமிதை வளர்க்க வேண்டும்.

விட்டில்களாய் வீழ்ந்தது போதும்
விடிவின்றி நாம் வாழ்ந்தது போதும்
பட்டபாடு எல்லாம் போதும்
படுபயங்கரப் போரும் போதும்

அகங்களிலே அன்பு வேண்டும்
அடிமனதில் அமைதி வேண்டும்
முகங்களிலே மலர்ச்சி வேண்டும்
முழுச்சமாதானம் மலர வேண்டும்.

ஆக்கினைகள் தீர வேண்டும்
அடியுதைகள் நிற்க வேண்டும்
ஐக்கியமே ஓங்க வேண்டும்
அதுவே இங்கு வேண்டும்.

பேதமும் வாதமும் போதும்
பிரச்சினை எல்லாம் போதும்
நீதியும் நியாயமும் வேண்டும்
நேர்மைத் திறனே வேண்டும்.

போகும் வழிக்குப் புண்ணியம் வேண்டும்
போர் உடனே நிற்க வேண்டும்
சாகும் வரை சாந்தி வேண்டும்
சமாதானம் மலர வேண்டும்.

- கன்னிமுத்து வெல்லபதியான்

## யோக்கியமாய் வாழ யாப்பமைப்போம்

வேற்றுமையை
வேரறுத்து
ஒற்றுமையை
உருவாக்குவோம்.

கசப்புகளை
உடைத்தெறிந்து
கனிந்தொன்றாய்
உருவாகுவோம்.

வன்முறைகளை
வராது தடுத்து
வசந்தம் வர
வழிசமைப்போம்.

கண்ணீருக்குக்
கட்டுப் போட்டு
கனிவான வாழ்வுக்குக்
களம் அமைப்போம்.

இனத்துவத்தை
இல்லாதொழித்து
இணக்கத்துவத்தை
இனி (தா)(யா)க்குவோம்.

யுத்தம் தனை
யுகம் நீக்கி
யோக்கியமாய் வாழ
யாப்பமைப்போம்.

நிர்க்கதி நிலையை
நீக்கித் தள்ளி
நிம்மதிக்காகத்
தவம் கிடப்போம்.

குழி தோண்டுதலை
விட்டுத் தள்ளி
விழிகளாலே
வாழ ஒளிதேடுவோம்.

நடப்பு வேதனைகளை
நாடுகடத்தி விட்டு
நாலினமும் வாழும்
நன்னிலையை உருவாக்குவோம்.

- சரஸ்வதி புத்திரன்.

## இறைவா என் நெஞ்சம் உன் தஞ்சம்

எளிமையை உடையாய் அவள் கொண்டாள்
எழிலே உருவாய் அவள் நின்றாள்
மொழியை தேனாய் அவள் சொரிந்தாள்
விழிகளில் மலரை ஏந்தி நின்றாள்.

கூந்தலில் என்றும் நெய் தடவாள்
குளிர்ந்த பார்வையில் மனம் தொடுவாள் - வான்
நீந்தும் நிலாவாய் வலம் வருவாள்
நெஞ்சம் நிறைந்த சுகம் தருவாள்.

நெற்றியில் கருமைப் பொட்டுவைப்பாள் - என்
நெஞ்சினை மெல்ல தொட்டு நிற்பாள் - தமிழர்
பற்றிக் கொண்ட பண்பாட்டில்
பாவை அவளோ பழகி நின்றாள்.

கவிதையில் கதைசொல்லக் கருவானாள் - என்
கண்களில் ஆடும் உருவானாள்
குவிகின்ற இதழ்சிந்தும் குறுநகையில் - நெஞ்சக்
கூட்டினில் வாழும் குயிலானாள்.

சிலநாள் அவளுடன் பழகி வந்தேன் - என்
சிந்தையில் தனியொரு இடம் கொடுத்தேன்
நலமுடன் வளமாய் அவள் வாழ
நாளும் இறைவனை வேண்டி நிற்பேன்.

- சுமங்கலி பிறிற்ரோ,
யாழ்ப்பாணம்.

## மலையகமே! இந் நாட்டின் முகவரி நீதான்...

கொழுந்து பறிக்க
கூடை மட்டுமா சுமந்தாய்
குழந்தையை
மனத்துயரத்தை

வேலை செய்து கைதான்
காய்ச்சிப் போகும்
உன்னுடம்பல்லவா
காய்ந்து விட்டது.
பூக்களே
மாலையில் கோர்க்க
யாருமில்லையா?
வெய்யில்
மென்னுடம்பை வறுக்கிறதா?
யானைப் பசிக்கு
எள்ளுத்துண்டு சம்பளமா?

உன்னோடு கை கோர்க்கிறேன்
வருகின்ற தேர்தலில்
சூடு கண்ட பூனையாவோம்
தீக் குச்சியிருந்தால்தான்
விளக்கெரியும்
குருதியின்றி
இதயம் துடிக்கிறதே

உயிருக்கு
உணவா??...சுவாசமா??...
சம்பளத்தில்
ஒன்றை கூட பூர்த்தி
செய்ய முடியவில்லை

சூரியன்தான்
கடிகாரம்

வறுமைக் கொடுமைதான்
புழுக்களை
சூரியத் தோட்டத்தில்
நெருப்புக் கொழுந்தை
இறப்பைக்குள்
விளையாடழைக்கிறது

முதலாளிமார்களோ!
முதலை போல்
முதலை விட பன்மடங்கு
முழுங்கியும் கண்மூடி

மெழுகாவோம்
ஓடாய்த் தேய்வோம்
நாளை செழித்திட

ஆனால்
ஏழை என்றாலும்
கோழையல்ல

விழித்தின்றே
விடுதலை பெறுவோம்
வீதியிலிறங்கி.

-ஆயிஸா றிஸ்வின்,
மூதூர் -01.

## உதிர்வு

**பிரபல** அமெரிக்க மொடல் அழகியான எனா நிகொல் ஸ்மித் திடீரென மர்மமான முறையில் இறந்துவிட்டார். இச் சம்பவம் அண்மைக்கால ஊடக உலகில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

இவர் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்து விட்டார்.

39 வயதுடைய எனா, ப்ளேபோய் சஞ்சிகையின் மூலம் பிரபலமானவர். 1994இல் இவர் 89 வயதைக் கொண்டிருந்த எண்ணெய் வியாபாரியான ஹொவாட் மாஷல் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். சிறிது காலத்தில் கணவர் இறந்ததன் பின்னர் அவரது சொத்துக்களுக்காக வழக்காடி இறுதியில் இவருக்கு 474 மில்லியன் டொலர்களுக்கான உரிமை கிடைத்தது.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பதாக இவரது புதல்வன் தனது 20ஆவது வயதில் போதைவஸ்துகளுக்கு அடிமையான நிலையில் இறந்துள்ளார்.

எனா இறக்கும் போது 5 மாதப்பெண் குழந்தை ஒன்றும் இருந்துள்ளது.



## இரட்டை வேடம்



**பிரபல** பொலிவுட் நடிகை, பிரியங்கா சொப்ரா இரு மாறுபட்ட பாத்திரங்களை ஏற்று ஒரு திரைப்படத்தில் நடிக்கிறார்.

தமிழ்த்திரைப் படங்களில் முகம் காட்டியுள்ள இவர், பொலிவுட்டின் கனவுக் கன்னி என வர்ணிக்கப்பட்டு வருகிறார்.

'லவ் ஸ்டோரி 2050' எனும் திரைப்படத்தில்தான் இவருக்கு இரட்டை வேடம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் இது தனக்குப் புதியதொரு அனுபவம் என்கிறார் பிரியங்கா. அதாவது தனக்குப் பழக்கப்படாத பாத்திரங்களாம்.

## காதல்



**ஸ்பெயின்** நாட்டுத் திரைப்பட நடிகர் அந்தோனியோ பென்டராஸை 'சோரோ' என்ற பெயரில் நம்மில் பலர் அறிவார்கள்.

இவரால் இயக்கப்பெற்ற திரைப்படமொன்று தற்போது பர்லின் திரைப்பட விழாவில் கலந்து கொள்கிறது.

El Camino de los Ingleses எனும் பெயரைக் கொண்ட இத்திரைப்படம் Summer Rain என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

70களில் இளம் பருவத்தினரிடையே நிகழ்ந்த ஒரு காதல் கதையை இத்திரைப்படம் தனது கருவாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கவனம்

**பிரபல** பாடகியான சாலட்சர்ச் மிக நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டவர். அதேபோல் கண்டபடி செலவு செய்வதிலும் பெயர் பெற்றவர்.

தனது விடுமுறை காலங்களில் கோடிக்கணக்கில் பண விரயம் செய்து மகிழ்வது இவரது பொழுது போக்காம்.

நடிப்புலகிலும் இப்போது இவர் வலம் வருவதால் பணத்திற்கு குறைவில்லை.

பிரபல ரகர் வீரர் கெவின் ஹென்சன் சாலட்டின் காதலர். தனது காதலருக்கு சாலட் ஒரு நிபந்தனையை அண்மையில் விதித்துள்ளார்.

அதாவது, பெண்கள் மத்தியில் செல்லும் போது மௌனமாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்த நிபந்தனை!

ஏதோ பணத்தை வீண் விரயம் செய்பவர்




தனது காதலரை வீண் விரயம் செய்ய விரும்பவில்லை போலும்!




# அலர்ஜியால் ஜலதோஷம்?

**மனிதனுக்கு** ஏற்படும் நோய்களில் அலர்ஜி நோயும் மருத்துவ உலகில் புரியாத புதிராகவே உள்ளது. இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும்கூட இந்த நோய் யாரைத் தாக்கும், நோய் வராமல் பாதுகாப்பது எப்படி? போன்றவற்றைச் சரியாக கணிக்க முடிவதில்லை.

உடலுக்குள் மாற்றுப் பொருள் புகுந்து விட்டால், அதை அழிக்க அல்லது செயலிழக்க நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி அமைப்புகள் செயல்படும். ஆனால் அதன் செயல்பாடு சரியான அளவில் இருந்தால் பிரச்சினை இல்லை. சில




நேரங்களில் செயல்பாடு அளவு அதிகமாகிவிடுகிறது. அது அலர்ஜியாக மாறி விடுகிறது.

இதனால் உடலில் பலவிதமான பாதிப்புகள் ஏற்படும். மூக்கில் எப்போதும் தண்ணீர் வரும், தொடர்ந்து தும்மல் வரும், கண்களில் எரிச்சல் ஏற்படும். தோல்களில் தடிப்பு, அரிப்பு ஏற்படும். சிலருக்கு வேறு விதமான பாதிப்புகளையும் கூட ஏற்படுத்தும். ஆஸ்துமா நோய் பாதிப்பும் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

படுக்கை அறை சுத்தம் இல்லாமல் இருப்பது, படுக்கை விரிப்பு, தலையணை சுத்தம் இல்லாமல் இருப்பது, போன்றவை அலர்ஜி நோய்க்கு முக்கிய காரணமாக அமைகிறது.

தெருக்களில் ஏற்படும் தூசியும் அலர்ஜியை ஏற்படுத்தும்.



இது மட்டும் அல்லாமல் சீசன்கால அலர்ஜிகளும் உண்டு. மரம், செடிகள் பூக்கும் போது, அறுவடை காலத்தின்போது, இலையுதிர் காலத்தின் போது அவற்றில் இருந்து வெளிப்படும் பொருட்களில் இருந்து அலர்ஜி ஏற்படும். இவை காற்றில் கலந்து சுவாசம் மூலம் உடலுக்குள் புகுந்து அலர்ஜியாக மாறுகிறது.

குளிர் நாடுகளில் பனிகாலத்தில் இதேபோல சீசன் அலர்ஜிகள் உருவாகின்றன. மிருகங்களின் முடிகள், தோல்களில் இருந்து உதிரும் கண்ணுக்குத் தெரியாத செல்கள் மூலமும் அலர்ஜி ஏற்படுவது உண்டு.

பைபர், சில வகை இரசாயனப் பொருட்கள், உலோக கழிவுகள் போன்றவற்றில் இருந்தும் அலர்ஜி ஏற்படுகிறது.

ஆனால் இந்த பொருட்கள் எல்லோருக்கும் அலர்ஜியை ஏற்படுத்துகிறது என்று சொல்ல முடியாது. சிலர் உடல் இவற்றை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை பெற்று விடும். அவர்களை அலர்ஜி தாக்காது.

சிலருக்குப் பரம்பரையாகவே அலர்ஜி தாக்குவது உண்டு. இது எப்படி ஏற்படுகிறது என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அலர்ஜியைத் தவிர்க்க சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று டாக்டர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

வீட்டில் கார்பெட், கம்பளி போன்றவற்றைப் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். இவற்றில் அதிக அளவில் தூசிகள் அடையும். அப்படியே பயன்படுத்தினால் வாரம் ஒரு தடவை துவைக்க வேண்டும்.

அலர்ஜியை ஏற்படுத்தும் கண்ணுக்குத் தெரியாத காளான்கள் கார்பெட், கம்பளிகளில் உருவாவது உண்டு. எனவே சுடு தண்ணீரில் துவைப்பது நல்லது. இவற்றை ஈரம் ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வேக்கம் கிளீனர் கருவியைக் கொண்டு சுத்தம் செய்வது நல்லது. இதன் மூலம் நுண்ணிய தூசிகளும் ஈர்த்துக்கொள்ளப்படும்.

துணிகள் போர்த்தப்பட்ட நாற்காலிகளுக்குப் பதிலாக மரம், உலோக நாற்காலிகளைப் பயன்படுத்தலாம்.

தற்போது அலர்ஜியைக் கண்டுபிடிக்கும் கருவி வந்துள்ளது. இதை பயன்படுத்தி அலர்ஜியைக் குணப்படுத்தலாம்.


## கூந்தலுக்கு

**கூந்தலுக்கு** இறுக்கமாக 'க்ளிப்' போடாதீர்கள். சுத்தமான சீப்பால் நெற்றியில் படாதவாறு வாரிக் கொள்ளுங்கள். குளிர்ந்த தண்ணீரால் மட்டுமே முகம் கழுவுங்கள்.



# சுற்றுலாப் பயணமா?

**மலை** மீது பயணிக்கும் பொழுது வாந்தி வரும் அன்பர்கள், வயிற்றைக் காலியாக வைத்துக் கொள்ளவும். அந்த நேரத்தில்



காப்பி, டீ, தண்ணீர் அருந்துவதைத் தவிர்த்து விடலாம்.

ஓர் ஊரில் சென்று ஹோட்டலோ அல்லது காட்டேஜோ பதிவுசெய்யும் பொழுது நீங்கள் அங்கு தங்கப் போகும் அத்தனை நாட்களுக்கும் உண்டானப் பணத்தை முதலிலேயே செலுத்தி விடா தீர்கள்.

முதல் நாளுக்குரிய அட்வான்ஸ் தொகையை மட்டும் கட்டுங்கள். அந்த ஊர் கொஞ்சம் பிடிபட்டவுடன் வேறு நல்ல இடம் அமைந்தாலோ, அல்லது தங்கியிருக்கும் இடத்தின் வசதிகள் பிடிக்கவில்லையென்றாலோ உடனடியாக மாற்றிக் கொள்ளலாம்.

ஆட்டோ, தனி ஊர்தி எது அமைத்தாலும் பார்கெய்ன் பண்ணுங்கள். அல்லது முதலிலேயே அக்கம் பக்கத்தில் விசாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ட்ரெக்கிங் செல்பவரானால் கால்களில் ஸ்போர்ட்ஸ் ஷு அணிவது உசிதம், பெண்களானால் சுடிதார் சௌகரியமாக இருக்கும்.

அருவி, தண்ணீர் இருக்கும் இடங்களுக்குப் பிரயாணம் என்றால் ஆண்கள், குழந்தைகள் காலில் ஷு, சாக்ஸ் அணிவதைத் தவிர்க்கலாம்.

கூடுமானவரை கையில் லக்கேஜுடன் அலைவதைத் தவிர்க்கவும். பிஸ்கட்ஸ், ஸ்நாக்ஸ் எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தங்குமிடத்தின் தொலைபேசி எண்ணை ஊரில் இருக்கும் உறவினர்களுக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

ஏ.டி.எம்.எல்லாச் சுற்றுலாத் தலங்களிலும் இருப்பதால் கையில் மொத்தப் பணத்தையும் எடுத்துக் கொண்டு அலையாதீர்கள்.




நீங்கள் சென்ற இடங்கள், தங்குமிடம், தொலைபேசி எண், பயணச் சீட்டு விவரம், முடிந்தால் பயணிக்கும் வண்டி எண் இவற்றை உங்களது டயரியில் குறித்து வைக்கவும்.

நாம் எந்த ஊருக்கு உல்லாசப் பயணம் போகிறோம் என்பதை விட நாம் எப்படி போன இடத்தில் நடந்து கொள்கிறோம், எப்படி மகிழ்ச்சியைத் தக்கவைத்துக் கொள்கிறோம், ஏமாற்றம், பிரச்சினை ஏற்பட்டால் எப்படி சமயோசிதமாகக் கையாளுகின்றோம் என்பதுதான் முக்கியம்.

# முகம் வழுவழுப்பாக இருக்க!

**நெற்றியிலும்,** கன்னங்களிலும் பொரிப் பொரியாக உள்ளதா? முதலில், இது ஏன் ஏற்படுகிறது?

தலை வாரும்போது நெற்றியில் சீப்பு



படுதல், தலையைத் துவட்டும்போது ஏற்படும் அழுத்தம். பொடுகு, முகத்தில் அதிக முடி இருப்பது.. இந்தக் காரணங்களால் நெற்றியில் முள் போன்று பொரிப்பொரியாகத் தோன்றும். இதற்கு நிரந்தரமான தீர்வு உண்டு.

ரோஜா இதழ்களைச் சந்தனமனையில் வைத்து இழையுங்கள். அதே அளவு சந்தனம் சேர்த்துக் குழையுங்கள். பொரி இருக்கும் இடங்களில் இதைப் போட்டு, பத்து நிமிடம் கழித்துக் கழுவுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இதைச் செய்துவந்தால் பொரிகள் மறையத் தொடங்கும்.


இதோடு கீழே உள்ள சிகிச்சையையும் தொடர்ந்து செய்யுங்கள்.

கசகசா - 2 தேக்கரண்டி
கருந்துளசி இலை - 10

இவ்விரண்டையும் சேர்த்து மையாக அரைத்துக் கொள்ளுங்கள். கொதிநீரில் வெட்டிவேரை போட்டு வையுங்கள்.

மெல்லிய ஆர்கன்டி துணியை ஜில் தண்ணீரில் நனைத்து, பிழிந்து நெற்றியில் வைத்து, அதன்மேல் இந்த விழுதை பத்து போல் போடுங்கள். 15 நிமிடம் கழித்து வெட்டிவேர் தண்ணீரால் கழுவுங்கள். இப்படி வாரம் ஒருமுறை செய்யுங்கள்.

இதில் சேர்க்கப்பட்டுள்ள கசகசா, பொரிகளை அடியோடு போக்குவதுடன், முகத்தையும் வழுவழுப்பாக்கும். துளசி, தோலின் முரட்டுத் தன்மையை நீக்கி மிருதுவாக்கும்.



இந்த சிகிச்சைகளை ஒரு மாதம் தொடர்ந்து செய்து வந்தாலே துருத்தி நிற்கும் பொரிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். இந்த சிகிச்சையின் போது முகத்துக்கு க்ரீம் போடுவதைத் தவிர்ப்பது நல்லது.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது –ஷோபா–*

## மாம்பழ வடை

**தேவையான பொருட்கள் :-**

- மாம்பழத் துண்டுகள் - 3,4 கப்
- பயத்தம்பருப்பு - 1 கப்
- திராட்சை - 100 கிராம்
- வெல்லம் - 1 கப்
- உளுந்து - 1 கப்
- எண்ணெய் - பொரிப்பதற்கு

**செய்முறை :-**

பழத்தை தண்ணீர் விடாமல் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும்.

கூடவே திராட்சையையும் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும். உளுந்தை 15 நிமிடம் ஊறவைத்து, சிட்டிகை உப்பு போட்டு கெட்டியாக வாணலியில் பயத்தம் பருப்பை போட்டு சிவக்க வறுத்து, ஆறினதும் மிக்ஸியில் தண்ணீர் விடாமல் மாவாக அரைத்துக் கொள்ளவும். வாணலியில் பழக்கலவையை போட்டு கைவிடாமல் கிளறவும். கொதித்து வரும்போது வெல்லத்தைப் போடவும். வெல்லமும் பழமும் சேர்ந்து கெட்டியானதும் அடுப்பை அணைத்து பயத்தம் மாவை சேர்த்து கிளறவும். நன்கு ஆறினதும் கெட்டியான உருண்டைகளாக்கவும். அடுப்பில் எண்ணெய் வைத்து மெலிதாக எரியவிடவும். ஒரு பழ உருண்டை உள்ளேயும் மாவு வெளியேயும் இருக்கும். இதை சின்ன வாழை இலையில் எண்ணெய் தடவி, அதில் போட்டு வடை போல லேசாகத் தட்டவும். தட்டின வடைகளை வாணலியில் போட்டு வெந்ததும் எடுத்து தட்டில் வைத்து பரிமாறவும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

65

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே-அ- அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -65**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**

27.03.2007

**பரிசுப் போட்டி இல - 63**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**சீ. தங்கவடிவேல், 91, பயினியர் வீதி, மட்டக்களப்பு.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**சொற** சொறப்பு இல்லாமல் வழவழவென்று என் கை இருப்பதைப் பார்த்து அவளுக்குப் பிரமிப்பு ஏற்பட்டது.

தூளியில் ஒரு மணி நேரம் படுத்திருந்த பின் எழுந்து கொண்டு தலைவனின் பெரிய குடிசைக்குச் சென்றோம். தங்கள் துப்பாக்கிகளைப் பார்க்கும்படி கொடுத்தார்கள். ஆறு பெட்டி தோட்டாக்கள் வைத்திருந்தார்கள்.

அந்தச் சிவப்பிந்தியப் பெண் நடுத்தர உயரம் கொண்டவள். தலைவனைப் போலவே பழுப்பு நிறக் கண்கள், கச்சிதமான உருவம். இடுப்பு வரை நீண்ட கூந்தல். நடுவில் வகிடு எடுத்துப் பின்னல் போட்டிருந்தாள். அவளுக்கு முத்தமிடத் தெரியவில்லை. உதடுகளால் கடித்தாள். நாகரிக நாடுகளில் அதை எப்படிச் செய்கிறார்களென்று அவளுக்கு வெகு விரைவில் கற்பித்தேன். நாங்கள் நடந்து போகும் போது அவள் எனக்குப் பக்கமாக நடக்க மாட்டாள். முடியவே முடியாதென்று சொல்லி என் பின்னேதான் வருவாள்.

குடிசை ஒன்றில் யாருமே இல்லை. கொஞ்சம்தான் பழுதடைந்திருந்தது. மற்றப் பெண்களின் உதவியுடன் தென்னம் ஓலைக் கூரையைச் சரி செய்தாள். பிசுக் பிசுக்கென்றிருந்த செம்மண்ணைக் கொண்டு சுவர்களின் ஓட்டைகள் மீது அப்பினாள்.

அங்கு ஆண்களிடம் எல்லா வகையான வெட்டுக் கருவிகளும், ஆயுதங்களும் இருந்தன. கத்திகள், குத்துவாள், அரிவாள், சுத்தி, களைக்கோடு இரும்புமுனை கொண்ட முள் கரண்டிகள் எல்லாம் இருந்தன. செப்பு, அலுமினிய வால் டபராக்கள், பூவாளிகள், இரும்புப் பானைகள், இயந்திரக் கல், அடுப்பு, இரும்பிலும் மரத்திலும் செய்த பீப்பாக்கள் முதலியனவும் அவர்களிடம் இருந்தன. சுத்தமான கம்பளியில் செய்த பிரம்மாண்டமான தூளிகள். அவற்றில் நுனிகளில் கண்ணைப் பறிக்கும் பிரகாசமான சிவப்பிலும், கறுப்பிலும், மஞ்சளிலும் பின்னப்பட்ட குஞ்சங்கள்.

விரைவில் வீடு தயாராகிவிட்டது. மற்றச் சிவப்பிந்தியர்கள் கொடுத்த பொருள்களை ஒவ்வொன்றாய்க் கொண்டு வரலானாள் அந்தப் பெண். நெருப்பின் மீது வைக்கக்கூடிய குமுட்டி, நாலு பெரியவர்கள் ஒருக்களித்துப் படுத்துக் கொள்ளக்கூடிய பெரிய தூளி, கண்ணாடிகள், தகர டப்பாக்கள் - இப்படிப் பல. ஏன், கழுதைக்குப் பூட்டக்கூடிய சேணம்கூட இருந்தது.



அங்கு வந்து பதினைந்து நாட்களாகி விட்டன. நாங்கள் ஒருவரையொருவர் கொஞ்சிக் கொண்டுதான் இருந்தோம். எனினும், அவள் தன்னை முழுவதுமாக எனக்குக் கொடுக்கவில்லை. பிடிவாதமாக மறுத்தாள் அதற்கு.

என் உணர்ச்சிகளைத் தூண்டி விடுகிறவள் அவள்தான். ஆனால் கடைசி நிமிடத்தில் ஏன் புறக்கணிக்கிறாள்? அதுதான் எனக்குப் புரியவில்லை. முன்புறத்தில் மானத்தை மறைப்பதற்கு ஒரே ஒரு சிறு துண்டுதான் அவள அணிந்திருப்பாள். இடுப்பைச் சுற்றி ஒரு மெல்லிய கயிறு, அவ்வளவுதான். மற்றபடி உடம்பில் ஒரு நூல்கூடக் கிடையாது.

சடங்கு எதுவுமில்லாமல் நாங்கள் குடித்தனம் போட்டோம். மூன்று வாசல்கள், வட்டத்தின் நடுவே ஒரு வாசல், எதிரும் புதிருமாக இரண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி நோக்கம் உண்டு. வடக்குப் பக்கத்து வாசல் வழியாக நான் போய் வரவேண்டும். தெற்குப் பக்கத்து வாசல் வழியேதான் அவள் போய் வருவாள். நான் அவள் வாசல் வழியாகவோ, அவள் என் வாசல் வழியாகவோ போகக் கூடாது. பிரதான வாசல் வழியாக நண்பர்கள் வருவார்கள். போவார்கள். நானோ - அவளோ அந்த வாசலை உபயோகிக்கக்கூடாது. கூட யாராவது நண்பர்கள் இருந்தாலொழிய.

அந்த வீட்டில் நாங்கள் குடித்தனம் வைத்த பிறகுதான் அவள் எனக்குத் தன்னை முழுவதுமாகத் தந்தாள். அந்த விவரங்களை நான் சொல்லத் தயாராயில்லை. ஆனால் உஷ்ணப் பிரதேசத்துக் கொடிபோல் என்னைச் சுற்றிக் கொண்டு, வேட்கையும் தாபமும் நிறைந்தவளாக என்னிடம் காதல் புரிவாள். நாங்கள் தனியே இருக்கும் போது - தன்னந்தனியே இருக்கும்போது - நான் அவளுக்குத் தலை சீவிப் பின்னல்

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

போடுவேன். நான் அதைச் செய்யும்போது அவள் மிகச் சந்தோஷப்படுவாள். அவள் முகத்தில் ஆனந்தம் ஜொலிக்கும். அதே சமயம் யாராவது எங்களைப் பார்த்து விடுவார்களோ என்ற அச்சமும் தெரியும். ஏனென்றால், அவர்கள் சமூகத்தில் எந்தக் கணவனும் மனைவியின் கூந்தலை வாரிவிடக்கூடாது. கைகளைத் தடவிக் கொடுக்கக் கூடாது. குறிப்பிட்ட விதங்களில் அவள் வாயிலோ, மார்பிலோ முத்தமிடக் கூடாது.

ஆக, நானும் லாலியும் குடும்பம் நடத்தினோம். (லாலி என்பது அவள் பெயர்) ஒரு விஷயம் எனக்கு ரொம்ப ஆச்சரியம் தந்தது. அவள் இரும்பு அல்லது அலுமினிய வால் அடுக்குகளையோ, வாணலிகளையோ உபயோகிப்பதே கிடையாது. கண்ணாடி டம்ளரில் குடிப்பதும் கிடையாது. அவர்களே தயாரித்த மண் கலயங்களைத்தான் எப்போதும் பயன்படுத்துவாள். ரோஜாச் செடியின் அருகே கால் கழுவப் பூவாளியை உபயோகிப்போம். கடல்தான் லெட்ரீன்.

சிப்பிகளை எடுத்து வந்து உடைத்து முத்து எடுக்கும் சமயத்தில் நான் அங்கே இருந்தேன். பெண்களில் மிகவும் வயதானவர்கள் அந்த வேலையைச் செய்தார்கள். இளம் பெண்கள் முத்துக் குளியலுக்குச் செல்வார்கள். ஒவ்வொருத்தியும் சொந்தமாக ஒரு பை வைத்திருப்பாள்.

தாங்கள் திரட்டிய முத்துக்களை அவர்கள் இவ்வாறு பங்கு போடுவார்கள். அந்த இனத்தாரின் பிரதிநிதி என்ற முறையில் தலைவனுக்கு ஒரு பங்கு. மீனவனுக்கு ஒரு பங்கு, சிப்பியைப் பிரிப்பவனுக்கு அரைப் பங்கு. முத்துக் குளித்த பெண்ணுக்கு ஒன்றரை. அந்தப் பெண் தன் பெற்றோருடன் வசிக்கிறவள் என்றால், தன் அப்பா அல்லது பெரியப்பாவிடம் தனக்குக் கிடைக்கிற முத்துக்களைக் கொடுத்து விட வேண்டும். தந்தையின் சகோதரனுக்கு ஏன் இந்த உரிமை என்று எனக்குப் புரியவில்லை. இதேபோல், ஒரு பெண் திருமணம் செய்துகொள்ள இருக்கும்போது, அவர்கள் வசிக்கப் போகும் வீட்டுக்குள் அந்த பெரியப்பாதான் முதலில் நுழைவார். பெண்ணின் கையை எடுத்து மணமகனின் இடையைச் சுற்றினாற்போல் வைப்பார். மணமகனின் கை மணமகளின் இடையைச் சுற்றி, அவள் தொப்புளை அவன் ஆள் காட்டி விரல் தொடுகிற மாதிரி வைப்பார். இதைச் செய்த பின் போய்விடுவார். இதுவும் ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

முத்துச் சிப்பிகளைப் பிரிக்கும்போது நான் அங்கே இருந்தேன். ஆனால் என்னைப் படகில் வருமாறு யாரும் நேரடியாக என்னிடம் கேட்காததால் நான் அவர்களுடன் செல்லவில்லை. கடற்கரையிலிருந்து வெகு தூரத்தில் அவர்கள் மீன் பிடிப்பது வழக்கம். - சுமார் 500 கெஜ தூரம் இருக்கும். சில நாட்களில் லாலி வீடு திரும்பும் போது, பவழப் பாறைகளால் தொடைகளிலும், விலாவிலும் நிறையச் சிராய்ப்புக்களுடன் காணப்படுவாள். சில சமயங்களில் காயங்களில் இரத்தம் வரும். அங்கு கடல் பூண்டுகளை அரைத்து பூசிக் கொள்வாள்.

சைகைகள் மூலம் அவர்கள் என்னை அழைத்தாலொழிய நான் எதுவும் செய்யமாட்டேன். தலைவனின் குடிசைக்குள் நான் ஒருபோதும் நுழைவதில்லை - அவனோ அல்லது வேறு யாரோ என்னைக் கையைப் பிடித்து அங்கே அழைத்துச் சென்றாலொழிய. லாலி சொன்னாள்: நாங்கள் தனியே இருக்கும்போது என்ன பேசிக் கொள்கிறோம், என்ன செய்கிறோம் என்பதைப் பார்ப்பதற்காக மூன்று பெண்கள் எங்கள் அறைக் கதவுக்கு வெளியே புற் தரையில் படுத்துக் கொள்கிறார்களாம்!

எங்கள் கிராமத்துக்கும், எங்கள் காவல் நிலையத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ள கொலம்பியா நாட்டுக் குடியேற்றப் பகுதிக்கும் அடிக்கடி போய்விட்டு வருகிற சிவப்பிந்தியனை நேற்றுப் பார்த்தேன். அந்தக் கிராமத்தின் பெயர் லா வேலா. அந்தச் சிவப்பிந்தியனிடம் இரண்டு கழுதைகள் இருந்தன. ஒரு துப்பாக்கி வைத்திருப்பான். எல்லோரையும் போல அவனும் ஒரு கோவணம்தான் கட்டியிருப்பான். ஸ்பானிஷ் மொழியில் ஒரு வார்த்தைகூட அவனுக்குத் தெரியாது. பின்னே எப்படித்தான் வியாபாரம் நடத்துகிறானோ?

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# துளிர் விடும் மலையகம்



துளிர்: 26

**முந்திய** ஏற்பாடு


IV. தோறா (சட்டநூல்கள் 5)

இது 4 பெரும் மூலங்களினால் எழுதப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பெண்களின் நிலையை பற்றி நோக்கும் போது (I) மூலம் கி.மு 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஆதியாமகம் 2,3 அதிகாரத்திலிருந்து ஆதி தாய் தந்தையான ஆதாம் ஏவாள் என்ற புனைகதை உள்ளது. ஆதாம் கடவுளுக்கு அடுத்தபடியாக வாழ உருவாக்கப்பட்டவனாகவும், அவனுக்குகென்று படைக்கப்பட்ட உலகில் செழிப்பான வாழ்க்கையில் இருந்தபோது ஏவாளின் மூலமாக இழந்து போனதாகவும், ஆணிலிருந்து ஆணுக்காக என்றே படைக்கப்பட்டவளாகவும் காண்பித்து பெண்கள் இரண்டாம் தரமாக்கியுள்ளதை காணலாம்.

II. E மூலம் கி.மு 8 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஆதி 21:8 – 21 சாரள் என்பவள் ஆகார் என்ற அடிமை பெண்ணையும் மகனையும் வீட்டை விட்டு துரத்துகிறாள்.

இச்செயல் கடவுளுக்கும் பிரியமானதுப்போலவும் (வசனம்-12) காட்டப்படுகிறது.

III. D மூலம் கி,மு 7ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. உபாகமம் 24.1 இல், ஒரு பெண்ணிடம் வெட்கத்துக்குரிய தீய குணம் உண்டு என கணவன் கண்டால் தள்ளுதலின் பத்திரத்தை கொடுத்து வீட்டை விட்டு அனுப்பிவிடலாம். உபாகமம் 25:11 இலும் கணவனை காப்பாற்றுவதற்காக எதிரியின் மானத்தைப் பிடித்தால்,பெண்ணின் கையை துண்டிக்கும்படியும் கூறப்படுகின்றது.இப்படியான முறைகளில் பெண்களை ஒடுக்கும் சமுதாய நிலை காணப்பட்டதை,சரியென்பது போல திருமுறை கூறுகின்றது.



IV. P. மூலம் கி.மு 6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. லேவியராகமம் 15:19-30 வரையுள்ள பகுதியில் பெண்களின் மாதவிலக்கு காலத்தில் அவள் தீட்டுப்பட்டவளாக கூறப்படுகிறது. இதை விட இழிவான செயல் என்ன வெனில்,இந்நாட்கள் முடிந்தும் ஆண்மத குருவிடம், பாவப்பரிகாரத்திற்காக 2 காட்டுப்புறாக்களை அல்லது 2 மாடப்புறாக்குஞ்சுகளை கொண்டு வந்து பலியிடவேண்டும். இதனை அசுத்த இரத்த ஊறல் பாவமென வரையறுத்தனர். ஆண் குழந்தை பிறந்த பின் உள்ள 7 நாட்கள் அல்லது பெண் குழந்தை பிறந்த பின் 80 நாட்கள் தீட்டானவை என பெண்களை அடக்கி, எங்கு செல்லவோ எதையும் செய்யவோ விடவில்லை. இப்படியான பல சட்டங்கள் திணித்து, அவர்களை ஒடுக்கி தூய்மையற்றவர்கள் என பட்டம் சூட்டி இழிவுபடுத்துகின்றனர்.

M. நவீயீம் (இறைவாக்கினரின் நூல்கள்)

1. இறைவாக்கினரின் நூல்கள்:- (கி.மு 10 - 3 ஆம் நூற்றாண்டு வரை )

15 இறைவாக்கினரின் நூல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் வேசிகள்,

**ஸ்ரீ முகன்**

விபசாரிகள் போன்ற சொற்கள் பரவலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஆண்பால் சொற்கள் கிடையாது.பெண்களுக்கென்று வழங்கப்படும் தனித்த சொற்களாகும். இஸ்ரவேல் மக்கள் யாவே கடவுளை விட்டு அந்நிய தேவர்களை பின்பற்றி சோரம்போகும் போது அதனை அடையாளப்படுத்தி காட்ட இச்சொற்களை இறைவாக்கினர் பயன் படுத்தியுள்ளனர்.ஓசியா இறைவாக்கினரே இதனை அதிகமாக பாவிக்கிறார். ஓசியா (1:2) ,(2:2) ,(3:1) ,(4:10) , (13) ,(14) , (15), (5:3), 7 ……… அத்தோடு பெண்களின் உடலினை இழிவாக காட்டப்படுகிறது. (2:2:3).வெள்ளத்தோடு இழுபட்டு போகும் மரம் போல இறைவாக்கினர்களும், ஆண் சிந்தனைப்போக்குடன்,பெண்களை இரண்டாம் தரமாக மதித்துள்ளனர் என தெளிவாகிறது.

1: மூலம்

2 . வரலாற்று நூல்கள் -: (கி.மு 11 – 6 ஆம் நூற் வரை)

இஸ்ரவேல் வரலாற்றினை 5நூல்கள் எடுத்தியம்புகின்றன.அவற்றுள் ஒற்றை முடியாட்சிக்காலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும் .ஏனெனில் அக்காலங்களில் எழுந்த சவுல், தாவீது,சாலமோன் போன்ற தலைவர்கள் இஸ்ரவேலரினால் மிகவும் போற்றத்தக்கவர்களாக காணப்பட்டனர்.இதில் ஞானவான் என்றழைக்கப்பட்ட (I அரசர் ஆகமம் 11:1-8 ) சாலமோன் 700 மனையாட்டிகளையும்,300 மறுமனையாட்டிகளையும் உடையவனாக இருந்ததையும், இவர்கள் மூலமாகவே அந்நிய தேவர்களின் பின் சோரம் போனதாகவும் காட்டப்படுகின்றது. (11:3:4 ) இதன் மூலம் இஸ்ரவேலரின் மதத்திற்கு பெண்களே,ஊறுவிளைவித்தவர்களென, பெண்களை மட்டும் பிழையென காட்டுகிறது.

கட்டூபீம் (கவிதை இலக்கியங்களும ஞான இலக்கியங்களும் )

கவிதை இலக்கியங்கள் -:

யோபுவின் புத்தகம் ,கவிதை இலக்கியத்தில் சிறப்பிடத்தை பெறுகிறது. இந்நூல் கி.மு.5ஆம் நூற்றாண்டில் எழுந்ததாக நம்பப்படுகிறது.பொதுவாக ஆண்களை விட பெண்களை பக்தியில் சிறந்தவர்கள் என கூறப்பட்டாலும்,யோபுவின் புத்தகத்தில் தலைகீழாக உள்ளதை காணலாம்.யோபு2:9 இல் கடவுளை தூசித்து உயிரை விடும்படியாக யோபுவின் மனைவி கூறுவதை காணக்கூடியதாயுள்ளது. இங்கு கடவுளை தூசிக்க தயங்காதவளாகவும்,மற்றவர்களையும் அப்படியாக நடத்த எதிர்பார்ப்பவளாகவும் காண்பிக்கப்படுகின்றது.யோபுவிற்கு 7குமாரரும் , 3குமாரத்திகள் இருந்தனர்.குமாரர் வீட்டில் நடக்கும் விருந்தின் பின் ,ஆண் பிள்ளைகளின் பாவத்திற்கு (1:5) பலியிடுவதாக கூறப்படுகிறது.இச்சமயச் சடங்கில் பெண்பிள்ளைகள் புறக்கணிக்கப்படுவதனை காணலாம்.

*(துளிர்க்கும்)*

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**தெருவில்** அடுத்த வேளை உணவைத் தேடிக் கொண்டிருக்கும் ஒரு ஏழை அந்த நெக்லெஸைப் பொறுக்கி எடுக்கிறான். அதைப் பார்த்த எட்னா, தெருவில் வேகமாக ஓடி அவனைப் பின் தொடர்ந்து நகைகளைத் திரும்பப் பெறுகிறாள். பெண்களுக்குப் பொன்னாசை எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை இந்த ஒரு சிறிய சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டுகிறார் சாப்ளின்.

ஒருநாள் இரவு ஓவியன், எட்னாவும், மென்ஜோவும் வழக்கமாகச் செல்லும் உணவு விடுதிக்குக் கையில் துப்பாக்கியுடன் செல்கிறான். ஒரு பணியாள் மூலம் உன்னை உடனே பார்க்க வேண்டும் என்று ஒரு காகிதத்தில் எழுதி எட்னாவுக்கு அனுப்புகிறான். அது மென்ஜோவிற்குக் கிடைக்கிறது. விஷயமறியாத மென்ஜோ அதைப் படித்து விட்டு ஓவியனை உள்ளே வரச் சொல்கிறான். அருகில் உட்கார்ந்து விருந்தில் கலந்து கொள்ளச் சொல்கிறான். பொறுமையை இழந்த ஓவியன் மென்ஜோவின் மேல் பாய்கிறான். அருகிலிருக்கும் பணியாட்கள் அவனை வெளியே துரத்தி விடுகிறார்கள். மனமுடைந்த ஓவியன், தற்கொலை செய்து கொள்கிறான் கையில் இருக்கும் துப்பாக்கியினால். விஷயமறிந்த



ஓவியனின் தாய் கையில் துப்பாகியுடன் எட்னாவைத் தேடி வருகிறாள். அங்கு தன் மகனின் பிணத்தின் மீது எட்னா கதறி அழுவதைப் பார்த்து அவளுடைய மனம் மாறுகிறது.

ஓவியனின் தாயும் எட்னாவும் நண்பர்கள் ஆகிறார்கள். கிராமப்புறத்தில் ஒரு பெரிய வீட்டை வாங்கி அதில் அனாதைக் குழந்தைகளைப் பராமரித்து வருகிறார்கள்.

படத்தின் கடைசிக் காட்சி.... ஒரு கிராமப்புற சாலையில் வைக்கோல் வண்டியில் எட்னா சென்று கொண்டிருக்கிறாள். அவள் பக்கத்தில் ஒரு அநாதைக் குழந்தை.

அந்த வண்டியைத் தாண்டி ஒரு படகு சொகுசு மோட்டார் வண்டி செல்கிறது. அதன் உள்ளே நண்பனுடன் அரட்டையடித்துக் கொண்டிருக்கிறான் மென்ஜோ.

அந்த நண்பன் பேச்சு வாக்கில் உன் எட்னா எங்கப்பா? என்று கேட்கிறான். அநாயாசமாக ஒன்றும் தெரியாது என்ற வகையில் தோளைத் தூக்கி உதட்டைப் பிதுக்குகிறான். அருகில் சென்று கொண்டிருக்கும் வைக்கோல் வண்டியில் எட்னா இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியாது. சொகுசு மோட்டார் காரில் மென்ஜோ இருப்பது இவளுக்குத் தெரியாது. கதை முடிகிறது.

"எ வுமன் ஆப் பாரிஸ்" பெரும் பணச்செலவில் தயாரிக்கப்பட்டது. ஆனால் வசூல் ரீதியில் வெற்றி பெறவில்லை. விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள், அறிவாளிகள் போன்றவர்கள் படத்தை மெச்சினார்கள். ஆனால் பொழுது போக்கிற்காகப் படம் பார்ப்பவர்கள் அதை நிராகரித்தார்கள். சாப்ளின் படம் என்றாலே சிரிப்பு நிறைந்து இருக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் எல்லோரும் ஏமாற்றம் அடைந்தார்கள். படத்தில் நல்லவனான ஓவியன் தற்கொலை செய்து கொள்கிறான். வாழ்க்கை விளையாடுவதற்கே என்ற கொள்கையைக் கொண்ட பணக்காரன் வாழ்ந்து கொண்டேயிருக்கிறான். நடுவில் சிக்கிய பெண்ணிற்கு வாழ்க்கையில் எதுவுமே கிடைக்கவில்லை. இந்தக் கருத்து பலருக்குப் பிடிக்கவில்லை. அதுதான் படத்தின் பணத்தோல்விக்குக் காரணம். அறிவு ஜீவிகள் மட்டும் இந்தப் படம் நிஜவாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது என்று புகழ்ந்தார்கள். உலக வாழ்க்கையில் நல்லவனுக்குக் கெட்டது நடக்கிறது. கெட்டவனுக்கு நல்லது கிடைக்கிறது. இந்த யதார்த்தமான உண்மையை இந்தப் படத்தின் மூலம் சுட்டிக் காட்டினார் சாப்ளின்.



"எ வுமன் ஆப் பாரிஸ்" வெறும் திரைப்படமல்ல, கலைக் காவியம் என்றார்கள் அறிவாளிகள். சாப்ளினை இலக்கியத்தில் சரித்திரம் படைத்த பிரபல ஆங்கில நாவலாசிரியர் சார்ல்ஸ்டிக்கென்ஸ் (Charles Dickens) ஒப்பிட்டார்கள். அது சாப்ளினுக்கு சந்தோஷத்தையும் பெருமையையும் அளவில்லா திருப்தியையும் அளித்தது.

1932 ஆம் ஆண்டு அளவில் சார்லி சாப்ளின் ஒரு பிரபல ஹாலிவுட் திரைப்பட "மொகல்" (Mogul) ஒருவர் அளித்த சொகுசு கப்பலில் நடத்திய விருந்தில் ஒரு அழகிய பெண்ணைச் சந்தித்தார். எதிர்பார்த்ததுபோல் சாப்ளினின் வாழ்க்கையில் மீண்டும் காதல் சுடர் விடத் தொடங்கியது! இருபத்து மூன்று வயதான அவள் பேரழகி என்று வர்ணிக்க முடியாவிட்டாலும் கவர்ச்சி நிறைந்தவள். அவளைப் பார்த்தவுடனே பெண்களுக்குக் கூட ஒரு பரிதாப உணர்ச்சி தோன்றும் அந்த வகையில் இருந்தது அவளுடைய முகம். அவளுக்கு மேடை, திரைப்பட அனுபவம் ஓரளவிற்கு இருந்தது. அவளுடைய பெயர் பாலின் லெவி (Pauline Levy).

ஹாலிவுட்டில் இருபதாவது நூற்றாண்டு முன் பாதியில் அமெரிக்க திரைப்பட உலகமே சில தயாரிப்பாளர்களின் கைப்பொம்மையாக இருந்தது. அவர்கள் எல்லோரும் ஸ்ரூடியோ சொந்தக்காரர்கள், படத் தயாரிப்பாளர்கள்.

**(தொடரும்)**

## மைக்கேல் ஜாக்சன்

**பிரபல** பொப் இசை பாடகர் மைக்கேல் ஜாக்சன் ஜப்பானிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். டோக்கியோ நகரில் அவரது ரசிகர்கள் சார்பில் விருந்து நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு



செய்யப்பட்டிருந்தது. இதில் மைக்கேல் ஜாக்சன் கலந்து கொண்டார்.

அவருடன் விருந்து சாப்பிடுவதற்குக் கட்டணம் ரூபா 3 லட்சம் அறவிடப்பட்டது. இருந்தும் 300இற்கும் மேற்பட்டவர்கள் புக் செய்து, இக் கட்டணம் செலுத்தி நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.

இதே நிகழ்ச்சியில் 100இற்கும் மேற்பட்ட அனாதைக் குழந்தைகளும், உடல் ஊனமுற்றவர்களும் இலவசமாக அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் மைக்கேல் ஜாக்சன் நீண்ட நேரம் உட்கார்ந்து பேசினார்.

## ஷில்பாஷெட்டி

**"பிக்பிரதர்"** டி.வி. நிகழ்ச்சியின் போது லண்டன் நடிகையால் இனவெறியுடன் அவமானப் படுத்தப்பட்ட நடிகை ஷில்பாஷெட்டி, அந்த நிகழ்ச்சியில் வெற்றி பெற்றுக் கோடிக்கணக்கில் பரிசுகளுடன் அவருக்கு புகழும் சேர்ந்தது.

இந் நிலையில் காமன்வெல்த் அமைப்பால் லண்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் இங்கிலாந்து ராணி எலிசபெத், அவரது கணவர் இளவரசர் பிலிப் மற்றும் காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் உட்பட 2000 பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதில் ஷில்பாஷெட்டியும் அழைக்கப்பட்டிருந்தார்.

ஷில்பாஷெட்டி இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும்போது, "பிக்பிரதர்" நிகழ்ச்சியில் தான் அவமானப்பட்டதை மறந்து விட்டேன் என்று தெரிவித்த அவர், எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றியும் உரையாற்றி னார்.

பேசி முடிந்ததும் ஷில்பாஷெட்டி ராணி எலிசபெத்தைச் சந்தித்து கைகுலுக்கச் சென்றார். அப்போது குதிக்கால் செருப்பு அணிந்திருந்தார். அவர் ராணி அருகே சென்றதும் கால் தவறி கீழே விழுந்து விட்டார். அப்போது அருகே நின்ற இளவரசர் பிலிப் "கவனம் கவனம் பார்த்து வாருங்கள்" என்று பதறியபடி கூறினார். ராணியைச் சந்தித்த ஷில்பாவுக்கு சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது.



# பாடும் நிலாவின் சாதனைப் பயணம்




**தமிழிலும்,** பிற இந்திய மொழிகளிலும் 39 ஆண்டுகளில் 36 ஆயிரத்திற்கும் மேலான பாடல்கள் பாடி, உலக சாதனை படைத்துள்ளார் பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

தாய் மொழி தெலுங்கு என்றாலும் தமிழ் நாட்டில் பிறந்தவர்.

### பெற்றோர்

எஸ்.பி.பாலசுப்பிரமணியம், கொனோட்டாம்பேட்டை என்ற கிராமத்தில்



பெற்றோர், மனைவி, சகோதரிகள், மகன், மகள் ஆகியோருடன் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

1946ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4ஆம் திகதி பிறந்தார். தமிழ்நாடு - ஆந்திரா எல்லையில் உள்ள இந்த சிற்றூர் முன்பு ஆந்திராவில் இருந்தது. இப்போது தமிழ் நாட்டில் இருக்கிறது.

பாலசுப்பிரமணியத்தின் தந்தை பெயர் எஸ்.பி.சாம்பமூர்த்தி. இவர் ஒரு இசைக் கலைஞர். ஹரிகதாகாலட்சேபம் செய்வதில் புகழ் பெற்றவர். தாயார் பெயர் சகுந்தலம்மா.

பாலுவின் இளமைப்பருவம் திருப்பதியை அடுத்த நகரி, நெல்லூர், காளஹஸ்தி ஆகிய ஊர்களில் கழிந்தது. காளஹஸ்தி பள்ளியில் படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேறினார். பின்னர் திருப்பதி ஆர்ட்ஸ் கல்லூரியில் "பி.யு.சி" படித்தார். பள்ளியில் படிக்கும்போதே, பாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பல பாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றார்.

### பாட்டுப்போட்டி

தெலுங்கு சங்கம் ஒன்று நடத்திய பாட்டுப் போட்டிகளில், தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் முதல் பரிசு பெற்றார். மூன்றாவது ஆண்டும் முதலாவதாக வந்தால், அவருக்குப் பெரிய வெள்ளிக் கோப்பை வழங்க வேண்டி இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காக, அந்த சங்கத்தின் நிர்வாகிகள் அந்த ஆண்டு பாலுவுக்கு இரண்டாம் பரிசு என்று அறிவித்தனர்.

அந்த பாட்டுப் போட்டிக்குத் தலைமை தாங்கியவர் பிரபல பின்னணி பாடகி எஸ்.ஜானகி. "இன்று இரண்டாவது பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கும் இளைஞர், முதல் பரிசு பெற்றவரை விட சிறப்பாகப் பாடினார். நியாயமாக, முதல் பரிசு அவருக்குத்தான் சேரவேண்டும்" என்று அறிவித்தார்.

வேறு வழியின்றி, சங்க நிர்வாகிகள் முதல் பரிசையும், வெள்ளிக் கோப்பையையும் பாலுவுக்கு வழங்கினர்.


### என்ஜினியரிங் கல்லூரி

மகன் என்ஜினியராக வேண்டும் என்பது பாலுவின் தந்தையின் விருப்பம். அதன்படி, சென்னையில் என்ஜினியரிங் கல்லூரியில் சேர பாலு முயற்சி செய்தார். ஆனால் இடம் கிடைக்கவில்லை. எனவே, "ஏ.எம்.ஐ.ஈ" என்ற தொழிற் கல்வி பயின்றார்.

### சினிமாவில் பாட முயற்சி

பாலு ஒரு இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாடியபோது, அதைக்கேட்ட தெலுங்கு இசை அமைப்பாளர் எஸ்.பி.கோதண்டபாணி, "உன் குரல் மிகவும் இனிமையாக இருக்கிறது. உன்னை சினிமாவில் சேர்த்து விடுகிறேன் என்று கூறினார்."

பல பட அதிபர்களிடமும், இசை அமைப்பாளர்களிடமும் அழைத்துச் சென்றார்.



எஸ்.பி.பாலசுப்பிரமணியம்

ஆனால் அவர் முயற்சி அப்போது வெற்றி பெறவில்லை.

### முதல் பாடல்

1966இல் கோதண்டபாணியின் இசையமைப்பில் "ஸ்ரீஸ்ரீ மரயதா ராமண்ணா" என்ற தெலுங்குப் படம் தயாராயிற்று. அதில் பாடுவதற்கு பாலசுப்பிரமணியத்துக்கு வாய்ப்பளித்தார். அவர் பின்னணி பாடிய முதல் படம் இதுதான்.

திரைப்படத்துக்குப் பின்னணியில் எப்படி பாடவேண்டும் என்ற நுணுக்கங்களையும் கோதண்டபாணி போதித்தார். அது முதல், பாலுவுக்கு கோதண்டபாணிதான் மானசீக குருவானார்.

### எம்.ஜி.ஆர். மூலமாக தமிழ்திரைக்கு அறிமுகம்

தமிழ்ப்பட உலகுக்கு எம்.ஜி.ஆர். மூலம் அறிமுகம் ஆனார், எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

எம்.ஜி.ஆரின் "அடிமைப் பெண்" படத்தில் "ஆயிரம் நிலவே வா" பாடலைப்பாடி, பெரும் புகழ் பெற்றார் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

சென்னையில் படிக்கும்போது தியாகராயர் கல்லூரியில் நடந்த மெல்லிசைப் போட்டியில் கலந்து கொள்ள பாலு சென்றார். அப்போது, பிரபல விளம்பர டிசைனர் பரணி அவருக்கும் அறிமுகம் ஆனார். இருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

**(தொடரும்**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு

**மறுநாள்** சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர், குர்தா பிஜாமா அணிந்திருந்த வாலிபரின் வர்த்தகப் பங்குதாரர்கள் என்று கூறப்பட்ட புகைப்படப் பிடிப்பாளரோடு தொடர்பு கொண்டு குர்தா பிஜாமா வாலிபரைப் பற்றி விசாரித்தார். தன்னிடம் ஹரிபாபு கமராவை இரவலாக வாங்கிச் சென்றதை ஏற்றுக் கொண்ட அந்தப் புகைப் படப்பிடிப்பாளர், குர்தா பிஜாமா வாலிபர் தனது வர்த்தகப் பங்குதாரர் அல்லவென்றும், அவரைப் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்றும் மறுத்து விட்டார். இது அந்த ஊடகவியலாளருக்குப்பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதுவும் புலிகள் இயக்கம் ராஜீவைக் கொன்றிருக்கலாமென்ற சந்தேகம் பரவலாக எழுந்த நிலையில், சுயாதீனப் புகைப்படப் பிடிப்பாளரின் கருத்து அவருக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.




புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த சென்னையைச் சேர்ந்த சுபா சுந்தரம், பிரபலமான புகைப்படப்பிடிப்பாளராவார். அவரோடு ஹரிபாபு தொடர்புகளைக் கொண்டிருந்தார். புலிகள் இயக்கத்தின் வலுவான ஆதரவாளராக விளங்கிய சுபா சுந்தரத்தின் ஸ்டுடியோவிற்குப் புலி இயக்க முக்கியஸ்தரான பேபி சுப்பிரமணியம் என்பவர் வந்து போவதுண்டு. 1990ஆம் ஆண்டின் முற்பகுதியில் சுபா சுந்தரம் யாழ்ப்பாணத்துக்குக் குறுகிய கால விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

அப்போது அவர் புலி இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் சந்தித்துப் பேசியிருக்கின்றார். சுபா சுந்தரம் புலிகள் இயக்கத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் குறித்துப் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் பல முக்கிய தகவல்கள் வெளிவந்தன.

பெண் இன்ஸ்பெக்டர் அனுசியா கொடுத்த தகவலும், குறிப்பிட்ட ஊடகவியலாளர் வழங்கிய தகவல்களும் புலனாய்வாளர்களை புலிகளின் திசையில் சிந்திக்க வைத்தது சல்வார்க் கமீஸ் பெண், புகைப்படப்பிடிப்பாளர் ஹரிபாபு இன்னமும் அடையாளம் காணப்படாத குர்தா பிஜாமா வாலிபர் ஆகியோருக்கிடையிலான தொடர்புகள் பற்றி புலனாய்வாளர்கள் துருவித்துருவி விசாரிக்க ஆரம்பித்தனர்.

இந்திய விசேட புலனாய்வுப் பிரிவு பல கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டது. புலிகள் இயக்கம், சீக்கியத் தீவிரவாத இயக்கம், மற்றும் இந்து, முஸ்லிம் பயங்கரவாத அமைப்புகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று இந்தப் படுகொலையைப் புரிந்திருக்குமா என்ற சந்தேகத்தில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன. தமிழகத்திலும் இலங்கையிலும் இந்தியாவிலும் ராஜீவ் கொலை பற்றிய செய்தியை வெளியிட்ட பத்திரிகைகள் அமோகமாக விற்பனையாகின. கொழும்புப் பத்திரிகைகள், தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட பாணியை வைத்து புலிகள் இயக்கமே இதற்குப் பொறுப்பெனக் குற்றம் சாட்டின. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை அமைப்பு (ரெலோ) ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய தமிழ் அமைப்புகள் புலிகள் இயக்கத்தின் மீது குற்றம் சுமத்தின. தமிழக முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும்பாலானோர், புலிகள் இயக்கமே இப்படு கொலையைச் செய்திருக்கலாமென்று சந்தேகம் தெரிவித்தன.

*(அரசியல் தொடர்)*

ராஜீவ் காந்தியின் படுகொலை இடம்பெறுவதற்குச் சுமார் ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. மே மாதம் 21ஆம் திகதி மாலை நான்கு மணியளவில் இந்தத் தொலைபேசி அழைப்பு வந்ததாகக் கூறப்படுகின்றது. மறுமுனையில் பேசியவர், "ராஜீவ் காந்தி உயிருடன் இருக்கின்றாரா?" என்று கேட்டிருக்கின்றார். சம்பந்தப்பட்ட தொலைபேசி அழைப்பை எடுத்த இந்திய உயர் ஸ்தானிகராலய ஊழியர், இதனைப் பாரதூரமான ஒரு விடயமாகக் கணக்கிலெடுக்கவில்லை. இந்தியாவிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த தொலைபேசி அழைப்புப் பற்றிய தகவல் கொடுக்கப்பட்டிருந்தால், சில வேளைகளில் ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து வராமல் தடுத்திருக்கலாம். இவ்வாறான அநாமதேயத் தொலைபேசி அழைப்புகள் அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை ஆகிய சில நாடுகளிலுள்ள பத்திரிகை நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கலிபோர்னியாவில் பிரசுரிக்கப்பட்டு வந்த 'India West' என்ற இந்தியர்களால் நடத்தப்பட்ட சஞ்சிகைக்கு வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று, புலிகளே இக்கொலையைப் புரிந்ததாக தெரிவித்தது. கலிபோர்னியாவின் சாக்ரமென்ரோ பகுதியிலிருந்து இந்த அழைப்பு வந்ததாக பின்னர் தெரிவிக்கப் பட்டது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதில் புலிகளே பேர் போனவர்கள் என்பதால், அவர்கள் மீது சந்தேகம் எழுந்தாலும், அவர்கள் இலங்கைக்குள்ளேயே இவ்வாறான தாக்குதல்களை அதுகாலவரை நடத்தியிருக்கிறார்கள். இலங்கைக்கு வெளியே இந்தியாவில் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பார்களா என்று சில பத்திரிகைகள் சந்தேகம் வெளியிட்டன. இவ்வாறு பல்வேறு வகையான கருத்துக்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. கொலை இடம்பெற்ற மறுநாள், மே மாதம் 22ஆம் திகதி, சென்னை

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

நகரிலிருந்து வெளிவரும் 'நியூஸ் ருடே' என்ற ஆங்கில மாலைத் தினசரி அதிர்ச்சி தரும் தகவல் ஒன்றினை வெளியிட்டது. கூட்டத்தில் பங்கு பற்றியவரெனக் கூறப்படும் ஒருவரை மேற்கோள் காட்டி அச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது. ராஜீவ் காந்தி கூட்ட மேடையை அண்மித்துக் கொண்டிருந்த போது அவருக்குப் பக்கவாட்டாக வந்த பெண்ணொருத்தி, அவருக்கு முன்னால் வந்து நின்றதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்பெண்ணுக்குத் துணையாக மற்றுமொரு பெண்ணும் வந்ததாகவும் அச் செய்தியில் குறிப்பிட்டிருந்தது. முதலில் வந்த பெண் தனது சேலைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு போன்ற ஒன்றினை வெளியே எடுத்து, வேறொரு கருவியின் மூலம் வெடிக்க வைத்ததாக்வும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மாலைக்குள் வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அது பூக்கள் நிறைந்த கூடை ஒன்றிற்குள் வைக்கப்பட்டிருந்தது என்றும் தமிழக காங்கிரஸ் தலைவர்களை மேற்கோள் காட்டிய தகவலும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.



ஸ்ரீபெரம்புதூர் கூட்ட மைதானத்தில் பெண்கள் அமர்ந்திருந்த விசேட பகுதியையும், தற்கொலைக் குண்டுதாரியோடு வந்த பெண்களையும் இங்கு காணலாம்.

இப்படுகொலை நடந்த மறுநாளே, லண்டனிலிருந்து புலிகள் இயக்கத்தின் சர்வதேசச் செயலகம், இக் கொலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லையென்று மறுப்புத் தெரிவித்தது. கிட்டு என்றழைக்கப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமார் அப்போது லண்டனில் இருந்தார். அவரே இந்த மறுப்பை வெளியிட்டிருந்தார். ராஜீவ் காந்தியின் படுகொலை குறித்து தமது கவலையையும் அதிர்ச்சியையும் புலிகள் இயக்கம் தெரிவிப்பதாக லண்டனில் புலிகளின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் அன்ரன் ராஜா தெரிவித்திருந்தார். தமிழ் நாட்டிலுள்ள புலிகள் இயக்கத்தின் சில உதிரி உறுப்பினர்கள் இயக்கத் தலைமைக்குத் தெரியாமலேயே இக் கொலையைச் செய்திருக்கலாமென்ற சந்தேகத்தையும் அவர் மறுத்தார். சீக்கிய தீவிரவாத இயக்கத் தலைவர் யக்ஜித் சிங் சௌஹான் என்பவர் லண்டனிலிருந்து வெளியிட்ட அறிக்கையில், இப்படுகொலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லையென்று மறுப்புத் தெரிவித்தார். இதே போன்று, ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவரான அமானுல்லா கான் என்பவர் ராவல் பிண்டியிலிருந்து மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில், இப்படுகொலையை அடுத்து தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கேரளம், மேற்கு வங்காளம் ஆகிய இந்திய மாநிலங்களில் வன்செயல்கள் வெடித்தன. ராஜீவ் காந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த கட்சிகளுக்கு எதிராகவே தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தீ வைப்பு, கொள்ளைச் சம்பவங்களும் தாராளமாக இடம்பெற்றன. பல நூற்றுக் கணக்கான கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. தமிழ் நாட்டில் நால்வரும், ஆந்திரப் பிரதேசத்தில் மூவரும் கேரளம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொருவருமாக ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.


(தொடர்ந்து வரும்....)




**எதேச்சையாகத்தான்** அந்த விஷயமும் பேச்சில் வெளிப்பட்டது. தனது அம்மாதான் அந்தப் பார்வதி என்பதை அனந்தராமன் குறிப்பிடவும் இல்லை.

"நான் அங்கே தங்கியிருப்பதையும் எனக்கு சாப்பாடு ஏற்பாடு செய்யச் சொல்லி உங்களுக்குச் சொன்னது யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அதுவா. என் மகளை மாதிரி, இவளை விடக் கொஞ்சம் பெரிய பொண்ணு அது. வல்லிக்கோட்டை பங்களாக்காரங்களோட ஏதோ தூரத்துச் சொந்தமுன்னு வேற என்கிட்ட சொன்னது. அவங்களோட சொந்தக்காரங்க இந்தப் பக்கத்தில நிறையப் பேர் இருப்பாங்கன்னு நினைக்கிறேன். இவளை உங்ககிட்ட உதவி கேட்டு நான்



அனுப்பினது என்னோட பொருளாதாரப் பற்றாக் குறையினாலதான்...." பேசிக் கொண்டே வந்த வாத்தியாரின் குரல் இடறியது.

"உங்களுக்கு உங்க பொண்ணைத் தவிர வேற பையனுங்க யாரும் இல்லையா? ரிட்டையர் ஆனா பென்ஷன் ஏதாவது வரணுமே.....?"

"நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க. வாத்தியாருன்னு எல்லோரும் சொல்றதினால நான் ஏதோ பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்தேன்னு நினைக்காதீங்க. பிள்ளைங்க பள்ளிக்கூடம் போறதுக்கு முன்னால மணல்ல அவங்களுக்கு எழுத்தை எழுதிக் கத்துக் கொடுத்திருந்தேன் கொஞ்ச நாள். இப்பத்தான் அதுக்கெல்லாம் யாரும் வர்றதில்லையே?"

வாத்தியார் சுயநிலையை விளக்கினார்.

'நான்தான் தப்பா புரிஞ்சுக்கிட்டேன்."

"இவளோட அம்மா உயிரோட இருந்தபோது கொஞ்சம் வீடுகள்ல வேலை செஞ்சுக்கிட்டிருந்தாள்."

"அது சரி வல்லிக்கோட்டை பங்களாவில் இருந்த கடைசி ஜமீன்தாருக்கு வேறயாரும் சொந்தக்காரங்க இல்லையா?" - அனந்தராமன் கேட்டார்.

"இல்லை. உறவுன்னு யாருமே இல்லை. அவர் ஒரு மாதிரியானவர். யாரையும் கிட்டயே சேர்த்துக்கலை. அதனால்தான் கடைசியா அந்த வீட்டுக்குன்னு யாரும் நேரடி வாரிசு இல்லாமல் போச்சு. கூடவே மந்திரவாதம் தெரிஞ்சவர்."

"நீங்க சொல்றதைப் பார்த்தா கருணைங்கிறது அவருக்கிட்ட மருந்துக்கும் இருந்திருக்காது போல இருக்கே!"

"கருணை இருந்திருந்தால்கூட அதை அவர் யாருகிட்ட காமிக்கிறது, தேவைப்படுற போதெல்லாம் வேண்டியதைச் செஞ்சு கொடுக்கிற - ஏற்பாடு பண்ணித் தர்றதுக்குன்னே ரங்கசாமி மாதிரி ஆளுங்க இருந்தாங்க. அதனால்தான் கடைசி வரைக்கும் அவரு கல்யாணமே பண்ணிக்கலை."

"இப்ப அந்த ரங்கசாமி எங்கே இருக்கிறார்?"

"அதோ தெரியுதே அந்த ஒத்தைப் பனைமரம். அதைத் தாண்டினா உடனே இருக்கிற முதல் வீடு அவருடையதுதான். எங்க முதலாளியைக் காணோம். நீங்க பார்த்தீங்களா? உங்களுக்கு ஏதாவது விவரம் தெரியுமான்னு கேட்டுப் போக வந்தேன்னாரு. அதுக்குப் பிறகு அவரை நான் பார்க்கலை."

"இவ்வளவு விபரம் போதும். இனிமேல் என்ன தெரியவேண்டி இருக்கு? வந்தது வந்தாச்சு. இனிமேல் எல்லாம் முடிஞ்ச பிறகு போனால் போதும்."

"எனக்கு ஒண்ணும் புரியலையே." - ஒண்ணும் விளங்காதவராக சுந்தரராமன் நெற்றியில் கையை வைத்து அனந்தராமனை உற்றுப் பார்த்தபடி கேட்டார்.

"வல்லிக்கட்டு பங்களாவில் இருந்து கொல்றதுக்காக ஏற்பாடு பண்ணின பார்வதியோட பையன் நான். எங்க வீட்டுக்கு வந்த ஒரு பொம்பளை அம்மாவை ரொம்பவும் வற்புறுத்தினாங்க. அப்படித்தான் நான் இங்க வந்தேன்."

"அப்பிடிப் போடுறான்னானாம். ஆளைப் பார்த்த போதே எனக்கு ஒரு சந்தேகம் பவித்திரனோட சாயல் அப்படியே இருக்கே. அதான் என்னடான்னு யோசிச்சேன்."

"இப்ப நீங்க சொன்னதை வைச்சுப் பார்த்தா என்னை மாதிரியே அவரோட ஜாடையில எத்தனையோ பேருங்க இருப்பாங்க போல இருக்கே."

"அதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. நம்மகிட்ட சொன்னதை வச்சு, நாம் நடந்துக்கணும். உங்க உரிமையைக் கேட்டு வாங்கிக்க வேண்டியதுதான்...."

"வாங்கலாம் யாருக்கிட்டேர்ந்து?"

"அந்த பங்களாவை விலைக்கு வாங்கியிருக்கிறானே அவன் கிட்டேயிருந்து, வேற யாருக்கிட்டே?"

"அவன் அதுக்கு சம்மதிக்கலேன்னா?"

"அப்புறம் கடவுள்தான் உதவணும். அவங்களுக்கு பெரிய நஷ்டம் ஒண்ணும் இல்லையே."

"அதெல்லாம் சரிதான். இவ்வளவு தூரம்

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவன்**

வந்தபிறகு முயற்சி பண்ணிப் பார்க்கலாம். எனக்கும் இப்படியெல்லாம் விளையாடிப் பார்த்தா என்னன்னு தோணுது. அப்புறம் நான் இங்க வந்தபிறகு ஒரு பெண்ணைச் சந்திச்சேன்."

"நான் சொன்னேனே வல்லிக்காட்டு பங்களாக்காரங்களோட சொந்தக்கார வீடு ஒண்ணு இங்க எங்கேயோ பக்கத்தில இருக்குது. அந்த வீட்டுக்காரப் பொண்ணாத்தான் இருக்கணும். வேற யாரும் இப்படி வந்து ஆலோசனை சொல்றதுக்கு இல்லை."

இரண்டு பேரையும் சாப்பிடக் கூப்பிடுவதற்காக லதா வந்தாள். நேரம் இருட்டி விட்டதை அனந்தராமன் அப்பொழுதுதான் உணர்ந்தான். வெளியே ஒரே இருள். எண்ணெய் விளக்கின் வெளிச்சம் இருட்டில் அதிக தூரம் பிரயாணப்பட முடியாமலிருந்தது.

*(பயங்கரம் தொடரும்)*

# மனதுக்கு நிம்மதி

‘**அடுத்தவர்கள்** மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், அவர்களுக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைத்தால், பிரதிபலனே பாராமல் அடுத்தவர்களுக்கு உதவுங்கள்....’

- தலாய்லாமாவின் இந்தப் பொன்மொழி எத்தனை சத்தியமானது என்பதை யாராலும் விளக்க முடியாது. அதை அனுபவபூர்வமாக மட்டுமே உணர முடியும்.

வேலைக்காரச் சிறுமிக்கு பாடப் புத்தகம் வாங்குவதற்கும், பேனா வாங்குவதற்கும் காசு கொடுத்துவிட்டு, “அடுத்தவர்களுக்கு நான் என்னாலான உதவிகளைச் செய்கிறேன்” என்று சிலர் தங்களைத் தாங்களே திருப்திப் படுத்திக் கொள்வதுண்டு. ஆனால், இதுபோன்ற செயல்களுக்குப் பெயர் உதவி இல்லை. வேலைக்காரப் பெண் இன்னும் அதிக ஈடுபாட்டுடனும், சுறுசுறுப்புடனும், உற்சாகத்துடனும் வேலை செய்வதற்காகக் கொடுக்கப்படும் ஊக்கத் தொகை அது. அவ்வளவுதான்.

நான் இப்படிச் சொல்வதால் மற்றவர்களுக்கு அளித்து வரும் இதுபோன்ற சொற்ப உதவிகளை தயவுசெய்து யாரும் நிறுத்தி விட வேண்டாம். எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் அடுத்தவர்களுக்கு உதவி செய்தால் மட்டுமே அளவில்லாத, பூரணமான சந்தோஷத்தை உங்களால் உணர முடியும் என்பதைத்தான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தான் உண்டு.... தன் மனைவி, மக்கள் உண்டு என்றுதான் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். “விற்கும் விலைவாசியில் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த என்னால் மற்றவர்களுக்கு எப்படி உதவ முடியும்?” என்றுகூட சிலர் கேட்கலாம்.

மனம் இருந்தால் மார்க்கமுண்டு. ஒரு சினிமா பார்க்கிற செலவைக் குறைத்துக் கொண்டு, ஓர் ஏழை மூதாட்டிக்கு மலிவான ஒரு நூல் புடவை எடுத்துக் கொடுக்க முடியாதா? ஓர் உதாரணத்துக்காகச் சொல்கிறேன். உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் எப்படியும் உதவ முடியும்.

நீங்கள் அடுத்தவர்களுக்கு உதவினால் ஆண்டவன் உங்களுக்கு உதவுவான். எப்படி? இந்தக் கதையைப் படியுங்கள்.... புரியும்.

# கலியுகக் கண்ணன்!

கண்ணனுக்கு வயது முப்பத்திரண்டு. இந்தச் சின்ன வயசுக்குள் அவன் அனுபவித்து விட்ட சோதனைகள் மிகமிக



அதிகம். வாழ்ந்து கெட்ட குடும்பத்தைச் சேர்ந்த அவன், இப்போது வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு மெக்கானிக் ஷாப்பில் மிகக் குறைந்த சம்பளத்தில் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்கிறான்.

ஒரு நாள்.... இரவு நேரம். கண்ணனை அழைத்து டிபன் வாங்கிவரச் சொன்னார் முதலாளி. ரிப்பேருக்கு வந்திருந்த ஓர் ஆட்டோவை எடுத்துக் கொண்டு கண்ணன் கிளம்பினான். அப்போது பேய்மழை பெய்து கொண்டிருந்தது. தூரத்தில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் ஒதுங்க இடமில்லாமல் பெட்டி படுக்கைகளுடன் மழையில் கோழிக்குஞ்சு மாதிரி நனைந்தபடி நின்று கொண்டிருந்தார். கண்ணன் அவரருகில் சென்று ஆட்டோவை நிறுத்தினான்.

“என்ன சார்! என்னாச்சு?” என்று கரிசனத்துடன் விசாரித்தான். தான் பயணம் செய்த பஸ் பிரேக்டௌன் ஆகி நடுவழியில் நின்றுவிட்டதாகவும், மற்றப் பயணிகள் எல்லாம் லாரி, டிரக் என்று பிடித்துச் சென்று விட்டதாகவும், தான் மட்டும் கடந்த ஒரு மணி நேரமாக வாகனம் எதுவும் கிடைக்காமல் இங்கே மழையில் நனைந்து கொண்டிருப்பதாகவும் வெடவெடத்த குரலில் கூறினார் அவர்.

கண்ணன் அந்தப் பெரியவர் மீது இரக்கம் கொண்டான். “இந்த ராத்திரி நேரத்தில இந்த ரூட்டில பஸ் ஒண்ணும் கிடையாது சார். பேசாம ஆட்டோவில ஏறி உட்காருங்க. இங்கிருந்து கொஞ்சத் தூரம் போனா அங்க ஏதாவது டாக்ஸி கிடைக்கும். அதுல நீங்க சௌகரியமா உங்க ஊருக்குப் போயிடலாம்!” என்றான். நன்றி பொங்கத் தலையாட்டிவிட்டு ஆட்டோவில் ஏறி அமர்ந்தார் அவர்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவரை, ஒரு டாக்ஸி பிடித்து ஏற்றி, வழி அனுப்பினான் கண்ணன். பெரியவர் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு “தப்பா நினைக்கலைன்னா இதை வெச்சுக்கப்பா!” என்று சில ரூபாய் நோட்டுக்களை கண்ணனின் கையில் திணிக்க முனைந்தார். கண்ணன் வெடுக்கென்று கைகளை உருவிக்கொண்டான்.

இதுக்கெல்லாம் காசு வேண்டாம் சார். நடுரோட்டில் பரிதாபமாக நின்னுட்டு இருந்தீங்களேன்னு லி.்ப்ட் கொடுத்தேன். அவ்வளவுதான்!. இதே மாதிரிதான் முன்னே ஒரு சமயம் எங்க அப்பா முன்பின் தெரியாத இடத்தில வழிபுரியாம தவிச்சுக்கிட்டிருந்தப்போ யாரோ ஒருத்தர் வந்து தனக்கு உதவி பண்ணினதா சொல்லியிருக்கார். இப்ப உங்களுக்கு நான் உதவி செய்தேன். இந்த உதவிச் சங்கிலி அறுந்திடாம இருக்க நீங்க இதேபோல வேற யாருக்காவது உதவி செய்யுங்க?” என்று சினிமா ஹீரோ மாதிரி பேசிவிட்டு ஆட்டோவை கிளப்பிக் கொண்டு பறந்து விட்டான் கண்ணன்.

டாக்ஸி நகர ஆரம்பித்த பிறகுதான் பெரியவருக்கு, தான் ஒழுங்காக ஊர் போய்ச் சேர்ந்து விடுவோம் என்ற பாதுகாப்பு உணர்வு வந்தது. உடனே பசியும் வந்தது.

அவர் டாக்ஸி டிரைவரைப் பார்த்து, “தம்பி, நான் சாப்பிட்டு நாலு மணி நேரத்துக்கு மேலே ஆகுது. இனிமே என்னால தாங்க முடியாது. உடனடியா நான் சாப்பிடலைன்னா மயக்கமே வந்திடும். அதனால் வழியில் ஓட்டல் ஏதாவது இருந்தா நிறுத்தேன்” என்றார். அதற்கு டிரைவர், “சார் இந்த வழியில ஓட்டல் ஏதும் இல்லீங்களே.... ஏழை ஜனங்க வசிக்கிற பகுதியாச்சுங்களே இது!” என்றான். டாக்ஸி மெதுவாக ஓடிக்கொண்டிருக்க, சாலை ஓரத்தில் ஒரு குடிசைக்கு வெளியே ஒரு பெண்மணி இட்லி சுட்டு விற்றுக் கொண்டிருப்பதை எதேச்சையாகப் பார்த்து விட்டார் பெரியவர். டிரைவரிடம் டாக்ஸியை நிறுத்தச் சொன்னார்.

“என்ன சார், இங்கேயா சாப்பிடப் போறீங்க?” என்று டிரைவர் முகம் சுளித்ததைக்கூடப் பொருட்படுத்தாமல் இறங்கி விறுவிறுவென்று நடந்து போனார். திருப்தியாக அந்தப் பெண்ணிடம் ஏழெட்டு இட்லி வாங்கிச் சாப்பிட்டார். பின்னர் கை கழுவிக் கொண்டு, “எவ்வளவு ஆச்சு” என்று கேட்க.... “எட்டு ரூபாய் கொடு சாமி” என்றாள் அவள். பெரியவர் தன் பர்ஸில் இருந்து ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து நீட்ட, “ஐயோ சாமி, இதுக்கு சில்லறை கொடுக்க நான் எங்க போவேன்?” என்று பதறினாள் அவள்.

அதற்கு அந்தப் பெரியவர், “நீ பாக்கி எதுவும் எனக்குத் தர வேண்டாம்மா! எனக்கு உதவி தேவைப்பட்டபோது யாரோ முன்பின் தெரியாத ஒரு புண்ணியவான் தேடிவந்து எனக்கு உதவி செய்தார். இப்பவும் பசியில உயிர் போகிறமாதிரி துடிச்சுக்கிட்டிருந்தப்போ அன்னலட்சுமியா என் எதிர்ல வந்து என். பசியைப் போக்கினே. இது இட்லிக்கான பைசா இல்லே. என் நன்றிக் கடனுக்கான அடையாளம். உன் மடியில இருக்கிற குழந்தை சளியும் இருமலுமா அவதிப்பட்டுக்கிட்டிருக்கே.... அதை ஆஸ்பத்திரியில காட்டி, மருந்து வாங்க இந்தப் பணத்தை வெச்சுக்கோ! நான் வரேன்” என்று அவளிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் பெரியவர்.

பெரியவர் பயணித்த கார் சென்ற திசையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். அவள் கடையின் முன் ‘கிரீச்’ என்ற சத்தத்துடன் ஒரு ஆட்டோ வந்து நின்றது. வந்தவன் ஆட்டோவை விட்டு இறங்கும் வரைகூட காத்திருக்காமல், “யோவ்.... குழந்தைக்கு காய்ச்சல் அடிக்குது. டாக்டர்கிட்ட போகலாம்னா காசு இல்லையேன்னு கவலைப்பட்டுட்டு இருந்தியே.... கடவுளாப் பார்த்து கண் திறந்துட்டார். யாரோ ஒரு பெரியவர் வந்து ஆயிரம் ரூபாய் கொடுத்திட்டுப் போனார். உடனே கிளம்பு. டாக்டர்கிட்ட போய் நம்ம குழந்தையைக் காட்டி மருந்து வாங்கிட்டுவரலாம்!” என்று அவள் பரபரப்பும் உற்சாகமுமாகச் சொல்ல, ஆச்சரியத்தில் உறைந்தவனாக எதிரே நின்றிருந்தான் கண்ணன்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 212

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | |
| | 20 | | 22 | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 27.03.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-212
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோர் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.210க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

வி.கார்த்திகா, 291/6A, எட்வேட் அவனியூ ஹெவலொக் வீதி, கொழும்பு - 06

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. அ. சந்தியாகோ. 34/12, அம்பிட்டியா ரோட், தென்னக்கும்புர கண்டி.
2. ஜே.தர்ஷிலா, 19, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு.
3. சுந்தரராஜ் சுபேதினி. 7ஆம் ஒழுங்கை, தெற்கிலுப்பைக்குளம், வவுனியா.
4. திருமதி. ஆர். கேதிஸ்குமார், 09, அருணகிரி வீதி, திருகோணமலை.
5. A. W.பாத்திமா ராசியா, இல: 26/2, பெரிய பள்ளிவாசல் வீதி, பதுளை.
6. திருமதி. தவம் கமலநாதன், 16/1 கோணர் வீதி, மட்டக்களப்பு.
7. திரு. M.I.M. அஸ்ரப், 489, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது - 7
8. எஸ். ஜீவா, 11-5/1, சென். லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06
9. திருமதி. பைசல் அமீனா ஜலீல், 61/1யு/1, மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
10. எஸ். மன்சூர், ஆலிம் வீதி, மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா - 03

### இடமிருந்து வலம்

1. விஜய் நடித்த திரைப்படமொன்று.
7. நட்சத்திரங்களில் ஒன்று.(குழம்பியுள்ளது)
11. பசு,எருமை போன்றவற்றின் பெண் கன்று.
15.உள்ளீடற்ற நெல் அல்லது தானியம்.
25.சனி அல்லது ஒருயுகம். (திரும்பியுள்ளது)
28.தந்தை அல்லது தந்தைவழியின் மூதாக்கள் என்று பொருள். (திரும்பியுள்ளது)
31.கூற்றுவன் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
35.குற்றம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 210- விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பு | 2 த் | 3 தி | 4 ன் | 5 ற | |
| 7 ம | 8 க | 9 ம் | | 11 ன் | 12 மா |
| 13 ர | 14 த | 15 பு | 16 ம் | | 18 மை |
| | 20 ரி | | 22 வி | 23 ஆ | |
| 25 சூ | | | 28 உ | 29 ம | 30 ல் |
| 31 னி | 32 ச | 33 கு | | 35 றை | 36 க |

### மேலிருந்து கீழ்

1. கதிரவன் என்றும் கூறலாம்.
2. கோள்களில் ஒன்று. (தலைகீழ்)
3. கனி. (குழம்பியுள்ளது)
6. புழு என்பதன் ஒத்த கருத்து. (தலைகீழ்)
11. மாலைகட்டுவதற்கு பயன்படும்.
16. பெண்கள் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
20. இராமாயணத்தில் வரும் பாத்திரமொன்று.
24. இராகங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
25. மாவட்டங்களில் ஒன்று. (தலைகீழ்)
29. சங்கீதத்தில் இது முக்கியமானது. (தலைகீழ்)

# அளவுக்கதிகமாக கோபத்தை ஏற்படுத்தும் மரபணு: அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடிப்பு

**சிலருக்குச்** சில விஷயங்களில் கோபம் பொத்துக் கொண்டு வருவதற்கு ஒருவித மரபணுதான் காரணம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.




சிலர் எதையாவது போட்டு உடைக்கிறார்கள். கண்முன் தெரியாமல் எதை வேண் மானாலும் செய்கிறார்கள். அதே விஷயத்தில் வேறு சிலர் நிதானத்தை இழக்காமல் செயல்படுகிறார்கள்.

இது ஏன் என்பது குறித்து பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸ்டீபன் மானக் என்ற டாக்டர் ஆய்வு நடத்தினார். 531 பேரிடம் கடந்த பல ஆண்டுகளாக அவர் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டார்.



இந்த ஆய்வில் அவர் சிலருக்கு மூக்கு மேல் கோபம் வருவதற்கு அவர்களது மூளை செல்களில் உள்ள மரபணுதான் காரணம் என்று கண்டு பிடித்திருக்கிறார்.

மூளை செல்களில் செரோட்டோனின் என்ற இரசாயன திரவம் உள்ளது. இந்த திரவம்தான் மரபணுவின் செயல்பாட்டில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது. இந்த மரபணு செயல்பாட்டின் மாறுதல்களுக்கு சிறு வயதில் ஏற்பட்ட அனுபவங்களும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. பெரியவர்களாக வளர்ந்ததும் இந்த மாற்றம் கோபத்தைக் கட்டுப்படுத்துவதையும் வெளிப்படுத்துவதையும் நிர்ணயிக்கிறது.



பெரும்பாலும் ஆண்களிடம்தான் இந்த மரபணு மாற்றம் காணப்படுகிறது.

ஏற்கனவே இதற்கு முன் நடத்தப்பட்ட ஆய்வுகள் எம்.ஏ.ஓ.ஏ.என்ற மரபணுதான் இந்த கோபத்துக்குக் காரணம் என்று தெரிவித்து இருந்தன.

# கல்லறை

**அந்திச்சூரியனின்** கிரணங்கள் அப்பிரதேசத்தை வாஞ்சையுடன் தழுவிக்கொண்டிருந்தது. மனித சஞ்சாரமேயற்ற அப்பிரதேசத்தை, ஆங்காங்கு காணப்பட்ட சில சுவர்ப் பகுதிகளும், அகோரமாய்; அடர்த்தியாய் வளர்ந்திருந்த புற்களும் ஆக்கிரமித்திருந்தது. பல ஆண்டுகளாக மனித நடமாட்டமின்றி அநாதையாய் இருந்த அந்த இடம், பதினைந்து நாள் திருவிழா கொண்டாடி பதினாறாம் நாள் கோயில் வளாகம் எப்படி வெறிச்சோடியிருக்குமோ அவ்விடத்தை பறைசாற்றியது. அப்படியான மயான அமைதி நிலவும் அப்பிரதேசத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு மெதுவான ஒரு காலடிச்சத்தம். அச்சத்தத்தைக் கேட்ட காற்று, என்ன நினைத்ததோ தெரியவில்லை. தன் கைகளால் அங்கே நின்ற மரங்களின் இலைகளை அதிகமாக சலசலக்கச் செய்தது. அங்கே கிடந்த மண்ணையும் வாரி எடுத்துச்சென்று அம்மனிதரின் மேல் வீசச்செய்து வரவேற்றது. வந்தவரும் என்ன நினைத்தாரோ மண் துகள்கள் தன் மேல் விழுந்ததும் அதை ஏற்றுக்கொண்டதாய் மென்னகை புரிந்தார். அம்மனிதர் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் தலையை இரு புறமும் சுற்றிச் சுற்றி எதையோ தேடினார். அங்கேயிருந்து இன்னொரு இடத்திற்குச் சென்றார். அங்கே சென்றதும் இல்லை என்பதற்காய் தலையாட்டினார். அங்கேயிருந்து இன்னொரு இடத்திற்குச் சென்றார். அங்கேயிருந்த உடைந்த சுவர்ப்பகுதியொன்றை தொட்டுப்பார்த்தார். அங்கேயும் 'இல்லை' என்பதற்காய் தலையாட்டினார். அங்கேயிருந்து இன்னொரு இடத்தை உற்று உற்றுப் பார்த்தார். ஆம் அதுதான் என்பது போல தலையாட்டி அந்த இடத்தை நோக்கி விரைந்தார். அங்கே நின்றிருந்த சுவரை சுற்றி சுற்றி வந்தார். அப்போது அவர் உள்ளத்தில் தோன்றிய இன்பம், அசோகவனத்தில் சீதையை கண்ட அனுமன் அடைந்த இன்பத்தை விட பெரியதாக இருந்தது. அவர் கண்களில் தோன்றிய பிரகாசம், ஆயிரம் சூரியன்களின் பிரகாசத்தைத் தோற்கடித்தது. அவர் அடைந்த இன்பத்தைக் கண்டால், பல நாள் தேடிய புதையலொன்றை கண்டுகொண்டார் என்றே தோன்றும். ஆனால் அவர் கண்டுகொண்டது புதையலல்ல, அவர் பிறந்து; சொந்தங்களுடன், நண்பர்களுடன் ஒன்றாக மகிழ்ந்து தன் வாநாளில் இன்பமயமான காலங்களை கழித்த தன் வீட்டையே. அல்ல...அல்ல...தன் வீடு அமைந்திருந்த இடத்தையே. பெரிய பெரிய தூண்களாலும் உறுதியான சுவர்களினாலும் அன்று முழுமையாக இருந்த அவரது இல்லம் இன்று இல்லாமல் போயிருந்தது. அப்பெரிய தூண்கள் மறைந்து போயிருந்தன. உறுதியான சுவர்கள் சிதைந்து போயிருந்தன. மீதமிருந்தது ஒரேயொரு குட்டிச்சுவர். அந்தக் குட்டிச்சுவரின் அடியிலேயே வேட்டியெங்கும் புழுதி படிய தரையிலேயே உட்கார்ந்து கொண்டார் அம்மனிதர். உட்கார்ந்தவரின் மனத்திரையில் அவ்வீட்டில் வாழ்ந்த இன்பமான நாட்கள் திரையிடப்பட்டன.

அவர் மனத்திரையில் திரையிடப்பட்ட முதற்காட்சி விசாலமான அவரது வீடு. வீட்டைச் சுற்றிலும் செழித்து வளர்ந்த மரங்கள். அதனைச் சுற்றி வளைத்து முத்தமிட்டுக் கொண்டிருக்கும் கொடிகள், நாங்களும் மரங்களை போல வளரமாட்டோமா என்று மரங்களையே அண்ணாந்து பார்த்து நிற்கும் செடிகள், அச்செடிகளையும் ஆங்காங்கு நெளியும் புழுக்களையும் கொத்தி நிற்கும் கோழிகளும், சேவல்களும், அம்மே! என்று கத்தும் ஆடுகளும் அம்மா! என்று கத்தும் மாடுகளும் என நிறைவான ஒரு கிராமத்து வீடு. அவ்வீடுதான் அவர் வாழ்ந்த சொர்க்கபூமி. சிறுவயதில் வீட்டின் முன்னால் நானும் தன்னுடைய சிநேகிதர்களும் பம்பரம் சுற்றியும் பட்டம் விட்டும் விளையாடி மகிழ்ந்து ஒன்றாக ஓடித்திரிந்து தன் சிறுபிராயத்தைக் கழித்தது அந்த வீட்டில்தான். பின் இளமைப்பருவம் அடைந்து இன்பமாக காலம் கழித்ததும் அவ்வீட்டில்தான். தான் இழுத்துக்கொள்ளும் பல பிரச்சினைகளினால் தினமும் தன் அம்மாவிடம் பேச்சுவாங்கிவிட்டு பின் அவர் கையாலேயே சாப்பிட்டுவிட்டு கட்டாந்தரையில் படுத்துருளும் சுகத்தை அவர் வேறெங்கும் பெற்றாரில்லை. இப்படி இளங்காளையாய் எந்தப் பொறுப்பும் இல்லாது சுற்றித்திரிந்தவருக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தனர். அக்கிராமத்தில் வசித்து வந்த ஒருவடைய பெண்ணை அவருக்கு மணமுடிந்து வைத்தனர். அதன் பிறகுதான் அவர் பொறுப்பென்ற ஒன்றை உணர்ந்தார். தன் மனைவியை தானே காப்பாற்ற வேண்டும் என்றும் பிற்காலத்திற்கென்று சேமித்து வைக்க வேண்டுமென்று தன் தந்தையுடன் சேர்ந்து விவசாயம் செய்ய ஆரம்பித்தார். கடுமையாக உழைத்தார். பல தோட்டங்களையும் நிலங்களையும் வாங்கினார். இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையும் ஆனார். மனைவி, குழந்தைகள், சொந்தங்கள், நண்பர்கள் என இன்பமாக வாழ்ந்து வந்தார். இன்பமாக வாழ்ந்து வந்த அவரது வாழ்க்கைக் மட்டுமல்ல இன்பமாக வாழ்ந்து வந்த பலரது வாழ்க்கைக்கு இடியாக வந்ததுதான் யுத்தம். யுத்த வெள்ளம் அப்பிரதேசத்தையே அழித்துக்கொண்டு கரைபுரண்டு ஓட ஆரம்பித்தது. அதில் அகப்பட்டுக் கொண்டவர்களுள் நல்லவர், கெட்டவர் என்ற பாகுபாடில்லை. ஆண், பெண் என்ற வேறுபாடில்லை. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற பிரிவில்லை. யுத்த வெள்ளம் ஒவ்வொருவராக காவுகொள்ளத் தொடங்கியது. உயிருக்கு அஞ்சியவர் அகதிகளாயினர். பிறந்த மண்ணை விட்டு அகலமாட்டோம் என்றவர் அழிந்து போயினர். அகதியா? அழிவா? என்ற கேள்வி மாணிக்கம்பிள்ளையையும் வந்தடைந்தது. ஆம் அதுதான் அவரது பெயர். என் மண்ணை விட்டு நான் எங்கும் போகமாட்டேன். இறந்தாலும் என் மண்ணில் இறந்து போவேன் என்று அவரது உள்ளம் உறுதி கொண்டது. இவ்வாறு உறுதிகொண்ட அவர், பால் மனம் மாறா தன் குழந்தைகளைப் பார்க்கிறார். குழந்தைகள் அவர் முகத்தைப் பார்த்து சிரிக்கின்றன. நாம் வாழ்ந்து முடித்துவிட்டோம். ஆனால் இப் பிஞ்சுக் குழந்தைகள் வாழவேண்டிய காலம் எவ்வளவு இருக்கிறது. என்னை நம்பிக்கொண்டிருக்கும் இக்குழந்தைகளை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னுடையதல்லவா? ஆனால் இம்மண்ணைவிட்டு எப்படிச் செல்வேன். தாயைப் பிரிதலும் இலகு. ஆனால் இம் மண்ணை விட்டு, இவ் வீட்டை விட்டுப் பிரிதல் இலகல்லவே. என் குழந்தைகளுக்காக நான் செல்லத்தான் வேண்டும். "புறப்படு" என்று மனைவிக்கு உத்தரவிடுகிறார். தந்தை, தாயையும் சொந்தங்களையும் அழைக்கின்றார். அவர்கள் வருவதாயில்லை. தன்னை மட்டும் போகச் சொல்லி வற்புறுத்தினார்கள். தங்களிடம் அப்போதிருந்த சிறு பணத்தொகையையும் சில நகைகளையும் கொடுத்துதவினர். அதனைப் பெற்றுக்கொண்டு மீண்டும் குழந்தைகளின் முகத்தைப் பார்க்கிறார்; புறப்படுகிறார். சொந்த வீட்டையும் மண்ணையும் உறவுகளையும் விட்டு பிரியும் போது



--நா.வத்சலா பிரியதர்ஷினி,
புத்தளம்.

மாணிக்கம்பிள்ளையின் கண்களில் ஈரம் கசிந்தது. இதயம் வலித்தது.

யுத்த அபாயம் இல்லாத ஓர் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார். இனி எப்படி வாழ்வது. ஊரிலிருந்த வீடு, காணி, விவசாயம், கால்நடை அனைத்தும் விட்டு வந்தாகிவிட்டது. கையிலிருப்பதோ கொஞ்சப்பணம். அதற்கு நிலம் வாங்குவதா? வீடு வாங்குவதா? தொழிலாரம்பிப்பதா? எதைச் செய்ய? தனக்குத் தெரிந்ததோ விவசாயம். அதைத் தவிர வேறொன்றும் அறியமாட்டார் அவர். அந்த பிரதேசத்திலோ விவசாயமில்லை. இப்படியிருக்க என்ன செய்வதென்று அறியாமல் குழம்பிப்போனார். பின் ஒரு முடிவுக்கு வந்தார். வாடகைக்கு ஒரு அறையும் சமையலறையும் கொண்ட சிறிய வீடொன்றை தேடிக்கொண்டார். சமையலுக்குத் தேவையான பொருட்களுடன் ஒரு பாயும் வாங்கிகொண்டார். ஒருவாறு தேடிக்கண்டுப்பிடித்து மளிகைசாமான் கடையொன்றில் வேலைக்குச் சேர்ந்தார். அவ்வேலையை தேடிக்கொள்ளவே அவருக்கு ஒரு கிழமை தேவைப்பட்டது.

அதிலிருந்து வரும் வருமானத்தால் ஒருவாறு வாழ்க்கை ஓடிற்று. பிள்ளைகள் பெரிதாகத் தொடங்கினர். ஆசையாய் இரு பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்திட்டார். வாழ்க்கைச்செலவு உயர்ந்தது. வாடகைப்பணம் உயர்ந்தது. வருமானம் மட்டும் உயரவில்லை. கடையில் வேலை பார்த்துக்கொண்டே அதிக வருவாய் வருகின்ற வேறு வேலை தேடினார். ஒன்றும் அகப்படவில்லை. வெளியூர்காரன் என்பதால் எவரும் வேலை கொடுக்கத் தயங்கினர். நொந்து போனார் மாணிக்கம்பிள்ளை. மனைவி கேட்டாள் "நான் வீட்ல சும்மா தானே இருக்கன். பக்கத்தில ஒரு வீட்ல வேல செய்ய ஆள் வேணும்னு கேட்டிருக்காங்களாம். நான் வேணும்னா போகட்டுமா" என்றாள். "அதெல்லாம் ஒன்றும் வேணாம். என்னால் உங்க எல்லாரையும் காப்பாத்த முடியும்" என்று தான் சொல்ல நினைத்தார். ஆனால் அதை அவரால் சொல்ல முடியவில்லை, மௌனமாக இருந்தார். மறுநாளிலிருந்து அவளும் வேலைக்குப் போக தொடங்கினாள். குடும்பக் கஷ்டம் சற்றுக் குறையத்தொடங்கியது. இப்படியிருக்கத்தான் தன்தாயும் தந்தையும் யுத்த வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டதாக ஊரிலிருந்து செய்தி வந்தது. தன் ஒரு கையை இழந்து விட்டதாய் உணர்ந்தார். அவரது வாழ்க்கையில் இன்பம் தொலைந்து போயிற்று. தன் பிள்ளைகளை வளர்க்கும் ஒரு கடமைக்காகவே அவர் உயிர் வாழ்ந்தார். தன் பிள்ளைகள் இருவரும் பெரியவர்களாகிவிட்டனர். அவ்வூரிலுள்ள ஒருவர் தன் மகனுக்கு மாணிக்கம்பிள்ளையின் மூத்த மகளைப் பெண் கேட்டு வந்தார். மாணிக்கம்பிள்ளைக்கும் பிடித்திருந்தது. திருமணம் இனிதாய் நிறைவுற்றது. மாணிக்கம்பிள்ளை சற்று ஆறுதல் பெற்றார். இன்னும் ஒரு பெண்தான் இருக்கிறாள். அவளையும் கரைசேர்த்து விட்டால் தன் கடமை முடிந்து விடும் என்று எண்ணி மனதுக்குள் வைத்திருந்தார். அதற்கிடையில் அவருக்கு பேரிடியாய் வந்தது தன் மனைவியின் இறப்பு. வீட்டு வேலைகள் செய்து ஓடாய் தேய்ந்திருந்த அவரது அன்பு மனைவியை மரணம் இலகுவில் தழுவிக்கொண்டது. தன் இன்னொரு கையையும் இழந்து விட்டதாய் உணர்ந்தார். மரணச்சடங்கு முடிந்து ஒரு வருடமும் நிறைவுபெற்றது. தனியே இருந்தாலும் தன் இளைய மகளையும் ஒருவாறு திருமணம் முடித்துவைத்தார். இப்படியே இரண்டு மூன்று வருடங்கள் சென்றன. தன் பிள்ளைகள் இரண்டும் சந்தோஷமாய் வாழ்கிறார்கள் என்ற செய்தியறிந்து நிம்மதியடைந்தார். அவர்கள் தன்னைப்போல் யுத்தமிருகத்தால் துரத்தப்பட்டு துன்பப்பட்டதை போல் துன்பப்படக்கூடாதென்று அவர் உள்ளம் பிரார்த்தனை செய்தது. கடமைகள் முடித்து தனிமைப்படுத்தப்பட்ட மாணிக்கம்பிள்ளைக்கு அவர் வாழ்ந்த மண்ணையும் வாழ்ந்த வீட்டையும் பார்க்க வேண்டும் என்ற அவா மேலோங்கியது. எப்படியும் தான் இறப்பதற்கு முன் தன் சொந்த மண்ணை ஒரு தடவையாவது மிதித்துவிட வேண்டும் என்று புறப்படச் சித்தமானார். தன் சொந்த மண்ணையும் வீட்டையும் பார்க்கப்போகிறோம் என்ற உற்சாகத்தினால் நீண்ட காலமாக மலராத அவர் முகம் மலர்ந்திற்று. இப்படிப் புறப்பட்டு வந்தவர் தான் இப்போது தன் வீடு அமைந்திருந்த இடத்தில் அமர்ந்து தன் பழைய வாழ்க்கையை சிந்தித்துப்பார்த்துக் கொண்டிருக்கும் மாணிக்கம்பிள்ளை.

தன் வாழ்க்கைச் சம்பவங்களை நினைத்து பார்த்துக் கொண்டிருந்தவர் சுயநினைவுக்கு வந்த போது அவரைச் சுற்றி இருள் கவிந்திருந்தது. அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். நட்சத்திரங்கள் கண்சிமிட்டி அவரையே பார்த்துக்கொண்டிருந்தன. அவற்றுக்கு நடுவே நிலவும் பால் மழை பொழிந்துக் கொண்டிருந்தது. உட்கார்ந்திருந்தவர் எழுந்து சற்று தூரம் நடந்து கொண்டே சென்றார். ஒவ்வோர் இடமும் அவரின் பழைய ஞாபகங்களைத் தட்டி எழுப்பின. அவ்விடங்கள் இன்று அழிந்து போயிருக்கும் அவலட்சணத்தைக் காணக்காண அவருக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. நடந்து சென்றவரின் காலில் ஏதோ தட்டுப்படவே என்னவென்று பார்ப்பதற்காய் தலையை குனிந்தார். நிலவொளியில் அது நன்றாக தெரிந்தது. சந்தேகமேயில்லை அது மனித எலும்பொன்றுதான். அவ்வெலும்பைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டேயிருந்தவருக்கு தன் தாய் தந்தையின் ஞாபகம் வந்தது. "மகனே...!" என்று தன் தாய் அழைக்கும் குரல் தொடர்ந்து தந்தையின் குரல் என்று ஏதோ கனவில் கேட்பது போல் குரல்கள் கேட்டன. திடீரென்று கேட்ட குரல்கள் நின்றன. சுற்றிலும் மயான அமைதி நிலவியது. அவரையறியாமலேயே அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. மீண்டும் தலைகுனிந்து எலும்பைப் பார்த்தார். பின் தான் நின்றுகொண்டிருக்கும் மண்ணைப் பார்த்தார். இங்கே தான் என் தாயைப் புதைத்தார்களோ? என்றெண்ணியவர் சற்று தள்ளி நின்றார். அங்கே நிற்கும் போது இங்கே தான் என் தந்தை புதைக்கப்பட்டாரோ? என்றெண்ணியவர், ஓடிச்சென்று இன்னொரு இடத்தில் நின்றுகொண்டார். இங்கே என் சொந்தங்களின் யார் புதைக்கப்பட்டிருக்கின்றார்களோ? என்றெண்ணியவர் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார். ஓடிக்கொண்டிருந்தவர் திடீரென்று ஓரிடத்தில் நின்றார். எல்லா இடமும் அவருக்கு அருவருப்பாக இருந்தது. பின் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அங்கிருந்து ஓட்டமெடுத்தார். ஓட்டமென்றால் ஓட்டம் கண்களை மூடிக்கொண்டு தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தார். இப்படி ஓடிக்கொண்டிருந்தவருக்கு "மிதிவெடி அபாயம்" என்று அங்கே எழுதப்பட்டிருப்பது எங்கே தெரியப்போகிறது. மிதிவெடியொன்றின் மேல் கால் வைத்தெடுக்க அது வெடித்ததில் அவரது கால் துண்டாக போய் விழுந்தது. கால் துண்டிக்கப்பட்டவர் அப்படியே விழ விழுந்த இடத்தில் இருந்த இன்னொரு மிதிவெடி வெடிக்க அவரது தலை வேறொரு இடத்தில் போய் விழுந்தது. இவ்வளவும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்தேறின. இரத்தமும் மண்ணும் கலந்திருந்த அவர் முகத்தில் அப்போதும் கடையிதழில் ஒரு புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. அப்புன்னகை தன் உயிர் தன் மண்ணில் பிரிந்ததை எண்ணி அவர் இன்புற்றிருக்கிறார் என்பதை பறைசாற்றியது.

# தூவானம் விடவில்லை

**இரண்டு** கிழமைகளாய், தொடர்ச்சியாகப் பெய்த மழையின் தீவிரம் சற்றுக் குறைந்திருந்தது. ஆனாலும்...மழைவிடவில்லை. வானம் இலேசாய் சிணுங்கிக்கொண்டு தான் இருந்தது. இடையிடையே, திடீரென்று பளிச்சிடும் மின்னலின் கீற்றுக்களும் இடியோசையும், ஆகாயம் எங்கும் திட்டுத்திட்டாய் அப்பிக்கிடந்த இருட்படலமும் எந்த நேரத்திலும், மீண்டும் ஓர் பெரும்மழை வரலாம் என்பதை அறிவியல்பூர்வமாய் அறிவித்துக்கொண்டிருந்தது.

ஜன்னலின் ஊடாக வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த ஆகாயத்தைப் போல, என் மனசும் இருண்டு கிடந்தது. மின்னல்களின் கீற்றுக்களாய், எனக்குள் சிந்தனைகள் உதிக்க...உதிக்க...துயரங்களின் அழுத்தம் இடிகளாய் என் நெஞ்சில் இறங்கின. என் விழிகளில்...ததும்பி வழியும் கண்ணீரை எவ்வளவு முயன்றும் என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை.

"ஊரில, தனிய இருந்து ஏன் கஷ்டப்பட வேணும். ஊரை விட்டு வரச்சொல்லி உன்னை, எத்தின தரம் கேட்டாச்சு. படிக்கிறன் படிக்கிறன் எண்டு, ஏதோ சாட்டுபோக்கு சொல்லி, நீயும் அங்கேயே இருக்கிற...உங்க எத்தினைபேர் படிப்பும் வேண்டாம், ஒண்டும் வேண்டாம் எண்டு இடையிலேயே எல்லாத்தையும் விட்டெறிஞ்சு போட்டு வந்திட்டாங்கள். உனக்கு இப்ப படிப்பும் முடிஞ்சுது. பிறகும் ஏன் அங்க இருக்கிற...கண்டறியாத மண்பற்று...உனக்கு மட்டும் தானா மண்பற்று? இப்பவும்...எங்களுக்கு உங்கட மண்ணில பற்று இருக்கு. நாட்டில பிரச்சினை இல்லாமல் இருந்திருந்தால்...நாங்களும் இப்ப ஊரில இருந்திருப்பம். என்ன செய்யுறது. எங்கட நாட்டு நிலமையும் அப்படி. இந்த முறை இடப்பெயர்வில சனங்கள் சரியா கஷ்டப்பட்டதா அறிஞ்சம். உன்னை நினைச்சு நாங்கள் எவ்வளவு கவலைப்பட்டம் எண்டு உனக்கு தெரியுமா? கெதியில கொழும்புக்கு வந்து சேருடா!...

குரல் கரகரக்க தொலைபேசியில் சின்னண்ணா பேசப் பேச ஒரு கணம் எதுவுமே பேசமுடியாமல் ஸ்தம்பித்துப் போனேன் நான்.

மறுநாள் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்திய அக்கா, பாதி அழுகையும், மீதி வார்த்தைகளுமாய் விம்மி வெடித்தாள். ஏதோ இங்கு விழுந்த ஒவ்வொரு ஷெல்லும், குண்டும் என்னைப் படுகாயப்படுத்தி விட்டதோ என ஏங்கி, பரிதவித்துப் பதறிய அக்காவின் குழந்தை உள்ளம் என்னையும் விம்மி அழ வைத்தது.

"அக்...கா...அக்...கா!...அழாதீங்க அக்கா...கூடிய கெதியில நான்...நா..ன்...இந்த ஊரைவிட்டு வந்திடுவன் அக்கா" அக்காவின் அழுகை என் மன உறுதிகளைத் தகர்த்து என்னை அப்படிச் சொல்ல வைத்தது.

அன்றிரவு ஒலித்த சித்தப்பாவின் வார்த்தைகளும் நான்...ஊரைவிட்டு வரவேண்டும் என்பதிலேயே உறுதியாக இருந்தது. பிரயாணங்களில பிரச்சினை இல்லைத் தானே! கெதியில பிரயாண அலுவலப் பார்த்து கொழும்புக்கு வந்து சேரு, திரும்பவும் அங்க பிரச்சினைகள் கூட முதல், அங்கு இருந்து நீ வந்திட வேணும். இனி நீ கொழும்புக்கு வந்த பிறகு தான் உன்னோட நான் டெலிபோன்ல பேசுவன் என்ன!...இலேசான கண்டிப்புடன் அன்புக் கட்டளையாய் சித்தப்பாவின் வார்த்தைகளும் ஒலித்து ஓய்ந்தது.

ஆக மொத்தத்தில... வெளிநாட்டிலிருந்து மாறி மாறி



திருமதி.ரூபி.ஜெயக்கண்ணன்,
மொரட்டுவ.

வந்த தொலைபேசி அழைப்புக்கள் மீண்டும் மீண்டும் என் செவிகளுக்குள் எதிரொலிக்க நாட்டின் சூழ்நிலையால் எனக்கு என்னவோ ஏதோ ஆளுகையும், சித்தப்பாவின் பேரன்பும் என் மனசை முழுமையாய் நெகிழ்த்தியிருந்தது. இறுதியாய்... இறுதியாய்... இந்த ஊரைவிட்டுப் போக நான் முடிவெடுத்தேன்.

இப்படி ஒரு முடிவை நான் எடுக்கவேண்டி வருமென்று நினைத்தே பார்க்கவில்லை. என் சொந்த மண்ணை விட்டு என்றாவது நான் போகவேண்டி வரும் என்று கனவில் கூட நான் நினைத்ததில்லை. என்ன ஆனாலும் இந்த மண்ணைவிட்டுப் போவதில்லை என்ற என் மன உறுதி, வேரறுந்த விழுதுகளாக வாடி, வதங்கிப்போன நிலையில் தாய் மண்ணை விட்டுப் போவதில்லை என்ற என் வைராக்கிய உணர்வுகள் வறண்டுபோன இந்த நிலையில்...வெதும்பி அழுவதைத் தவிர நான்...நா...ன்...என்ன செய்ய முடியும்?

இடப்பெயர்வுக்குப் பின் வீட்டினுள் தப்பிக்கிடந்த பொருட்களில் முக்கியமானவை சில என் மனக்கண் முன் வந்து போயின. இந்த தையல் மெசின் எனக்குள் அம்மாவின் ஞாபகங்களை, புதைத்து வைத்திருக்கும் மறக்க முடியாததோர் ஞாபகச் சின்னம். இதைவிட்டுவிட்டு எப்படிப் போவது?

இந்த 'ஒவிஸ் டேபிள்' பட்டப்படிப்பு வரை முகம் சுளிக்காமல் எனக்காக எத்தனை புத்தகங்களை சுமந்திருக்கிறது. பாடக்குறிப்புக்கள் தவிர எத்தனை கவிதைகள், கதைகள் இதன் முதுகில் வைத்து நான் எழுதி முடித்திருக்கிறேன். இந்த மேசையின் அருகே இருக்கும் போது ஏற்படும் ஆத்ம திருப்தி, படிக்க வேண்டும் என்ற சிந்தனை, எழுத வேண்டும் என்ற உணர்வு, வேறு எந்த மேசையருகே இருந்த போதும் எனக்குக் கிடைத்ததில்லையே!

இது மட்டுமா! இதுபோல எத்தனையோ சின்ன சின்ன பொருட்கள் கூட ஆத்மார்த்தமாய் என் உணர்வோடு கலந்து மனசுக்குள் இனிய ஞாபகங்களை மீட்டிக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் விட விலை மதிக்க முடியாத சொத்துக்கள், கட்டுக்கட்டாய் நான் பாடுபட்டு சேகரித்த புத்தகங்கள். தனியே புத்தகங்களின் நிறையே 50 கிலோவுக்கு மேலே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த நிலையில், கப்பலில் கட்டுப்படுத்தப்பட்ட அந்த 15 கிலோவில் அத்தியாவசிய தேவைகளோடு இதில் ஓரிரு புத்தகங்களை கொண்டு போவது தானே! சாத்தியமாகும். ஏனையவற்றை விட்டுவிட்டு தானே போக வேண்டும். காதற்ற ஊசியும், கூடவராது என்று என்னதான் சித்தாந்த பூர்வமாக சிந்தித்தாலும், உலகியல் வட்டத்துக்குள் பற்றுக்களையும் பாசங்களையும் அறுக்க முடியாமல் தானே பாழாய்ப்போன இந்த மனசு, அவஸ்தைப்படுகிறது.

பொங்கி வந்த துயரங்களை மனசுக்குள் புதைத்துக் கொண்டு இறுதியாய்...இறுதியாய்...ஊரைவிட்டுப் போவதாய் நான்...முடிவெடுத்ததில், பிரயாண அலுவல்களை கவனிப்பதற்காக இயக்கி வைத்த பாவையாய் செயற்படத் தொடங்கியிருந்தேன்.

தரைவழிப் பாதையோ மூடப்பட்டுவிட்டது. விமானப் பயணங்களும் நிறுத்தப்பட்டுவிட்டன. இப்போது எமது ஊருக்கும் கொழும்புக்கும் இடையிலான ஒரே பாதை கடல்வழிமார்க்கம் தான். அகால மரணம் என்றால் என்ன! அவசரசிகிச்சை என்றால் என்ன! திருமணமா? இன்றும்...வேறு வேறு அவசிய காரணங்களுக்காக ஓரிடத்தில் இருந்து மறு இடத்துக்குச் செல்ல கப்பல் தான் தஞ்சம். உரிய காலத்தில், உரிய நேரத்தில் போக முடியாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் செல்ல கப்பலை விட்டால் வேறு நாதியில்லை நமக்கு. அதனால்...கப்பலில் பயணமாவதற்காக பதிவு செய்தேன். மனசு...பாறாங்கல்லாய் கனத்துக் கிடந்தது.

இப்பொழுது... இங்கு...பாதைகளின் சீர்கேட்டால் உணவுப்பற்றாக்குறையால் மக்கள் படும் துன்பதுயரங்களைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. நியாயமான விலையிலும் பார்க்க மூன்று, நான்கு மடங்கு அதிகமாக பொருட்களின் விலையேற்றம் ஒருபுறம்...வரிசைகளில் கால்கடுக்க காத்திருந்து...காத்திருந்து...அந்த நாளினை போக்கும் பொதுமக்கள் மறுபுறம்...இன்னும் வசதிபடைத்தோர் அதிக பணத்தைக் கொடுத்து வாங்க முன்வந்த போதும் முயற்கொம்பாய், அத்தியாவசியப் பொருட்களின் தலைமறைவு இன்னோர் புறம்...ஐயோ; எமது மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? யார் போட்ட சாபமோ? அவலத்தின் விளிம்பில் அவஸ்தைப்படுவதே அவர்களின் தலைவிதியாகிப் போய்விட்டது. இனி...அந்த ஆண்டவன் தான் எம்மையெல்லாம் காப்பாற்ற வேண்டும்.

நாட்கள் சில வாரங்களாகி சிறகு முளைத்துப் பறந்தன. நான் கப்பலில் பயணமாக வேண்டிய அந்த நாளும் வந்தது. இப்போது நான்...எனது சொந்த ஊரைவிட்டு போக வேண்டிய ஒரு பிரஜை. நினைக்க நினைக்க என் ஆவி துடித்தது.

"தந்தையர் நாடென்ற போதினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே..."

என்றோ பள்ளிப்பருவத்தில் படித்த பாரதியாரின் உணர்வுபூர்வமான கவிவரிகள் என் மனசுக்குள் ஆக்ரோஷமாய் எதிரொலிக்க... என் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல இருந்தது எனக்கு.

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பது போல இன்றும் வானம் சிணுங்கிக் கொண்டு தான் இருந்தது.

எங்கள் நாட்டுப் பிரச்சினையும் இந்த தூவானம் போலத் தானே!... இடையிடையே மழை ஓய்ந்தது போல, பிரச்சினைகள் வெளிப்பார்வைக்கு ஓய்ந்தது போல் தோன்றினாலும் ஆங்காங்கே ஏதேதோ அனர்த்தங்கள் விடாது தூறும் இந்த தூவானம் போல சிணுக்கங்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாய் இங்கு பிரதிபலித்துக்கொண்டு தான் இருக்கிறது. இருண்ட அரசியல் மேகங்கள் கலைந்து என்றுதான் எங்கள் நாட்டுக்கு சுபிட்சத்தின் ஒளி தோன்றப்போகிறதோ! அன்று அன்று... இந்த.... ஊருக்கு நான் மீண்டும் திரும்பி வருவேன்.

இப்போது... சுழன்றடிக்கும் போரின் புயல் அகன்று சமாதானத் தென்றல் நம் தாய்திருநாட்டை இதமாகத் தாலாட்டும் நாள் வரும். அந்த நாளில்.... நாட்டின் அனர்த்தங்களால் இந்த ஊரைவிட்டு போனவர்களில் திரும்பி வருகின்ற முதல் பிரஜை நான். நானாகத்தான் இருப்பேன். என்றாவது ஒரு நாள்.... என் கால் தடங்கள் மீண்டும் இந்த மண்ணில் பதியும்.

ஆம்! இந்த ஊருக்கு ஒருநாள் திரும்பி வருவேன். அந்த நம்பிக்கையின் ஒளியில்தான் என் பயணம் தொடர்கிறது. இப்போதும் இங்கு... தூவானம் விடவில்லை. இது... வானிலை அறிக்கை அல்ல. எம் சூழ்நிலைகளின் குறியீடு.

இந்த ஊருக்கு ஒருநாள் திரும்பி வருவேன். இங்கு தூவானம் விடவில்லை இப்பொழுதும்...இப்பொழுதும்...

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**உலகில்** உள்ள அனைத்து உயிரினங்களும் வெவ்வேறுபட்ட இயல்பைக் கொண்ட போதிலும் மனித இனத்தின் - குணாதிசயங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி வேறு பாட்டுடன் இருப்பது வியக்கக் கூடியது. உருவத்தில் ஒரே சாயலாக இருப்பவர்கள் கூட குணத்தளவில் வேறு பட்டவர்களாகக் காணப்படுவதும் சூழ் நிலைக்கேற்ப மாற்ற மடைவதும் இதில் நோக்கத்தக்கது. இதில் விதிவிலக்காகவும் இருப்பதுண்டு என்றால் அதுதான் அவரவரின் நுண்ணறிவின் காரணமாக அமைவது.

அறம் சார்ந்த செயல்களையே செய்து கொண்டிருப்பர்களின் சிந்தனைகளும் செயல்களும் எப்பொழுதும் தூய்மையாய் இருப்பதுபோல தீய எண்ணங் கொண்டவர்களின் செயற்பாடு தீமையை ஒன்றியே நிற்கும் என்பதற்கு வள்ளுவர் கூறும் கருத்தென்னவென்று பார்ப்போமா?

*"வரைவிலா மாணிழையார் மென்தோள் புரைவிலாப்*
*பூரியர் ஆழும் அளறு."* (குறள் : 919)

முறையாக ஒருவனை மணந்து கொள்ளும் மரபினைக் கொள்ளாதவரின் தோளானது, அறிவற்ற கீழோர் ஆழ்ந்து கிடக்கும் நரகம் ஆகும்.

---

இலக்கிய நயம்

# என்னை இழந்த நாள்

**விக்கிரமனின்** அறிவுரைகள் பற்றிச் சிந்திக்கும் நிலையில் கீர்த்திவர்மன் இல்லை. ஆயினும் அவன் பிடிவாதக்காரன். எதிரி என்றாலே எரிமலையாகிவிடுந் தன்மை இயற்கையாகவே அமைந்துவிட்டதனால், அவன் இன்றைய நிலையில் எந்தச் சமாதானத்தையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதை அறிந்தது போல் காட்டிக் கொள்ளாமல் அவனை அறியாமலே பாதுகாப்பு நடவடிக்கை சம்பந்தமாக அமைச்சரை சந்தித்தாலென்ன என்ற எண்ணம் தோன்றியதும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான் விக்கிரமன்.

மரகதவல்லி தன் உப்பரிகையில் நெடுநேரமாக விக்கிரமனின் வருகைக்காகக் காத்திருந்தாள். நேரம் நடு நிசியைத் தாண்டிவிட்ட நிலையில், உடற் சோர்வுற்றபோதும் மனத்திலெழுந்த உணர்வலைகள் அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தன. அவள் தனியே மாளிகைக்குள் அடைபட்டுக் கிடந்த காலங்களில் சலனமற்றிருந்த உள்ளுணர்வுகள் இன்று தாமரை இலையில் விழுந்த நீர்த்துளி போலாகி விட்டதுதான் அவளுக்குப் பெரும் துன்பத்தைத் தந்தது.

இவைகளுக்கெல்லாம் காரணமாயிருந்தது விக்கிரமனின் காதல்தான் என்பதை நினைக்கும் போதெல்லாம், அவன் மேல் கோபம்தான் என்றாலும் விக்கிரமன் தனக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறான் என்று நினைத்தபோது அவனோடு களித்திருந்த கடந்தகால நினைவுகள் அவள் மனக்கண்ணில் தோன்றி மறைந்தன.

அன்றொருநாள் எதிர்பாராத விதமாக விக்கிரமன் மரகதவல்லியின் பள்ளியறைக்குள் புகுந்த பொழுது, அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். அந்த உறக்கத்திலும் அவள் தாமரை வதனத்தில் தோன்றி மறைகின்ற மாயாஜாலங்களின் பிரதிபலிப்புகள்தான் எந்தளவு தூக்கத்திலும்கூட அவள் உள்ளத்தில் ஓடுகின்ற இன்ப உணர்வுகளின் பிரதிபலிப்பாக நிமிடத்துக்கு நிமிடம் அவள் முகத்தில் அலையாகிப் படர்கின்ற பாவங்களையெல்லாம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றவனுக்கு அந்த உறக்கத்திலும் அவள் மெல்லச் சிணுங்கும் போது எழுந்த அந்த இதமான பாவம் ஏதோ எல்லாம் செய்யத் தொடங்கியது.

விக்கிரமன் அவள் படுத்திருந்த கட்டிலருகே முழந்தாழிட்டு அமர்ந்து, ஓசைப்படாமல் குனிந்து அவள் செவ்விதழ்களில் தன் உதட்டைப் பொருத்தினான். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த போதிலும் தன் பெண்மையைக் காத்துக் கொள்ளும் முயற்சியாக திடீரெனக் கண் விழித்தவள், அவன் முகத்தைத் தள்ளிவிட்டு கட்டிலின் ஓரத்துக்கு ஒதுங்கிக் கொண்டாள். மறுவினாடியே மலராக இருந்த அவள் முகம் பாறையாக மாறியது. கண்கள் தீப்பொறிகளை உமிழ்ந்தன. இவையெல்லாம் கண் இமைக்கும் நேரத்துக்குள் நிகழ்ந்து முடிந்த நிகழ்வுதான். விக்கிரமனின் முகத்தைக் கண்ட கனல் கக்கிய கண்கள் காதலைப் பொழிந்தது. கரும்பாறை போல இருந்த முகம் கனியாக மாறத் தொடங்கியது. இவைகளையெல்லாம் கவனித்த விக்கிரமனுக்கு சிரிப்புத்தான் வந்தது. ஆனாலும் அதை வெளிப்படுத்தாது "மரகதம் பயந்து விட்டாயா?" என்றான் பரிகாசம் கலந்த புன்னகையோடு. "என்ன துணிவிருந்தால் இப்படி ஒரு கன்னிப் பெண்ணின் பள்ளியறையில் புகுந்து அவளை முத்தமிட முயல்வீர். யார் நீர்...? என்றவள் "பொய்யானதொரு கோபத்தை வரவழைத்துக் கொண்டு போங்கள், இப்படியா பயமுறுத்துவது" என்று சிணுங்கினாள். ஏன் இளவரசியாரே நீங்கள் பயப்படவேண்டும்? கோட்டையைச் சுற்றி காவலர்கள் இருக்க, இரும்பாலான கதவுகள் தாழிடப்பட்டிருக்கும்போது பயம் என்று சொல்கிறீர்களே. ஆச்சரியமாயில்லை? "ஆயிரமாயிரம் காவலர்கள் இருந்தாலும், அவர் மட்டும் இல்லாத காவல் யாருக்கு வேண்டுமாம்?" அவரா? யாரவர்? ஈ, எறும்புகூட உட்புக முடியாத அழகுக் கோட்டைக்கு அந்நியரா? இது அரச பரம்பரைக்கே இழுக்காகி விடுமே! ஆமாம், யாரந்தக் கந்தருபன்? யான் அறியலாமா?" "என்ன கேள்வி இது? இந்த அபலையின் இதயக் கோவிலில் குடிகொண்டிருக்கும் தெய்வத்தின் திருவுருவத்தைத் தினந்தினம் கண்டு களிக்க வேண்டுமென்று தானே

**தருவது**
**கற்பகன்**

துடித்துக் கொண்டிருக்கிறேன். "ஆனால்", "ஆனால் என்ன?" இது விக்கிரமனின் கேள்வி. தொடர்ந்தாள் மரகதவல்லி. "தனிமை என்னும் தடாகத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த தாமரை மலராயிருந்த என்னை வண்டாக வட்டமிட்டு என்னை இன்பக் கடலில் ஆழ்த்திய அந்த எழில் உருவம் என்னை விட்டுப் பிரியும் போதெல்லாம் என் இதயத் துடிப்பே நிலைகுலைந்து விடுமே. ஆனால் "மீண்டும் என்ன ஆனால்" "அந்த கல் நெஞ்சுக் காரருக்கு மட்டும் என்னைப் பற்றிய கவலையே இருப்பதில்லை" என்று அவள் கூறியபோது "அவர் உன்னைத் தேடிவந்து விட்டால்?" அவர் மடியில் நான் குழந்தையாகி விடுவேன்" என்று அவள் கூறும்போதே, விக்கிரமன் மெல்ல எழுந்து மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு கேட்டான் "எப்படி?", இப்படித்தான் என்றவள்,



மஞ்சத்தின் ஓரத்திலிருந்து புரண்டு அவன் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டாள். விக்கிரமன் குனிந்து அவள் செம்பவள இதழில் முத்தமழை பொழிந்தான்.

மரகதவல்லி அவன் கழுத்தைத் தன் இரு கைகளாலும் தன்பக்கம் இழுத்தெடுத்தாள். நிமிடங்கள் மணிக்கணக்காகின. இரு நெஞ்சங்களும் இன்பப் பரவசத்தின் எல்லையை நோக்கி நகர்ந்தன. மரகதவல்லியின் தங்கத்தை ஒத்த மேனியைத் தழுவியிருந்த மெல்லிய பட்டாடைகள் ஒவ்வொன்றாக மஞ்சத்திலிருந்து நழுவிக் கீழே விழுந்தன. அவனது வேண்டுகோள் எதையும் அவள் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. அவனிடம் தன்னை முழுதாக அவள் தன்னை ஒப்படைக்கத் தயாரானாள். தன்னையே கட்டுப்படுத்த முடியாத நிலையில் அவள், இடி இடித்து மழை பொழிந்து எல்லாம் நின்றாகி விட்டது.

காதல் தீயில் கருகிக் கிடந்த இரு உடல்களில் இலேசான அசைவுகள் மட்டும் இன்னும் உயிர் பிரியவில்லை என்பதை உறுதி செய்து கொண்டிருந்தது. உயிர்கள்தான் ஒன்றாகி விட்டனவே. இனி ஏது பிரிவு!

***"காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்***
***யாமத்தும் யானே உளேன்."***

குறள் : 1167

---

## சிந்தியா பதில்கள்

**✍ யாழ். ஆயரின் குறிகாட்டுவான் - மன்னார் ஊடான படகுச் சேவை வேண்டுகோள் நடைமுறைக்குச் சாத்தியமானதா?**

*- எஸ்.டேவிற், தலைமன்னார்.*

யாழ். மக்களுக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டியிருக்கின்ற அவசியத்தை ஆயரின் வேண்டுகோள் வெளிப்படுத்தியிருக்கிறது. இது புலிகளுக்கு எதிரானது, அரசுக்கு வாய்ப்பானது என்று தப்புக்கணக்குப் பார்க்கப்படுவதற்கான நேரம் இல்லை. மக்களை நேசிக்கின்றவர்களின் ஒத்துழைப்பு இதற்குக் கிடைத்தே ஆகவேண்டும். இதில் புலிகளும் தமது நல்லெண்ணத்தைக் காட்டினால் பாதுகாப்பு அச்சுறுத்தலின்றி மக்கள் பயணிக்கலாம். இதில் புலிகளின் நிலைப்பாடு என்ன? பூனைக்கு மணிகட்டவே ஆள் இல்லை. இதில் புலிக்கு யார் மணி கட்டுவது.

**✍ தென் ஆசியாவிலிருக்கும் ஊடகவியலாளர்கள் துரதிர்ஷ்டவசமாக ஏதோ ஒருபக்கம் சார்ந்து இயங்குகிறார்கள் என்று கூறப்பட்டிருப்பது பற்றி சிந்தியாவின் கருத்து என்ன?**

*- எம்.எம்.இப்திகார், தெமடகொட.*

ஊடகங்களின் ஸ்தாபகர்கள் பெரும்பாலும் வியாபாரம், அரசியல் இவை இரண்டையும் முதன்மைப்படுத்தியே தொழிலாகக் கருதிச் செய்கின்றனர். ஊடகவியலாளர்கள் எவ்வளவு சுயாதீனமாக இருந்தாலும் ஸ்தாபிப்பின் நோக்கமே பிரதானமாக வெளிப்படும். சில நேரம் வெளிப்படையாகவும், சில நேரம் மறைமுகமாகவும் இது இருக்கும். சுயாதீனமாகக் கருத்துச் சொல்பவர்களை, எதிரிகளாகக் கருதும் துர்ப்பாக்கியமான சூழல் முதலில் மாற்றமடைய வேண்டும்.

இதற்கெல்லாம் முதலில் பக்கச்சார்பாக என்று கருத்துச் சொன்னவர்கள் சரியானவர்கள்தானா என்பதை சுயவிமர்சனம் செய்யவேண்டும்.

**✍ ஓரிரண்டு வருடங்களுக்குள் புலிகளை முற்றாக ஒழித்து விடலாம் என்று பாதுகாப்புச் செயலர் கூறியிருப்பது சாத்தியமா?**

*- எம்.காண்டீபன், மட்டக்களப்பு.*

கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டதை விடவும் பெறப்பட்டிருக்கும் இலகுவான வெற்றிகள், ஒருவேளை இவ்வாறு நினைக்கச் செய்திருக்கலாம். ஆனால் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாக அழிப்பது என்பது இவர் சொல்லும் காலக்கெடுவுக்குள் நடக்கும் என்று நம்ப முடியவில்லை.

**✍ பதவி பறிக்கப்பட்ட அமைச்சர்களால் அரசாங்கத்துக்கு அவப்பெயர் ஏற்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. அவர்களின் நோக்கம் எதுவாக இருக்கும்.**

*- எஸ்.கனகசபை, கிருலப்பனை.*

சுகபோகம் பறிக்கப்பட்டுவிட்டதன் விளைவுதான் அது. மீண்டும் அது நிபந்தனைகள் இல்லாமல் கிடைக்குமாக இருந்தால் அவதூறு கூறும் அதே வாயால் புகழுரைகள் கூறவும் முடியும். கூடவே இருந்தபோது மற்றவர்களைப் பற்றிக் குறை பேசியவர்கள், தள்ளிப் போய் விட்டால் நம்மைப் பற்றியும் இப்படிப் பேசுவார்கள் என்ற உண்மையை ஜனாதிபதிக்கு புரிந்துணர்த்திய நல்ல உதாரணங்கள் இவை.

**✍ சிந்தியா, எனது நண்பர்களுக்கு கடன் கொடுத்து திரும்பப் பெற முடியவில்லை. சாதகமாக ஏதாவது ஐடியா தர முடியுமா?**

*- கோ.மாதவன், வெள்ளவத்தை.*

கடன் கொடுத்துப்பார்த்து பின்பு நண்பர்களாக இருக்கத் தகுதியானவர்களை எதிர்காலத்திலாவது ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நல்ல நண்பர்கள் இப்படிக் கேள்வி கேட்கும்வரை திருப்பித்தராமல் இருக்க மாட்டார்கள்.

**✍ ஒரு பக்கம் அரசாங்கம் மக்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்போது புலிகள் மின்கம்பங்களைக் குண்டு வைத்துத் தகர்ப்பது எதைக் காட்டுகிறது?**

*- செந்தூரன், வத்தளை.*

மக்களுக்கு முன்னால் இறுதியாக இருப்பது இரண்டு பாதைகள். ஒன்று ஆக்கத்திற்கானது, மற்றையது அழிவுக்கானது. இதில் மக்களின் தெரிவு எது என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

**✍ இலங்கைக்கும் - அமெரிக்காவுக்கும் இடையிலான ஒப்பந்தம் வேண்டுமென்றே பூதாகரமானதாகக் காட்டப்படுகிறதா அல்லது அதற்குள் ஏதும் பூதம் இருக்கிறதா?**

*- எம்.கோகுலன், நுவரெலியா.*

வேண்டுமென்றுதான் பூதாகரமாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்தியா மீதான அக்கறைகள்கூட தூசு தட்டி மேல் எழுப்பப்படுகிறது. ஒருவரைப் புதைக்க இன்னொருவரைக்கொண்டு குழி வெட்டும் தந்திரம்தான் இது.

**✍ சிந்தியா, எனக்கு அதிர்ஷ்டலாபச் சீட்டில் ஒரு கோடி ரூபா கிடைப்பதாக கனவு கண்டேன். அதிகாலைக் கனவு என்பதால் பலிக்குமா?**

*- எஸ்.கோகிலா, திருமலை.*

கனவுகள் பலிக்குமா என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. கனவுகளிலும் சாத்திரங்களிலும், எமக்கு வாய்ப்பான விடயங்களை மட்டுமே விரும்புகிறோம். அது நடக்க வேண்டும் என்றும் நம்புகிறோம். அதே எதிர்மறையாக இருந்தால் வெளியில் சொல்லாமலே மறைத்து விடுகிறோம். அதிர்ஷ்டம் அடிக்கும் என்று இருந்து விடாதீர்கள். முயற்சி செய்யுங்கள், அதிர்ஷ்டங்களை உங்கள் காலடியில் கொண்டு வருவதற்கு கனவு மெய்ப்பட்டால், எல்லோரும் தூக்கத்தையே முழுநேர வேலையாகச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

**✍ பாகிஸ்தான் அணி முதல் சுற்றிலேயே வெளியேற்றப்பட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*- கு.சிறீகாந்த், கல்லாறு.*

ஒன்பதாவது உலகக் கிண்ணத் தொடரில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும், ஆச்சரியமாகவும், அதிர்ச்சியுமாகவும் இருக்கிறது. இதில் பாகிஸ்தான் அணியின் வெளியேற்றம், இந்தியாவின் பங்களாதேஷுடனான தோல்வி, பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளரின் மரணம், தென் ஆபிரிக்க வீரர் கிப்ஸின் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்கள், இந்தியாவின் 413 ஓட்டங்கள் இப்படிச் சாதனைகளும், சாதனை முறியடிப்புகளுமாக முதல் சுற்று முடிவதற்குள் நடந்த ஒவ்வொரு சம்பவமும் புதுமையானவை. இலங்கை அணி இரண்டாம் சுற்றுக்குப் போகும் நிலையில் இந்திய அணியின் இரண்டாம் கட்டப் பிரவேசம், இந்த முதல் சுற்றின் எதிர்பார்ப்புக்குரியதாக மாறியிருக்கிறது.



சிபி – நிலா
லீ

இரண்டாம் துடுப்பாட்டக்காரர்களின் விளையாட்டை அதிகாலை வரை விழித்திருந்து பார்க்கும் வாய்ப்பு இல்லை. அவர்கள் சுறுசுறுப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் நாம் சுயம் மறந்து தூங்கிக் கொண்டிருக்கிறோம்.

**✍ சிந்தியா அதென்ன " லீ "**

*- பா.கௌரி, வெள்ளவத்தை.*

"தீ", "ஸ்ரீ", "ஈ", "ஜி" வரிசையில் இப்போது "லீ" சத்தியராஜ் லொள்ளுச் சக்கரவர்த்தி என்பதால் மகனையும் அதே வகையரா என்று நினைத்து விட்டவர்களுக்கு, சிபியின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டும் முயற்சி சத்தியராஜ் இயக்கிய முதல் படம். அதுவும் மகனுக்காக "லீ" சிபியின் மிரட்டல், நிலாவின் கலக்கல். ஒரு தடவை பார்க்கலாம்.


**✍ சிந்தியா, காத்தான்குடி முஸ்லிம்கள் தமிழ் மக்கள் மீது காட்டிய அன்புக்கு நாம் என்ன கைமாறு செய்யப் போகிறோம்?**

*- வீ.நித்தியகலா, கெக்கிராவ.*

அவர்கள் செய்த மனிதாபிமான உதவியை இவ்வளவுதான் என்று அளவிட்டுப் பிரதி உபகாரம் செய்ய முடியாது. காத்தான்குடி பள்ளிவாசலுக்குள் புகுந்து தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது புரியப்பட்ட படுகொலைகளை இப்போது நினைத்தாலும் நெஞ்சு வலிக்கும். அந்தக் கசப்பான அனுபவத்தைத் தாங்கிக் கொண்ட அந்த மக்களை எப்படிப் பாராட்டினாலும் தகும். வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் வாழ விட்டாலே போதும். இதற்கும் மேலதிகமாக என்ன செய்ய வேண்டுமென்றால், கிழக்கில் வாழும் முஸ்லிம்களிடம் கப்பம் கோருவதையும், அவர்களின் வயல் நிலங்களை ஆக்கிரமிப்பதையும், கால்நடைகளை அபகரிப்பதையும் நிறுத்தி, அவர்களை அவர்கள் விருப்பத்திற்கு வாழ விட்டாலே போதும்.

# சுதந்திரக்கட்சியின் அதிகாரப்பகிர்வு யோசனைகளில்
# காத்திரமான திட்டங்கள் முன்வைக்கப்படும்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு கூட்டத்திற்கு சமர்ப்பிக்கவிருக்கும் யோசனைகளில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் தெரிவிக் கப்பட்ட யோசனைகளும் உள்ளடக் கப்படும் என்றும் கட்சி மத்திய கமிட்டியின் பேச்சாளர் ஒருவர் கூறினார். 1951ஆம் ஆண்டு கட்சியின் ஸ்தாபகக் கூட்டத்தில் சிங்களத்தைப் போல் தமிழுக்கும் அரச கரும அந்தஸ்து வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் காலவோட்டத்தில் சில சக்திகளின் நெருக்குதல் காரணமாக சிங்களம் மட்டும் சட்டம் போன்ற கொள்கைகளை அமுல்படுத்த வேண்டியேற்பட்டது. அதன் விளைவுகளையே இன்று கொடூர யுத்தத்தின் போர்வையில் துயரங்களைச் சந்திக்கின்றோம். வரலாறு விட்டுச் சென்ற தவறுகளுக்காக எமது நாட்டின் தேசிய இனங்கள் அடிபட்டுக்கொண்டிருக்க முடியாது.



இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் தொடர்பாக சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி அண்மையில் கூடி ஆராய்ந்தபோது எடுக்கப்பட்ட படம்.

மலையகத் தமிழ் மக்கள், முஸ்லிம்கள், வடக்கு கிழக்கு மக்கள் ஆகிய அனைத்து இனக் குழுமங்களினதும் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய வகையிலேயே சுதந்திரக் கட்சியின் யோசனைகள் சமர்ப்பிக்கப்படும். சோல்பரி அரசியல் யாப்பு சிறுபான்மையினருக்கு வழங்கிய பாதுகாப்பை மீண்டும் உள்ளடக்குவது, பாராளுமன்றத்திற்கு கூடிய அதிகாரங்களை வழங்குவது, இரண் டாவது சபையொன்றினை அமைப்பது, பெண்களுக்கு அரசியல் அதிகாரத்தில் கூடுதல் இடங்களை ஒதுக்குவது போன்றவற்றிற்கு முக்கிய இடமளிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். மாகாண மட்டத்தில் கல்வி, மொழி, காணி, நீதித்துறை ஆகியவற்றிற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படுமென்றும் தெரிவித்த அவர், தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக் கமிட்டியின் முக்கிய சிபார்சுகளை சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் சொன்னார்.

கனடாவில் பிரெஞ்சு மொழி அதிகமாகக் கொண்ட கியூபெக் மாநில மக்கள் அண்மையில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில், கனடாவிலிருந்து பிரிந்து செல்வதற்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். 1700ஆம் ஆண்டுகளிலிருந்து பிரான்ஸ் மற்றும் ஆங்கிலேயரின் படையெடுப்பிற்கு உள்ளாகிய கனடாவில் இனப்பிரச்சினையை அற்புதமாகக் கையாண்டிருக்கிறார்கள். இதேபோன்றுதான் வட அயர்லாந்துப் பிரச்சினையைக் கையாள்வதில் முன்னேற்றங்கள் எட்டப்பட்டிருந் தாலும் பிரச்சினை பூரணமாக தீர்த்து வைக்கப்படவில்லை. எமது சிறிய நாட்டில் பிரச்சினைகளைக்கையாள்வது இலகுவானது. பிரதமர் இரட்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான அமைச்சரவைக் குழு காத்திரமான யோசனைகளை முன்னெடுக்குமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையில் ஐ.தே.க. கட்சியின் மாற்றுக் குழுவும் தனது யோசனைகளைச் சமர்ப்பிக்கவிருப்பதாக அக் குழுவின் பேச்சாளர் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஐ.தே.க. மாற்றுக் குழுவிற்கு இடமளிக்கப்படவில்லையென்ற போதிலும் எமது யோசனைகளை அனுப்பி வைக்க எண்ணியுள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

## கடற்பரப்பில் கூட்டு ரோந்து இலங்கை ~ இந்தியத் தரப்புகள் ஆராய்வு

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொண்டலீஷாரைசைச் சந்தித்து விட்டு புதுடில்லி வந்து சேர்ந்த வெளிவிவ கார அமைச்சர் ரோகிதபோகொல்லாகம புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனி உட்பட பல இந்திய உயர்மட்டத் தலைவர்களையும் அதிகாரிகளையும் அமைச்சர் போகொல்லாகம சந்தித்துப் பேசியிருந்தார். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள் கடத்த எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுப்பதற்கு இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அமைச்சர் போகொல்லாகம நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். இதேவேளை, இரு நாடுகளுமே புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்வதால், ஆயுதக் கப்பல்களை மூழ்கடிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினாலும் காத்திரமான நடவடிக்கைகள் · எடுக்க முடிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுதக் கடத்தல் அச்சுறுத்தல்களை இரு நாடுகளுமே எதிர்கொள்வதால், கடற்பரப்பில் இரு நாடுகளும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவது பற்றியும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கின்றது. இலங்கை - இந்தியத் தரப்பினர் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்கள் பற்றியும் தனித்தனியான ரோந்து நடவடிக்கைகளை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்பட்டதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

## மலையக ஆசிரியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி

பெருந்தோட்டத் தமிழ் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கு இந்தியாவில் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியர்கள் 20பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் இந்திய காந்தி கிராமம் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் பயிற்சியை ஆரம்பிக்கின்றனர்.

## இலங்கையில் வேலை வாய்ப்பின்மைக்கு உலக வங்கி கூறும் காரணம்

எல்லைப்படுத்தப்பட்ட கல்விமுறை மற்றும் பயிற்சி அமைப்பு ஆகியனவே இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் தொழில் வாய்ப்பின்மைக்குக் காரணம் என உலக வங்கியின் பிந்திய ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுவாக ஏனைய மட்டத்திலான கல்வித்தகுதி உடையவர்களை விட கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மற்றும் உயர்தர கல்வித்தகுதியை கொண்டிருக்கின்ற இளைஞர்களே அதிகளவில் தொழிலின்றி இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் வேலையற்றவர்களில் 11.5 சதவீதமானோர் கல்வி பொதுத்தராதர சாதாரணதர தகுதியுடையவர்களாகவும் 13.8 சதவீதமானோர் உயர்தர கல்வித்தகுதியுடைய இளைஞர்களாகவும் இருக்கின்றனர்.

குறைந்த கல்வித்தகைமையுடைய இளைஞர்கள் அதிக வேதனத்துடன் தொழிலை எதிர்பார்க்கின்றமையினாலேயே இந்த நிலை தோன்றியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. இது தவிர இலங்கையின் தனியார் நிறுவனங்கள் கொண்டிருக்கின்ற 'டொமினேசன் ஒப் எம்ப்ளோய்மெண்ட் ஒப் வேக்மென்' எனப்படும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில் வழங்குதலும் இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மைக்கு மற்றுமொரு பிரதான காரணம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ். மக்களின் ஆதங்கம்

சித்திரை புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ்.குடா நாட்டுக்கு இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்களை எடுத்து வர அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் எடுத்து வரும் முயற்சியை யாழ். மக்கள் வரவேற்றுள்ளனர். ஆனால் இவை வெறும் வாய்ச் சொல்லாகவும் ஊடக அறிக்கைகளாகவும் இருக்கக் கூடாது என்று கூறும் அந்த மக்கள், கொள்ளை இலாபமடிக்கும் பதுக்கல் பேர்வழிகளையும் ஊழல் பெருச்சாளிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் யாழ். மக்களுக்குப் பயன் எதுவும் கிட்டப் போவதில்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மலையகத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை


மலையகத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பான ஒப்பந்தம் தொடர்பான மேல் முறையீட்டு நீதிமன்ற விசாரணை விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்த இந்த மனுத் தொடர்பான எதிர் மனுதாரர்களின் எழுத்து மூல சமர்ப்பணங்களை நீதிமன்றம் கோரியிருக்கிறது. ஒரே தொகையே வேதனமாக வழங்கப்பட வேண்டுமென்றும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பாகவும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தாகிச் சில மாதங்கள் கழிந்த பின்னரே இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் பின்னர்தான் வேதன உயர்வு தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

## ஜெயானந்தமூர்த்தி எம்.பி. மீண்டும் நாடு திரும்பினார்

மட்டு. மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஜெயானந்தமூர்த்தி கடந்த வாரம் நாடு திரும்பியிருக்கிறார். கடந்த வருடம் மேற்கு நாடுகளுக்குச் சென்ற இவர் நவம்பர் மாதம் கொழும்பு திரும்பியிருந்தார். பாராளுமன்றக் கூட்டத்தில் பங்கு பற்றிய பின்னர் மீண்டும் வெளிநாடு சென்ற இவர், தற்போது இலங்கை திரும்பியிருக்கிறார். சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஏற்கனவே சுற்றுப்பயணம் செய்த இவர், கடந்த நவம்பரில் நாடு திரும்பி மீண்டும் அதே நாடுகளுக்கு சென்றிருக்கின்றார். கிழக்கு மாகாண மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து அவலங்களைச் சந்திக்கும் இந்த நிலையிலும் அம் மக்களின் நிலை குறித்து ஆராய்வதற்காக அவர் இம்முறையும் அங்கு செல்லப்போவதில்லை என்று தெரிய வருகின்றது. இந்த அகதிகளின் நிலை குறித்து பாராளுமன்றத்தில் பேசிய பின்னர் மீண்டும் அவர் லண்டன் செல்லத் திட்டமிட்டிருப்பதாக தெரிய வருகிறது. அகதி மக்களின் பாதுகாப்புக் குறித்து அக்கறைப்படாமல் மேற்கு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்வதிலேயே ஜெயானந்தமூர்த்தி அக்கறை செலுத்துகின்றார் என்று கிழக்கிலங்கை தமிழ் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

## பிரிட்டிஷ் பிரதமரின் கருத்துக்களை விமர்சிக்கும் தமிழ், முஸ்லிம் தரப்புகள்

அரசும் புலிகளும் 2002ஆம் ஆண்டு செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சரிவரக் கடைப்பிடிப்பதன் மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்குக் காத்திரமான தீர்வைக் காணமுடியும் என்று ரொனி பிளேயர் தெரிவித்த கருத்துப் பல முனைகளில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், பிரிட்டிஷ் பிரதமர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மூன்றாந்தரப்பாக முஸ்லிம்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற குற்றச் சாட்டு முஸ்லிம்கள் மத்தியிலிருந்து எழுந்துள்ளது. இதைப்போன்று மாற்றுத் தமிழ் இயக்கங்களை அழித்தொழித்து இன்றும் தமிழீழமே தமது தாரக மந்திரமென்று கூறும் புலிகள், பேச்சுவார்த்தைக்குத் திரும்புவார்களா என்பது சந்தேகமே என்று தமிழர்கள் தரப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பியிருக்கின்றது. யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டிருந்த போது தேவையற்ற காரணங்களைக் கூறி பேச்சுவார்த்தை மேசைகளை விட்டு ஓடியவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவார்களா என்பது சந்தேகமே என்று இவர்கள் தெரிவிக்கின்றனர்.



சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு யுத்த நிறுத்தம் கட்டாயமான முன் நிபந்தனையாக இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. மோதல்கள் நடைபெறும் நாடுகளில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே சமாதானப் பேச்சுக்கள் நடாத்தப்பட்ட பல முன் உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் நெகிழ்ச்சித் தன்மையோடும், தீர்வு காணப்பட வேண்டுமென்ற அர்ப்பண சிந்தையோடும் செயற்படத் தவறும் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புமா என்பது சந்தேகமே. அதிலும் பிரபாகரன் தமிழீழ யுத்த பிரகடனத்தை விடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் சமாதான வழிமுறையை நாடப்போவதில்லையென்பதும் நிச்சயமே. இன்னும் சில வாரங்களுக்குள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டு இறுதி யோசனைகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இவை பற்றி இறுதி அங்கீகாரம் கிடைத்ததும் அவை புலிகள் இயக்கத்திற்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. இதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகப் பயன்படுத்த விரும்பினால், அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரமுடியும். அரசியல் தீர்விற்கு புலிகள் தெரிவிக்கும் கருத்துக்களையும் உள்வாங்கி அரசியல் யாப்பில் மாற்றங்களையும் மேற்கொள்ள முடியும். ஆனால் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வு காண புலிகள் இயக்கம் முன்வருமா என்பது சந்தேகமே என்றும் தமிழர் தரப்புகளிலிருந்து விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## குறிகாட்டுவான் – தலைமன்னார் பயண ஏற்பாடுகளுக்கு புலிகள் இடைஞ்சல்!

யாழ். குடா நாட்டுக்கும் பெருநிலப்பரப்பிற்குமிடையிலான போக்குவரத்துத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு குறிகாட்டுவான் - தலைமன்னார் கடல் வழிப்பயணத்தை ஆரம்பிக்குமாறு யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் அரசுக்கு விடுத்த கோரிக்கைக்கு பாதுகாப்புத் தரப்பு தயக்கம் காட்டுவதாக நம்பகமாகத் தெரியவருகின்றது. இக்கடல் வழிப் பயணத்தால் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக பாதுகாப்புத் தரப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது. முகமாலை முன்னரங்கப் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து கடந்த ஆகஸ்ட் மாதம் ஏ-9 பாதை மூடப்பட்டதாகவும் ஒரு தடவையாவது அப்பாதை வழியாக யாழ். குடாவுக்குப் பொருட்களை எடுத்துச் செல்ல அரசு விடுத்த கோரிக்கையை புலிகள் நிராகரித்ததையும் பாதுகாப்புத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையைத் திறக்க எடுக்கப்பட்ட முயற்சிக்கும் புலிகள் அனுமதியளிக்க மறுத்தமையும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

## மனித உரிமைகளைப் பேண அரசின் மற்றொரு நடவடிக்கை!

ஆட்கடத்தல்கள், காணாமல் போவோர் பற்றிய சம்பவங்களைக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. சர்வதேச மட்டத்தில் இப் பிரச்சினை பலத்தக் கண்டனங்களுக்குள்ளாகியிருக்கும் நிலையில், இலங்கையில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற யோசனையும் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றினால் இப் பிரச்சினையைக் கையாள முடியுமென்று தெரிவித்திருக்கிறது அரசாங்கம். பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, இது தொடர்பாக நாடு பூராவிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தியிருப்பதோடு, விசேடப் பொலிஸ் குழு ஒன்றினையும் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்கில் நிறுவியுள்ளார்.

# அடால்ஃப் ஹிட்லர்


**(கி.பி. 1889 ~ 1945)**

## உலகை வியக்க வைத்தவர்கள்

**இந்த** நூலில் வேண்டா வெறுப்புடன்தான் அடால்ஃப் ஹிட்லரைச் சேர்த்தேன் என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும். அவருடைய செல்வாக்கு முற்றிலும் கேடு விளைவிப்பதாகவே இருந்தது. சுமார் 3.5 கோடி மக்களுக்கு மரணத்தை விளைவித்தவர் என்ற ஒரே காரணத்தால் மட்டுமே முக்கியத்துவம் பெற்றுள்ள ஹிட்லரைப் பெருமைப் படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. எனினும், மிகப் பெருமளவு எண்ணிக்கையிலான மக்களின் வாழ்க்கையில் கடும் பாதிப்பை ஹிட்லர் ஏற்படுத்தினார் என்ற உண்மையை யாரும் மறுக்க இயலாது.

ஆஸ்திரியாவிலுள்ள பிரானாவ் என்ற நகரில் 1889 ஆம் ஆண்டில் அடால்ஃப் ஹிட்லர் பிறந்தார். இளமையில் ஓர் ஓவியராக முயன்று தோல்வி கண்டார். இந்த இளமைப் பருவத்தில் தான் எப்போதோ இவர் ஒரு தீவிர ஜெர்மன் தேசியவாதியாக மாறினார். முதல் உலகப் போரின்போது இவர் ஜெர்மன் இராணுவத்தில் பணியாற்றி காயமடைந்து, இருமுறை வீரச் செயலுக்கான விருதுகளைப் பெற்றார்.

முதல் உலகப் போரில் ஜெர்மனி தோற்றது கண்டு ஹிட்லர் அதிர்ச்சியும்,




ஆத்திரமும் அடைந்தார். 1819ஆம் ஆண்டில், தமது 30ஆம் வயதில், முனிக்கில் ஒரு குட்டி வலதுசாரிக் கட்சியில் சேர்ந்தார். இக்கட்சி தனது பெயரை விரைவிலேயே "தேசியச் சமதரும ஜெர்மன் தொழிலாளர் கட்சி" (National Socialist German Worker 's Party) என்று மாற்றிக் கொண்டது. இக்கட்சியைச் சுருக்கமாக "நாஜிக் கட்சி" என்று அழைத்தனர். இரண்டு ஆண்டுகளில் ஹிட்லர் இக்கட்சியில் எதிர்ப்பில்லாத தலைவர் (Fuehrer) ஆனார்.

ஹிட்லரின் தலைமையில் நாஜிக் கட்சி மிக விரைவாக வலுவடைந்தது. 1923ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இக்கட்சி அரசைக் கவிழ்க்க முயன்றது. இந்த முயற்சியை "முனீக் பீர் மண்டபப் புரட்சி" (Munich Beer Hall Putsch) என்று அழைப்பர். ஆனால், இப்புரட்சி தோல்வியடைந்தது. ஹிட்லர் கைது செய்யப்பட்டு, அரசத் துரோகக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டார். எனினும், ஓராண்டுச் சிறைத் தண்டனை அனுபவித்த பிறகு ஹிட்லர் விடுதலையானார்.

1928ஆம் ஆண்டில் நாஜிக் கட்சி இன்னும் ஒரு சிறிய கட்சியாகவே இருந்தது. அப்போது ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தம் (Great Depression) ஜெர்மனியிலிருந்த அரசியல் கட்சிகளிடம் மக்கள் வெறுப்புக் கொள்ளச் செய்தது. அதே சமயம் நாஜிக் கட்சிக்கு மக்களிடம் செல்வாக்குப் படிப்படியாக வளர்ந்தது. 1933ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், ஹிட்லர் தமது 44வயது வயதில் ஜெர்மனியில் தலைமை அமைச்சர் (Chancellor) ஆனார்.

வியப்புக்கள் தொடரும்

உ

ஓம் சக்தி சிவமயம்! ஓம் அகத்தீஸ்வராய நம!

**ஞானயோகி. டாக்டர் ப.இசக்கி IBAM,RMP ,DISM**

தமிழ்நாடு, இந்தியா

சித்தர்களின் தெய்வீக சாதன ஜோதிட தியான மையம் ஓம் ஆதி அகஸ்திய மஹாரிஷியின் திருவருளாலும் சித்தர்களின் அனுக்கிரகத்தாலும் ஆன்மீகம், தியானம், மணி, மந்திரம், மருத்துவம் ஜோதிடத்தின் மூலம் எமது 30 ஆண்டு கால அனுபவத்தின் நற்கன்ம வழியில் லோக மேஷத்தின் பொருட்டு மனித வாழ்வில் ஏற்படுகின்ற அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு ஆயுள், ஆரோக்கியத்துடன் ஐஸ்வர்யத்துடன் வாழ அணுகவும்.

1.தியானம்:- தகுதி உள்ளவர்களுக்கு சித்தர்களின் ரகசிய வழியிலான தியான தவயோக காயகல்ப பயிற்சி முறைகளும் மற்றும் எமது தெய்வீக கலைகளும் கற்றுத் தரப்படும்.

2.பாதரச மணி:- நவக்கிரக தோஷம், மனோவியாதி, ஒற்றுமைக்குறைவு, கடன் தொல்லை, மாந்திரீகப்பாதிப்பு, வலிப்புநோய், இயற்கைச் சீற்றங்கள், வாஸ்துகுறைபாடு, ஞாபக சக்தியின்மை, திருமணத்தடை, திடீர் விபத்து, செய்தொழில் நஷ்டம் ஆகியவற்றிலிருந்து தன்னைப் பாதுகாக்கும். மேலும் வியாபார விருத்தி, செல்வச் செழிப்பு முதலியவை ஏற்படவும் தியானம், ஜோதிடம், மந்திரம் இவைகளில் எளிதில் சித்தி அடையவும் அரசு வழக்கு, விவகாரங்கள் தீர்ந்து சகல ஐஸ்வரியத்தையும் தரக்கூடியதாகும். பூஜைக்குரிய பெரிய பாதரச மணிகள் கிடைக்கும்.

3.மந்திரம்:- சகல விதமான தேவதைகளின் மந்திர, எந்திர, தாயத்து சக்கரங்களும் கிடைக்கும். இதை உடம்பில் அணிந்தும் வீடு, மற்றும் தொழில் ஸ்தாபனத்தில் வைத்து பூஜித்து வர சகல காரிய சித்தி உண்டாகும்.

4.இராஜவஷ்ய அஞ்சனம்:- பல தெய்வீக மூலிகைகளால் உருவாக்கப்பட்டது. சகல விதமான இராஜ வசியத்தை உண்டு செய்து சகல காரிய ஜெயத்தையும் ஏற்படுத்தும் அற்புத சக்தி கொண்டதாகும். அருள்வாக்கு சொல்பவர்களும், தியான தேவதாசித்தி செய்பவர்களுக்கும் அற்புதமான நற்பலன் தரக்கூடியதாகும். சகல விதமான நோய்கள் தீர்க்கூடிய நாட்டுமுறை சித்த மருந்துகள் கிடைக்கும்.

5.ஜோதிடம்:-ஜெனன ஜாதகம், பிரசன்னம், பெயரியல், எண்ணியல், எழுத்தியல் வாஸ்து இவற்றின் மூலம் மிகத்துல்லியமான பலாபலன்களை அறிந்து சிறந்த பரிகாரம் செய்து நற்பலனடைய அணுகவும். எமது 30 ஆண்டுகால ஜோதிட அனுபவத்தில் அமெரிக்கா, கனடா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளிலிருந்து பல ஆன்மீகவாதிகளும்,அருள்வாக்குசொல்பவர்களும், தொழில்அதிபர்களும், கலைத்துறையைச் சார்ந்தவர்களும், பொதுப்பிரிவினர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு நற்பலன் அடைந்துள்ளனர்.

சுபமஸ்து!

**Contact:**

Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar , Muligai Nambi , Mani ManthiraV aithiya Jothisa Galagnani

Gnanayohi Dr .p.Esakki, IBAM,RMP , D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur -627759

Thirunelveli District , Tamil Nadu > India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029

Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390, Email:Pramasivan_esakki@yahoo.com

Website;-www.gnanayohi.com Consultation by appointment only


# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

**வணக்கமுங்கோ!**

போனவாரம் கனடாவில இருந்து வந்த நண்பர் ஒருவரைச் சந்திச்ச நான். அவர் யாழ்ப் பாணத்துக்கு அவசரமாகப் போகவேணுமாம். தன்ர தாயிக்குச் சுகமில்லையெண்டு பார்க்க வந்தவராம். பாவம் கனடாவில இருந்து செய்தி கேள்விப்பட்டு ஓடி வந்திட்டார். ஆனால் கொழும்பில இருந்து யாழ்ப்பாணத்துக்குப் போகமுடியாமல், யாரின்ர காலைப்பிடிச்சால் போய் தன்ர தாயைப் பார்க்கலாமெண்டு தெரியாமல் நிக்கிறார். அவரிட்ட கதைச்சதில சில முக்கியமான விசயங்களைத் தெரிஞ்சு கொள்ளுங்கோவன்.

**கா.பூ.** :- எப்ப கனடாவுக்குப் போனியல்.

**நண்பர்** :- போய் பத்து வருஷமாகுது துங்கோ. 1997ஆம் ஆண்டு போனனான்.

**கா.பூ.** :- இப்பதான் முதல் தடவையாக வாறியலோ.

**நண்பர்** :- இல்லையுங்கோ. 2003ஆம் ஆண்டு வந்தனான். அப்பேக்க ஏ-ஒன்பது பாதையால போனனான்.

**கா.பூ.** :- இப்பதான் பாதையால போக முடியாதே, விமானத்தால கூட போகக் கூடிய வாய்ப்பு இல்லையே. நீங்கள் விசாரிச்சுப் பார்க்கயில்லையே.

**நண்பர்** :- விசாரிச்ச நான். பிளேனில போறதெண்டால் எப்பிடியும் ரிக்கட் எடுக்கலாம் எண்டிச்சினம்.

**கா.பூ.** :- எப்படியும் எண்டால்...

**நண்பர்** :- காசு கொஞ்சம் அதிகமாக தன்னும் குடுத்து ரிக்கட் எடுக்கலாம் எண்டிச்சினம்.

**கா.பூ.** :- அப்புடி எடுக்கலாம் தானே...

**நண்பர்** :- அதுவும் ரெண்டுமாசத்துக்கு புக்கிங்காம் எண்டினம். அதுவரைக்கும் போகாமல் இருக்க ஏலுமே; அம்மாவுக்கு கடுமையாச் சுகமில்லையாம். அவா, சாக முன்னம் பார்க்க வேணும் எண்டிட்டுதான் ஓடிவந்தனான்.

**கா.பூ.** :- கப்பலிலையும் உடனடியாகப் பயணம் செய்யமுடியாதே. என்ன செய்யப் போறீங்க.

**நண்பர்** :- பிளீஸ், கையை விட்டுப் போடாதேங்கோ ஏதும் உதவி செய்யுங்கோ.

**கா.பூ.** :- உதவியெண்டால், மருந்துகளை ஏயர்போஸ் பிலேனில குடுத்துவிட்டால் மருசு ஒப்பிசல கிடைக்கும். அங்க யாராச்சும் வந்து எடுத்துக் கொண்டு போகலாம் உங்களை எப்பிடி அனுப்புறது.

**நண்பர்** :- அப்படிச் சொல்லாதேங்கோ... எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை யுங்கோ. என்ர அம்மாவை சாகமுன்னம் பார்க்கவேணும்.

**கா.பூ.** :- காசெல்லாம் வேண்டாம், அதுக்குச் செய்திறவை யாரும் இருப்பினம். அவையைளைத் தான் பார்க்க வேணும். ஒரு மனிதத்தன்மையோட உங்களுக்கு உதவுறது எப்பிடி எண்டு தான் யோசிச்சிக் கொண்டு இருக்கிறன்.

**நண்பன்** :- மன்னிச்சுக் கொள்ளுங்கோ... என்ர அவசரத்தில அப்புடிக் கதைச்சுப் போட்டன்.

**கா.பூ.** :- சரி...சரி...நீங்கள் மட்டுமில்ல எங்கட சனம் எல்லாரும் அப்படித்தான் தங்கட அவசரம், காரியம் முடிய வேணும் எண்டுக்காக காசாலை விளையாடிப் போடுவினம். பிறகு ஏழை எளிய சனம் கஷ்டப்படுங்கள். சில பேர் காசு வேண்டிக்கொண்டு உதவி செய்திறதையே தொழிலாகச் செய்து கொண்டு பாவக்காசு வாங்கிக் கொண்டு திரியினம் எண்டிட்டு, இன்னொரு நண்பருக்கு கோல் பண்ணிக் கேட்டனுங்கோ. அவர் சொன்னார், சிவில் விமானத்தில் போறதுக்காக ரிக்கட் வாங்கிய ஒருவரிட்ட இருந்து ரிக்கட்டை வாங்கலாமாம். ஆனால் 20000 ரூபாவுக்கு மேலதிகமாக 20000 ரூபாவை போட்டு 40000 ரூபா தந்தால் சரியாம் எண்டார். உப்பிடிச் சொல்லுறார் உங்களுக்கு உது சரிவருமோ எண்டு கேட்டன்.

கனடா நண்பர் காசை ஒரு பொருட்டாக எடுத்தவர் போல் தெரியவில்லை. அவருக்கு தாயைப் பார்க்க வேணும் எண்டதுதான் பிரச்சினை. யாழ்.போற ரிக்கட்டுக்காக 50000 ரூபாவைக் கொடுத்து அந்த ரிக்கட்டை வாங்கிக் கொண்டார். உப்பிடி நடந்தது ஒண்டும் பிஸினஸ் இல்லையுங்கோ. உவரின்ர அவசரத்துக்காகவும், என்ர நண்பரின்ர கோரிக்கைக்காகவும் நடந்த விஷயமுங்கோ.

உதில இருந்து ஒரே ஒரு சின்ன விஷயம் மட்டும் தெரியுதுங்கோ. எங்கட சனம் வீதியாலை போகேக்க நெருக்கடிகளையும் தாமதத்தையும் தவிர்த்துப் போறதுக்காக, எப்படி பணத்தை வீசியிருப்பினம் எண்டது தானுங்கோ. எல்லோரும் பெரிய காம் பிளக்ஸும், கடைத்தொகுதியும் கட்டி காசு உழைச்சுக் கொண்டிருக்கேக்க, சும்மா தார் போட்ட ரோட்டை வச்சுக்கொண்டு காசு உழைச்ச கெட்டித்தனத்தை என்னண்டுங்கோ சொல்லுறது. எல்லாம் அடிபட்டுப் போய் பாதை முடுப்பட்டதில சனத்துக்கும் கஷ்டம் எண்டது உண்மைதான். ஆனால் வருமானம் அடிபட்டுப் போனதில பெடியளுக்கும் பெரும் நஷ்டமெண்டதை நினைச்சுப் பார்க்கிறனுங்கோ. காலம் போகிற போக்கில யாரும் வீதியை மறைச்சுக் கொண்டு பணம் தாங்கோ எண்டு கேட்டாலும் ஆச்சரியப்பட ஒண்டும் இல்லையுங்கோ. பாய்...பாய்...

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்த வாரம் உங்கள் பலன்

**(22.03.2007 தொடங்கி 28.03.2007 வரை)**

## ஞானயோகி. டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:-** மேஷராசி அன்பர்களே, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் உருவாகும். கலைத்துறையினர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர். உத்தியோகத் துறையினருக்கு மேலதிகாரிகளால் தொல்லைகள் ஏற்படும். செய்யாத குற்றங்களுக்காக அவப் பெயர் ஏற்படலாம். கணவன், மனைவி உறவுகள் பலப்படும். புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். நீர்வளம், நில வனத்துறை சார்ந்தவர்கள் தபால், தந்தித் துறையினர்கள் லாபம் அடைவார்கள். கண்களில் கவனம் தேவை. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும். இராசியான எண்:-2
இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:-மேற்கு
பரிகாரம்:- அம்மன் வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:-** ரிஷபராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் ஏற்படும். புதிய ஆடை, அணிகலன்கள் வாங்குவீர்கள் நண்பர்களிடம் பிரச்சனைகள் ஏற்படும். தொலை தூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மன தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மன நிம்மதி அடைவதுடன் நற்பெயரெடுப்பீர்கள். வீட்டில் ஜாக்கிரதையுடன் இருத்தல் நல்லது. விபரீதமான எண்ணங்களை நினைத்து மனக் குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள். இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-1
இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:-கிழக்கு
பரிகாரம்:- சிவ வழிபாடு செய்து வரவும்.

**மிதுனம்:-** மிதுனராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். வாகனங்களில் எச்சரிக்கையாகப் பயணம் செய்வது நல்லது.முன் கோபம் தவிர்க்கவும். பங்காளிகளால் பொருட்செலவு உண்டாகும். செய்தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யத் திட்டம் போடுவீர்கள். விருந்தினர் வரவால் மன மகிழ்ச்சி உண்டு.பழைய வாகனங்களை விற்பதற்கு வாய்ப்புள்ளது. மனைவியால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். கோவில், குளம், மற்றும் சமுதாய முன்னேற்ற நற்பணிகளில் ஈடுபட்டு நற்பெயரெடுப்பீர்கள். இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-5, இராசியான நிறம்:- பச்சை
இராசியான திசை:-வடக்கு
பரிகாரம்:- மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:-** கடகராசி அன்பர்களே செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். அரசு சம்பந்தமான விஷயங்களில் வெற்றிகிடைக்கும். ரேஸ்,லாட்டரி போன்ற விஷயங்களில் ஏமாற்றம் அடையாதீர்கள். வீடுகளைத் திருத்திக் காட்டுவீர்கள். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். சிறு குழந்தைகளை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளவும். குல தெய்வ வழிபாடு செய்து வரவும். கணவன் - மனைவி உறவுகளில் நல்ல சூழ்நிலை காணப்படும். உத்தியோக முயற்சிகளில் காலதாமதம் ஏற்படலாம். உடல் நோய்க் நல்ல தொரு மருத்துவத் தீர்வுகள் கிடைக்கும். தண்ணீர்,கூல்டிரிங்ஸ் சம்பந்தமான தொழில்களில் நல்ல லாபம் கிடைக்கும். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும். இராசியான எண்:-9
இராசியான நிறம்:- சிகப்பு இராசியான திசை:-தெற்கு
பரிகாரம்:- முருகன் வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:-** சிம்மராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். திடீர் அதிர்ஷ்டம் மூலம் தன வரவு உண்டாகும். வீடு, நிலம் சம்பந்தமான விஷயங்களுக்குப் பொருட்செலவு உண்டாகும். ஆபரேஷன் போன்ற காரியங்களை தள்ளிப் போடுவது நல்லது. உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. பங்காளிகளுடன் புதிய தொழில் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணப்பிரச்சினைகள் ஏற்படலாம். பூர்வீகச் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். தந்தை - மகன் உறவில் பிரச்சினைகள் ஏற்படும். பொது நலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரெடுப்பீர்கள். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-6, இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:- தென்கிழக்கு
பரிகாரம்:- மஹாலஷ்மி வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:-** கன்னிராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வம், செல்வாக்கு, புகழ் கூடும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும. வீடுகளில் கவனமுடன் இருத்தல் நல்லது. சம்பந்தமில்லாத நபர்களால் புதிய பிரச்சினைகள் உருவாகக் கூடும். தீர்த்தயாதிரைகளைத் தள்ளிப் போடவும். உத்தியோகத் துறையினர் மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. மகான்களின் ஆசிகள் கிடைக்கும். பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும். உடம்பில் வாயு, மற்றும் வாத சம்பந்தமான நோய்கள் வந்து நீங்கும். வீண் பொருள் விரையம் ஏற்படலாம். வர வேண்டிய பணம் சிறிது கால தாமதமாகவே கிடைக்கும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும். இராசியான எண்:-5, இராசியான நிறம்:- பச்சை
இராசியான திசை:-வடக்கு
பரிகாரம்:- மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:-** துலாராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரக மாகும். தாயின் உடல் நிலை பாதிப்பால் மருத்துவச் செலவு கள் ஏற்படும். கணவன் - மனைவி உறவு சுமாராகக் காணப்படும். புதிய மனக் குழப்பங்கள் வரவாய்ப்புள்ளது. புதிய தொழில் தொடங்குவதைத் தவிர்த்தல் நல்லது. உடம்பில் இரத்தம் மற்றும் நரம்பு சம்பந்தமான பிணிகள் வந்து போகும். பொழுது போக்கு விஷயங்களில் கவனம் செலுத்துவீர்கள். அரசு சம்பந்தமான வழக்கு விஷயங்களில் கவனம் தேவை. மறை முக எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகளிலிருந்து சில மாற்றங்கள் ஏற்படும். யாத்திரைகளில் நற்பலன் உண்டாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும். இராசியான எண்:-3
இராசியான நிறம்:- மஞ்சள்
இராசியான திசை:-வடகிழக்கு
பரிகாரம்:- தட்சிணாமூர்த்தி வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:-** விருச்சிகராசி அன்பர்களே, செவ்வாய், சனி நன்மை தரும் கிரகமாகும். உறவினர்களால் பொருட்செலவு உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் இல்லை. பூமி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படும். அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. வங்கிகளால் எதிர்பாத்த பணம் கிடைக்கும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. அரசு சம்பந்தமான அலுவலகப் பணிகளில் எதிர்பார்த்த அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவி உறவுகளில் எச்சரிக்கை தேவை. யாத்திரைகளில் புதிய பெரிய மனிதர்கள் தொடர்பு உண்டாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.
இராசியான எண்:-8
இராசியான நிறம்:- நீலம்
இராசியான திசை:-தென்மேற்கு
பரிகாரம்:- ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

**தனுசு:-** தனுசுராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். இணையதளங் கள்,தொலைக்காட்சி நிறுவனத்தி னர்கள், கம்பியூட்டர் சாதன வியாபாரிகள் நற்பலனடைவார்கள். தடைப்பட்ட திருமண காரியங்கள் நிறை வேறும். பெண்களால் ஆதாயம் உண்டு. தாய்வழிச் சொத்துக்கள் கிடைக்கலாம். விஞ்ஞானத்துறை சார்ந்தவர்களின் புதிய ஆராய்ச்சிகளில் நல்ல வெற்றி அடைவீர்கள். ஆலயப்பணிகளில் ஈடுபட வாய்ப்புள்ளது. மூத்த சகோதரருக்கு மருத்துவச் செலவகள் ஏற்படும். உடம்பில் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும். இராசியான எண்:-6,
இராசியான நிறம்:- வெள்ளை
இராசியான திசை:-தென்கிழக்கு
பரிகாரம்:- மஹாலஷ்மி வழிபாடு செய்து வரவும்.


**மகரம்:-** மகரராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். புதிய தொழில் தொடங்க வாய்ப்புள்ளது. நண்பர்களால் ஆதாயம் உண்டாகும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்தப் பிரச்சினைகள் தீர்ந்து சுமுகமான சூழல் உருவாகும். பிள்ளைகளின் உடல் நிலையில் கவனமுடனிருக்கவும். நெருப்பு, பொலிஸ் இராணுவம், மின்சாதனத்துறை சார்ந்தவர்கள் நற்பலனடைவார்கள். உடம்பில் ஜூரம், உஷ்ணம் சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். நீண்டதூர பயணங்களில் எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்களிள் குடும்பத்தில் நடைபெறும். செல்வந்தர்கள் தொடர்பால் நிம்மதி அடைவீர்கள் . இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-9, இராசியான நிறம்:- சிகப்பு
இராசியான திசை:-தெற்கு
பரிகாரம்:- முருகன் வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:-** கும்பராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைக ளுக்கு மருத்துவச் செலவுகள் மேலிடும். உற்றார் மற்றும் உறவினர்களால் ஆதா யம் உண்டாகும். உடம்பில் வாயு சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். இரசாயனத் தொழில் மற்றும் கமிஷன், கன்ஸ்டிரக்ஸன் தொழில் செய்வோர்கள் லாபம் அடைவர். உத்தியோகம் இல்லாதவர் களுக்குப் புதிய முயற்சிகள் மூலம் உத்தியோகம் கிடைக்கும். பூ, பழம், நறுமணப் பொருட்கள், பூசை சாதன வியாபாரிகள் நற்பலன் அடைவார்கள். உடம்பில் மேகம் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-3
இராசியான நிறம்:- மஞ்சள்
இராசியான திசை:- வடகிழக்கு
பரிகாரம்:- சிவ வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:-** மீனராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கும். வங்கிகள் மூலம் ஆதாயம் அடைவீர்கள். புதிய தொழில் தொடங்கலாம். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரும். யாத்திரைகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். புதிய வீடு வாங்குவீர்கள். தாய் மாமன் வழியில் சில சுப காரியங்கள் நடக்கும். குடும்பத்தில் சிற்சில சச்சரவுகள் வந்து நீங்கும். வீட்டை அலங்காரம் செய்வீர்கள். அரசு சம்பந்தமான காரியங்களில் வெற்றி கிடைக்கும். தாய்வழிச் சொத்துக்கள் கிடைக்கும். தந்தை - மகன் உறவுகளில் கவனம் தேவை. நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-8
இராசியான நிறம்:- நீலம்
இராசியான திசை:-தென்மேற்கு
பரிகாரம்:- சனீஸ்வர வழிபாடு செய்து வரவும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2007)

# ஆடுகளம்




கனவுத் தொழிற்சாலையாக இருந்தாலும் பெரும் முதலீடுகளைக் கொண்ட தொழிற்துறையாக சினிமாத்துறை இருக்கின்றது. இந்தியாவில் மாத்திரமல்ல, ஹொலிவுட் சினிமாத் துறையும் முன்னோடித் தொழிலமைப்பு முறையாக இருக்கின்றது. கதைக்காக சினிமா என்ற நிலைமாறி, கதாநாயகர்களுக்காக என்றாகி விட்டது. நடிகைகள் கவர்ச்சியை மாத்திரமே நம்பியிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்த எதார்த்தத்தைக் கூறும் "பாக்டரி கேள்" எனும் ஹொலிவுட் திரைப்படத் தொடக்க விழா லண்டனில் நடைபெற்றது. அதில் பிரபல மொடல் அழகி மெரிரித் ஒஸ்ட்ரம் அந் நிகழ்ச்சிக்கு வருகை தந்த போது.





ஒன்பதாவது கிரிக்கெட் உலகக் கிண்ணத்துக்கான போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளின் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்திய அணி, இச்சுற்றின் முதற் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்த்து மார்ச் 17இல் விளையாடியது. உலகக் கோப்பையை இந்திய அணி கைப்பற்றவேண்டும் என்பதற்காக ரசிகர்கள் பலவிதமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கின்றனர். இங்கே படத்தில் பிரமாண்ட வடிவில் தயாரிக்கப்பட்டிருக்கும் கிரிக்கெட் பந்தை, இந்திய அணியை உற்சாகப்படுத்தவும் வரவேற்கவுமாகத் தயாரித்துள்ளனர். மும்பையில் வைக்கப்பட்டுள்ள இப்பந்தை முன்னாள் அணித் தலைவர் சிறீகாந்த் பார்வையிடும் காட்சி.







தென்னாபிரிக்க காடுகளில் வாழ்ந்து வரும் பல அபூர்வ உயிரினங்கள், பூமியின் தட்ப வெட்ப மாற்றம் காரணமாக அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. பார்ப்பதற்கு மலைப்பாம்பு போல் தெரியும் இந்த அபூர்வ சிறுத்தைப் புலி இனமும் அழிந்து வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்காக உலக நாடுகளிடமிருந்து பெருந் தொகை நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவேண்டுமென அரிய உயிரினங்களைப் பாதுகாக்கும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.




இது மகளிருக்கென்றே அர்ப்பணிப்பான பாதுகாப்பு
NSB
ஸ்திரீ

எனது ஆசை சேமிப்பதாகும்...

புதிதாக ஸ்திரீ சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் அல்லது ஸ்திரீ கணக்கில் அதிகமாக பணம் செய்யும் உங்களுக்கு இந்த மாதம் முழுவதும் பல வரப்பிரசாதங்கள் காத்துக்கிடக்கின்றது.

- ரூபா. 5,000/- லிருந்து ரூபா. 25,000/- வரையிலான தனிப்பட்ட கடன் வசதி
- மிஹிந்து செவன வீடமைப்பு கடன்
- ஸ்திரீ கணக்கு வைத்திருக்கும் தாய்மார்களின் 7 வயதுக்கு (மார்ச் மாதத்திற்கு) குறைந்த பிள்ளைகளுக்கு ரூபா.100 வைப்பிலிடப்பட்ட இலவச ஹப்பன் கணக்கு
- இந்த மாதம் பந்தத்தில் இணையும் மகளிருக்கு 1,000/- மதிப்புள்ள ரிதீ ரேகா சேமிப்பு சான்றிதழ்
- இந்த மாதத்தினுள் பிறக்கும் குழந்தைகளுக்கு ரூபா.200/- வீதம் வைப்பிலிடப்பட்ட இலவச ஹப்பன் கணக்கு
- புதிய ஸ்திரீ கணக்கு உரிமையாளர்களுக்கு NSB NET ATM காட் இலவசம்
- சிறப்பான முறையில் ஸ்தரீ கணக்கை நடாத்தி செல்லும் மகளிருக்கு 1% குறைந்த வட்டிக்கு ரூபா. 100,000 வரையிலான தனிப்பட்ட கடன்
- ஸ்திரீ கணக்கு உரிமையாளர்களுக்கு ரூபா ஒரு மில்லியன் வரை மதிப்புள்ள இலவச ஆயுள் காப்பீடு
- ரன் சஹான அடகு சேவையின் கீழ் ஸ்திரீ கணக்கு உரிமையாளர்களுக்கு 1% வரை குறைக்கப்பட்ட வட்டி
- வருடம் முழுவதும் தொடர்ச்சியாக 10,000 ற்கு குறையாத மீதியை வைத்திருக்கும் ஸ்திரீ கணக்கு உரிமையாளர்களுக்கு 1% மேலதிக போனஸ் வட்டி

தொடர்ச்சியாக 4வது முறையாகவும் AAA(lka) தரப்படுத்தலினால் கௌரவிக்கப்பட்ட ஒரேயொரு தேசிய வங்கி

தேசிய சேமிப்பு வங்கி NSB